# தேவாமிர்தம்

# 50



## தேவா பொன்விழாச் சபை

10 பங்குனி 2001

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேவாமிர்தம்

## பொன்விழா மலர்

யாழ் பல்கலைக்கழக, வணிகத்துறைத் தலைவர்

**உயர்திரு க. தேவராஜா**

அவர்களின்

பொன்விழாச் சபை

இணுவில், யாழ்ப்பாணம்.

2001

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேவாமிர்தம்
# பொன்விழா மலர்

50

யாழ். பல்கலைக்கழக வணிகத்துறைத் தலைவர்
உயர்திரு க. தேவராஜா அவர்களின்
பொன்விழாச் சபை, யாழ்ப்பாணம்.

**2001**

**ஞான. திருக்கேதீஸ்வரன்**
*(மலராசிரியர்)*

'என் கடன் பணி செய்து கிடப்பதே'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| ♣ மலரின் பெயர் | : | தேவாமிர்தம் |
| ♣ வெளியிடும் அமைப்பு | : | தேவா பொன்விழாச் சபை |
| ♣ முகவரி | : | இணுவில், யாழ்ப்பாணம். |
| ♣ மலராசிரியர் | : | திரு ஞான. திருக்கேதீஸ்வரன் |
| ♣ பதிப்பு | : | முதலாவது – 2001, மார்ச். |
| ♣ அச்சுப் பதிப்பு | : | கங்கை ஓ(f)செற் பிறின்டேஸ்<br>(பிறவுண் வீதிக்கு அருகாமையில்)<br>நாவலர் றோட், யாழ். |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ்ப்பாண பல்கலைக்கழக வணிகத் துறையின் கடமையில் ஈடுபட்டிருத்தல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தேவகுணம் படைத்த சிறந்த நல்லாசான்
ஆவல்மீதூர அன்பு அகத்தூர பொன்விழாவின்
தேவைமிக உணர்ந்து செய்யும் பாராட்டு
சேவைக்கு அளிக்கும் திருப்தி விழாவாகும்

நயினைக் கவிஞர்
நா. க. சண்முகநாதபிள்ளை
தேவா பொன்விழாச் சபை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீ பரராசசேகரப் பிள்ளையார் துணை

**யாழ் பல்கலைக்கழக வணிகவியற்றுறைத் தலைவரும், இணுவில் லயன்ஸ் கழகத்தலைவரும், தலைசிறந்த வணிகவியல் நிபுணரும், சமூக சேவையாளருமாகிய**

# திரு. கந்தையா தேவராசா

*அவர்களின் பொன்விழாவின்போது பொன்விழாச் சபையார், அன்னாரது கல்விப்பணி, கலைப்பணி, தெய்வப்பணி, சமூகப்பணி ஆகிய தொண்டுகளைப் பாராட்டி மனமுவந்து வாழ்த்தி வழங்கிய*

# வாழ்த்துப் பா

சீருலவும் கல்விகலை சீலம் ஓங்கும்
செழுமிணுவைப் பரராஜ சேக ரன்தாள்
பாருலகில் தாவடிவாழ் கந்தை யாவும்
பத்தினியாள் அன்னம்மா தொழுது பெற்ற
ஊருலகம், புகழ்தேவ ராசா என்னும்
உத்தமன், வணிகவியல் கற்றுத் தேர்ந்தே
சாருமெழில் யாழ்பல்க லைக்க ழகம்
சேர்வணிக வியற்றுறையின் தலைவ னானான்.

வணிகவியல் மேதையான தேவ ராசா
வாரணனாம் பரராச சேக ரனை
அணிமலரால் அநுதினமும் பூஜை செய்தான்
அருள்சொரிந்தான் பரராஜ சேக ரனும்
வணிகவியற் றுறையியலின் தலைவ னாக
வளம்பெறவே தேவராசா சேவை செய்தான்
பணிகளினால் பலர்வாழ வைத்தான் அண்ணல்
பல்லாண்டு தேவராசா வாழி!

எல்லோரும் வாழவேண்டும் என்ற எண்ணம்
எழிலான இதயத்தில் சுரந்து தோன்றும்
நல்லோர்கள் வாழிசொலும் தேவராசா
நற்பண்பு புன்னகையில் மலர்ந்து தோன்றும்
வல்லோனாம் தேவராசா வாழ்க்கை யிலே
வளமார்ந்த சமுதாய சேவை தோன்றும்
பல்லோரும் வாழ்த்திடவே தேவ ராசாப்
பண்பாளன் பல்லாண்டு வாழி ! வாழி !

எண்ணற்ற சேவைகளை செய்தான் செம்மல்
எழிலான வணிகவியல் மாண வரை
அண்ணலவன் உருவாக்கிக் கல்வி வளம்
அணியிணுவைச் சரித்திரத்தில் நிலைக்கவைத்தான்
கண்ணற்ற மாந்தருக்குக் கண்கள் பார்வை
கனிந்தளிக்கும் லயன்ஸ்கழக உறுப்பினராய்
வண்ணஇணு வைக்கிளையின் தலைவ னான
வண்மைமிகு தேவராசா வாழி! வாழி !!

மங்கையவன் லக்ஷ்மியெனும் கட்ட ழகி
மனமுவந்து தேவராசா கரம்பி டித்தாள்
மங்கலநாண் சூட்டினனே தேவ ராசா
மதலைவரம் பெற்றனரே தம்ப திகள்
எங்கணுமே எல்லோரும் வாழ வேண்டும்
எனுமெண்ணம் கொள்தேவ ராசா லக்ஷ்மி
மங்களப் பொன் விழாத் தம்ப திகள்
மாதங்கள் அருளாலே நீடு வாழி!


"சுபம்"

ஆக்கம் :
கலாரத்னா "கலாபூஷணம் மஹாவித்துவான்"
ந. வீரமணி ஐயர் M.A.J.P. யாழ்ப்பாணம்
(இணுவில்)

*இங்ஙனம்*
*தேவா பொன்விழாச் சபையார்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொன் விழா நாயகருடன் அவரது துணைவியார்



"வாழ்க வளமுடன்"

வணிகத் துறைத் தலைவர் உயர்திரு தேவராஜா அவர்களின்

பொன்விழாச் சபை

2001

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்

## ஆசியுரை


பல வளர்ச்சிகளைக் கண்டு பல்லாண்டு காலம் வாழ்க 01
ஆசியுரை 02
பொன்விழாக் காணும் உயர்திரு க. தேவராஜா அவர்களுக்கு வாழ்த்துரை 03
தலைவரின் வாழ்த்துச் செய்தி 04
மலராசிரியரின் இதயத்திலிருந்து 05


## வாழ்த்துரை


சமூகப்பணி, கல்விப்பணி சிறக்க வாழ்க 06
பொன்னாண்டு மணியாண்டு பவள ஆண்டு என்றெல்லாம் பல ஆண்டு காண வாழ்த்துகின்றோம் 07
நான் கண்ட தேவா 08
பழகுவதற்கு இனிய தேவா 09
என்றும் வாழ்க 10
பல்கலைக்கழகப் பணியும் சமூகப் பணியும் தொடர வாழ்த்துகிறேன் 11
நீடு வாழ்ந்து நிறைவு பெறவேண்டுமென அகமகிழ்வுடன் வாழ்த்துகிறேன் 12
உன்னை நண்பனாய் பெற்றநாம் பேறுடையோம் 13
நண்பனொருவன் நெஞ்சத்திலிருந்த பதிவுகள் 14
வாழ்த்துரை 15
ஈர நெஞ்சுடைய இனிய மனிதர் 16
Message for the 50th Birthday Aniversary 18
Message from Lion Dr.V.Thiyagarajah region chairman region IX Dist. 306B. Lions Clubs International 19
பொன்விழா நாயகன் தேவா 20
நலமாண்டு பல்லாண்டு வாழ்க நீடு 21
வாழ்த்துரை 22
யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அதிபர் திரு க.இராசதுரை அவர்களின் வாழ்த்துச் செய்தி 23
எல்லாச் சிறப்பும் பெற்று பல்லாண்டு வாழ்க 24
எம் இதய தடாகத்தில் என்றும் வாடாத மலராக வண்ணமுற வீற்றிருக்க வாழ்த்துகிறோம் 25
பல்லாண்டு வாழ்ந்து பணிகள் பல புரிக 26
வாழ்க வளமுடன் பல்லாண்டு 27
பொன்விழா நாயகரின் பணி தொடர வாழ்த்துகின்றேன் 28
கடமை வீரன் 29
பல்லாண்டு காலம் வாழ பரராஜசேகரப்பிள்ளையார் பாதம் பணிந்தோம் 30
நினதே எங்களின் உயர்வு 31
மனித நேயமிக்க சமூக சேவையாளன் 32


## கட்டுரைகள்


தேவாவின் சமூகப்பார்வை 33
சிரித்த முகமும் செய்யும் அவாவும் 35
தலைமைத்துவத்திற்கான அவதார புருஷர் 36
ஒரு மாணவியின் பார்வையில் தேவா..... 39
யா / தாவடி இந்துத் தமிழ்க் கலவன் பாடசாலையின் வளர்ச்சிக்கு 40
பொன்விழாக் காணும் தேவா என்னும் சேவையாளன் 41
இது அறிமுகமல்ல 42
தேவாவைப் பற்றிய சில வார்த்தைகள் 46
பொன்விழாக் காணும் நலங்கள் பொழிந்த சான்றோன் 48
பண்புடையார் பட்டுண்டுப் உலகம் 50



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூகத்தில் ஒரு தென்றல் 53
எல்லார்க்கும் இனியார் 55
தன்னலங்கருதாப் பெருந்தகை 56
ஐயா அவர்களைப் பற்றி ஒரு நோக்கு 57
நான் கண்ட தேவா 58
உள்ளத்தால் உயர்ந்த உத்தமர் 60

**சமய சமூக நிறுவனங்களின் செய்திகள்**

திரு தங்கராசா அவர்களின் செய்தி 62
நீடூழி வாழ்க 63
பெருமைக்கும் நுண்மைக்கும் பேரருட்கும் பேற்றின் அருமைக்கும் ஒப்பின்மையான் 64
பண்புக்கு இலக்கணமானவர் 65
இணுவில் சைவ திருநெறிக் கழகத்தின் செய்தி 66
எப்போதும் உதவிசெய் - ஒருவருக்கும் தீங்கிழையாதே - பாபா 67
இன்று அவர் பல்கலைக்கழகத்தின் துறைத் தலைவர் ஆனாலும் என்றும் .... எங்களுக்கு தேவாதான் 68
யா / தாவடி இந்துத் தமிழ்க் கலவன் பாடசாலையின் வளர்ச்சியில் 70
சமூக நலனுக்காக உழைக்கும் சமத்துவவாதி 72

**கவிதைத் தடாகம்**

பொன்விழாத் தேரேறும் தேவனே வாழி 73
பல்லாண்டு வாழி 74
பொன்னுக்கு ஒரு பொன்விழா 75
பொன்மனைச் செம்மல் புகழோடு வாழி 77
இன்றுயர் மணிநாள் கண்டீர் 78
தேவா என்னும் தேன் துளிகள் 79
மாண்புகள் ஆயிரம் பெருக்கி வாழ்க 80

**வெளிநாட்டிலிருந்து**

புதுப் பொலிவுடன் மிகக் குவிப்போம் 81
தேவாவுக்கோர் நே(தே)சக் கடிதம் 82
ஊருக்கொரு உத்தமன் 83
தனியார் கல்வி நிறுவன மாணவனின் நினைவலைகள் 85
என் குருவின் பெருமை கண்டு பூரிக்கிறேன் 88
பொன்விழா வாழ்த்துமடல் 89

**அறிவுசார் மூலதனம்** 91

**விழா நாயகரின் நூல்களும் கட்டுரைகளும்** 98

**விழா நாயகரின் சுயவிபரம்** 100

**நெஞ்சிருக்கும் வரை** 101

**தேவா பொன்விழாச் சபையின் நிறைவுரையாக** 102

**நிகழ்ச்சி நிரல்** 103

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பல வளர்ச்சிகளைக் கண்டு பல்லாண்டு காலம் வாழ்க

அன்புசார் பெருந்தகையீர்,

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வர்த்தகத் துறைத் தலைவர் திரு. க. தேவராஜா அவர்கட்கு 50வது வயது பொன்விழா காண்பதையிட்டு மனமகிழ்வு அடைகின்றோம். பார்ப்பதற்கு எளிமையானவரும் பழகுவதற்கு இனிமையான வரும் எடுத்துக்கொண்ட காரியத்தை செவ்வனே ஆற்றும் ஆற்றல் படைத்தவர். தான் வாழ்வதோடு மற்றவர்களையும் வாழ வழிசமைத்து கொடுக்கின்றவர் திரு. க.தேவராஜா. பல்கலைக்கழக வர்த்தகத் துறைத் தலைவராக இருந்து நன் மாணாக்கரை உருவாக்கித் தருகின்ற பணியிலே தனை ஈடுபடுத்தி சேவை செய்வது கல்வியாளர்கட்கு மட்டுமன்றி ஏனையவர்களும்கும் நல்விருந்தாக அமைந்துள்ளது. அரிய பிறவியாகிய மானிடப் பிறவியை பெற்றுநாம் வாழும் காலத்தில் ஏனையோருக்கும் பயனுள்ள வாழ்வாக அமைத்து கொள்வதே தர்மமாகும். இந்நிலையில் நின்று வாழும் மனிதர்களை இந்நாடு போற்றத் தயங்குவதில்லை. இந்நிலையை உணர்ந்து வாழ்வதே வாழ்வாகும். திரு. தேவராஜா அவர்கள் பல வளர்ச்சிகளைக் கண்டு பல்லாண்டு காலம் வாழ இறைவனை வேண்டு கின்றேன். தேவா பொன்விழா சபையினரை வாழ்த்துகின்றோம்.

'என்றும் வேண்டும் இன்ப அன்பு'

2 வது குரு சந்நிதானம்.
ஸ்ரீஸ்ரீ தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆசியுரை

யாழ் பல்கலைக்கழக வணிகத்துறைத் தலைவர் திரு க.தேவராஜா அவர்களுக்குப் பெரியவிழா ஒன்றினை எடுப்பதற்குப் பல துறைகளிலும் உள்ள பெரியோர்கள் தீர்மானித்துச் செயற்பட்டு வருகின்றார் கள். இது ஒரு நல்ல ஏற்பாடு. ஒரு தகுதி வாய்ந்தவரும், சிறந்த கல்விமானும் நல்லொழுக்கம் மிக்கவரும், நற்பண்புகள் சிறந்து நிறைந்து காணப்படுபவரும், சமூகத் தொண்டரும் இறை நம்பிக்கையிலே மிகுந்த நம்பிக்கையுடையவருமான திரு க.தேவராஜா அவர்களுக்கு காலத்தே நடைபெறும் விழாவாகும். எனவே, அன்னாருக்கு இன்னும் பல விழாக்களை எடுக்க எல்லாம்வல்ல விநாயகப் பெருமான் எல்லா வளங்களையும் நீண்ட ஆயுளையும் வழங்க வேண்டுகின்றேன்.


வை. சோமாஸ்கந்தக்குருக்கள்,
பிரதம குரு,
ஸ்ரீ பரராஜசேகரப் பிள்ளையார் கோயில்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொன்விழாக் காணும் உயர்திரு க. தேவராஜா அவர்களுக்கு வாழ்த்துரை

யாழ் பல்கலைக்கழக வர்த்தகத்துறைத் தலைவர் உயர்திரு.க.தேவராஜா அவர்களுக்கு 50வயது பூர்த்தியடைகின்றது. ஆனால் என்றைக்கும் அவர் இளைஞராகவே காட்சி தருகிறார். ஆவருடைய மாறாத புன்சிரிபபு என்றைக்கும் ஒரு பொன் சிரிப்பாகவே அமைந்து விளங்குகின்றது. இதனைக் கடந்த பத்து ஆண்டுகளுக்கு மேலாக நான் அறிந்து கொண்டேன். கல்வி உள்ளம் படைத்தவர்களுக்கு என்றும் மாறாத இன்முகம் தான். அவர்களின் உள்ளம் கல்வியால் அலங்கரிக்கப்பட்டது போன்று முகத்திலும் அந்தப் பிரதிபலிப்பைக் காணலாம். அது மாத்திரமல்ல, பேச்சும் அப்படித்தான். அவருடைய பேச்சு ஒரு தனிப்பாணி. கேட்கக் கேட்கத் தெவிட்டாது. இன்னும் பேசாரோ என்று நாம் எதிர்பார்த்து நிற்கும் சமயத்தில் பேச்சு நிறைவு பெற்றுவிடும். இது பல இடங்களில் நான் கண்ட அனுபவமாகும்.

தாவடியைப் பிறப்பிடமாகவும் இணுவிலை புக்கிடமாகவும் கொண்ட உயர்திரு. க. தேவராஜா அவர்கள் ஊர்ப்பற்றும், பெரியவர்கள் நட்பும், அறிஞர்களின் பாராட்டும், கல்வி உலகின் நன் மதிப்பும் நிரம்பப்பெற்றவர். இதனால் எத்தனையோ சங்கங்களிலே பங்குகொண்டு பணியாற்றிவருகிறார். கற்பிக்கும் திறன் இவருக்குக் கைவந்ததொன்று. இதனால் மாணவர்களின் நன்மதிப்பைப் பெற்று வருகிறார். இப் பெரியாரின் குடும்ப நலனுக்கும் கல்வி உயர்வுக்கும் காரணமாய் அமைந்தது. இவர் மேற்கொண்டிருக்கும் கடவுள் நம்பிக்கையாகும். இணுவில் வாழ் மக்களுக்கு இது தனித்துவமான ஒரு பண்பு. இதனால் அவர்கள் உலகின் எல்லாத் திசைகளிலும் பேர் புகழோடு வாழுகின்றார்கள். ஆலயங்களை மதிக்கின்றார்கள். அறப்பணிகளுக்கு அள்ளி அள்ளிக் கொடுக்கின்றார்கள். கற்றாரை மதிக்கின்றார்கள். கண்ணியமாக வாழுகிறார்கள், அன்பர் தேவராஜா அவர்களின் சீரிய வாழ்வும் இதற்கொரு எடுத்துக்காட்டு எனலாம்.

எனவே, பொன்விழாக்காணும் இப் பெரியாரை வாழ்த்தி ஆசி கூறுவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன். 'அறிவுடையார் எல்லாம் உடையார்' என்ற குறட்பாவுக்கு ஏற்ப சகல பேறுகளும் பெற்று இவரும் இவரது குடும்பமும் வாழவேண்டும் என்று மீண்டும் மீண்டும் வாழ்த்தி அமைகின்றேன்.

கலாநிதி . செல்வி. தங்கம்மா அப்பாக்குட்டி,
சமாதான நீதிபதி,
தலைவர்,
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,
தெல்லிப்பழை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தலைவரின் வாழ்த்துச் செய்தி

பலருக்கும் அகவை அறுபதை அடையும் போது மணிவிழா எடுப்பதனை அறிவோம். ஆனாலும் பொன்விழா என்று வரும்போது அப்படியாவது யாருக்காவது நடந்ததா என்று சிந்திக்கவைக்கிறது.

தேவாவிற்கு பொன்விழா எடுக்கவேண்டும் என எனது இரு மாணவர்கள் வந்து கூறியதும் மேற்கூறப்பட்ட எண்ணங்கள் எனது மனத்தில் உதித்தன. சந்தேகங்கள் எழுந்தன. இருந்தபோதிலும் தேவா இதற்குத் தகுதியானவர் தான் என்பதனை என் உள்ளம் உணர்த்தியதும் ஒரு பொதுக்கூட்டத்தினைக் கூட்டி முக்கியமாக இணுவில் வாழ் மக்களின் அபிப்பிராயத்தினைப் பெற்று ஒரு முடிவு எடுப்போமெனக் கூறினேன்.

ஆலோசனைக் கூட்டம் தேவா கொழும்பில் நின்ற வேளையாக இணுவில் இந்துக் கல்லூரியில் நடைபெற்ற பொழுது மண்டபம் நிரம்ப மக்கள் திரண்டிருந்ததையும், அவர்கள் உற்சாகத்துடன் விழா எடுக்க வேண்டுமென்ற கோரிக்கையினை முன்வைத்ததும் அவர்கள் தேவாவின்பால் வைத்திருந்த அன்பினையும் மரியாதையினையும் காணக்கூடியதாக இருந்தது. மேலும் அவர்கள் ஒவ்வொருவரும் ஏதோ ஒரு நன்றிக் கடனைத் தீர்ப்பதற்கு ஆவலாக இருந்ததாகவும் எனது மனதில் தோன்றியது. எனவே தேவாவுக்கு பொன்விழா எடுக்கவேண்டும் என்ற எண்ணக்கரு எல்லோரது உள்மனதிலும் தன்னியல்பாக உதிர்த்து அன்று வெளித்தோன்றி வடிவமைப்புக் கொடுக்கப்பட்டது.

இப்படியான ஒரு விழாவினை எடுப்பதற்கு தூண்டுதலாக இருந்தது விசேடமாக அவரிடம் காணப்பட்ட சில பண்புகளாக இருக்கலாம். எந்த நெருக்கடியான வேளையிலும் மனம் சளைக்காது, சினக்காது சிரித்த முகத்துடன் பதில்கூறும் பண்பு எல்லோருக்கும் கிடைக்காது. சலிக்காது நலிந்தோருக்கு உதவும் பண்பாளன் தான் தேவா. சமூக நிகழ்வுகளில் முன்னின்று உழைப்பவர், உதவி கேட்போருக்கு, சிறுவர் பெரியவர் என்று பார்க்காது, தன்னாலியன்றவற்றைச் செய்யும் மனதுள்ளவர். தனக்கென்று ஒரு அந்தஸ்துண்டு என்பதனை என்றும் பெரிதாக எடுக்காமல் பாமரமக்கள் முதல் சமூக அந்தஸ்துள்ளோர் வரை எல்லோருடனும் ஒரேமாதிரியாகப் பழகும் குணாளன், அவர் என்றுமே தனது பதவி அதிகாரத்தனைப் பயன்படுத்தியதாக அறியவில்லை.

இப்பண்புகளை அனைவரையும் அவர்பால் ஈர்க்கின்றன. குறிப்பாக இணுவையம்பதி மக்கள் அவர்மீது அன்பும் மதிப்பும் வைத்திருத்தல் கண்கூடு.

மொத்தத்தில் இவ்விழா தேவாவிற்கு எமது அன்பினையும் அவரின்மீது நாம் வைத்திருக்கும் மரியாதையையும் அவருடைய நற்பண்புகளினையம் வெளிக்கொணர் ஒரு சந்தர்ப்பமாக அமைகின்றது. அந்தவகையிலே எனது சிறிய பங்களிப்பினையும் செய்வதற்குக் கிடைத்த சந்தர்ப்பமாகக் கொண்டு மகிழ்ச்சியடைகின்றேன்.

தேவாவும் அவரது குடும்பமும் சீருடனும் சிறப்புடனும் நீடுழி வாழ்க வாழ்த்துகின்றேன்.

அ.பஞ்சலிங்கம்
தலைவர்
தேவா பொன்விழாச்சபை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலராசிரியரின் இதயத்திலிருந்து



நல்லாரைக் காண்பதும் நன்றே, நல்லார் சொற் கேட்பதுவும் நன்றே, நல்லாரோடு இணங்கி இருப்பதுவும் நன்றே, நலமிக்க நல்லார் குணங்கள் உரைப்பதுவும் நன்றே என்பர். நற்றமிழ்வல்லோர். கல்வித்துறையிலே செல்வப்புலத்திலே, சமூகச் செயற் பாடுகளிலே, நல்லவர்கள் பலர் இருக்கின்றார்கள். இவர்கள் தங்கள் தங்கள் சொந்த அலுவல்களுக்கு அப்பால் சென்று, மெய்வருத்தம் பாராது கண்துஞ்சாது எவ்வெவர் தீமையும் கருதாது தன்நலமறுப்போடு பொதுப்பணி யில் ஈடுபட்டு உழைக்கிறார்கள் இவர்களை வாழ்த்தி வளமூட்ட வேண்டியது சமூகத்தில் உள்ளவர்களின் பொறுப்பு என்பதில் இருவேறு கருத்துக்களுக்கு இடமே இல்லை.

இவர்களை வாழ்த்துவது வாழ்த்துபவர்களுக்கே பெருமைகளைச் சேர்க்கும். வாழ்த்தைப் பெறுபவர் மேன் மேலும் உற்சாகமடைந்து மேலும் மேலும் சமூகப் பணியியில் முனைந்து நின்று நற்பணியாற்றுகின்றனர். வாழ்த்திய சமூகத்தினரே இதனால் பயன் பெறுகின்றனர்.

இந்த வகையில் வணிகத்துறைத்தலைவர் அவர்கள் கல்வியல் துறையில் மட்டமல்லாது, சமூகத்துறையின் பல பிரிவுகளிலும் தன்னை அர்ப்பணித்து இருதசாப்த காலமாகச் சேவையாற்றி வருகின்றார் என்பதை இந்தமலரூடாக நீங்கள் அறிந்து கொள்ளுவீர்கள். அவரின் சேவைகளை அறிந்தவர்கள் ஆசிகள் கூறியும், வாழ்த்துக்கள் வழங்கியும், கவிதைகள், கட்டுரைகள் எழுதியும், இம்மலருக்கு அணி செய்துள்ளீர்கள். இவற்றைவிட விழாவை சிறப்புறச் செய்வதற்கான செலவுகளை மனமுவந்து பொறுப் பேற்றுள்ளீர்கள். அன்றியும் பலநாட்களாக பொன்விழா நன்றாக அமைய வேண்டு மென்பதற்காக நல்ல ஆலோசனைகள் வழங்கியும், விழா ஏற்பாடுகளை தங்கள் தங்கள் சொந்தக்கருமமாக எண்ணியும் தோழோடு தோழ் நின்று உதவியும் ஆக்கமும் ஊக்கமும் தந்துள்ளீர்கள்.

மலர் வெளியீட்டிற்கான முயற்சியில், எழுத்துப் பிழைகளைத் திருத்தியும், மலர் அமைப்பிற்கான நல்ல ஆலோசனைகளை வழங்கியும், கொழும்புவரை சென்று சிலவற்றைப் பதிப்பித்தும் இங்கு நடை பெற்ற மலராக்கப் பணிக்குக் கைகொடுத்தும் மனமொன்றித் தனமெல்லாம் பாடுபட்டுள்ளீர்கள். மலர் வெளியீட்டு நிகழ்வில் கலந்து கெண்டு மலர் மணம் பரப்பவும், நுகரவும் உள்ளன்போடு உதவியுள்ளீர்கள்.

எல்லாமே ஓரு நல்ல மனிதரை வாழ்த்தவேண்டுமென்று கொண்ட நல்லெண்ணத் தின் வெளிப்பாடாகவே நாம் கருதுகின்றோம். துன்பமும் துயரமும் நிறைந்த சூழல் என்றாலும், காலத்தினால் செய்யப்பட்டவற்றிற்கு காலந்தவறாது வாழ்த்த வேண்டியது நமது கடமையாகும். அந்தக் கடமை உணர்விற்கே இந்த மலர், இந்த விழா என்பதை அறியத்தந்து நிறைவடைகின்றோம்.

**"என் கடன் பணி செய்து கிடப்பதே**
**தன் கடன் அடியேனையும் தாங்குதல;"**

இங்ஙனம்
ஞான. திருக்கேதீஸ்வரன்
மலர் ஆசிரியரும், பொன் விழா அமைப்பாளரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமூகப்பணி, கல்விப்பணி சிறக்க வாழ்க



யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வர்த்தகத் துறைத் தலைவராக விளங்கும் திரு. தேவராஜா அவர்களின் 50வது அகவை நிறைவையிட்டு, வெளிவர இருக்கும் 'தேவாமிர்தம்' மலருக்கு ஆசிச்செய்தி வழங்குவதில் மிக மகிழ்ச்சியடைகிறேன்.

திரு தேவராஜா அவர்கள் வித்தியோதயப் பல்கலைக்கழகத்தில் வர்த்தகப் படிப்பை மேற்கொண்டு பட்டம்பெற்று விரிவுரையாளராக யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் நியமனம் பெற்றதுடன் சிறந்த வர்த்தகக் கல்வி விரிவுரையாளராகப் பணிபுரிந்து வருகின்றார். வர்த்தகக் கல்வி உலகில் தனக்கென ஒரு இடத்தைப் பெற்றுள்ள திரு. தேவராஜா அவர்கள் பல்கலைக்கழகத்திலும் வெளியிலும் எவருடனும் சுமூகமான உறவைக் கொண்டிருப்பதுடன், அவர்களின் இன்ப, துன்பங்களில் தன்னை முழுமையாக அர்ப்பணித்துச் செயலாற்றுபவர். மனித நேயம் மிக்க இவர், மாணவர் நலன் பேணுவதில் மிக்க ஈடுபாடு உடையவர். பல பாடசாலை அபிவிருத்திச் சங்கங்களுடன் இணைந்து பாடசாலைகளின் அபிவிருத்தியிலும், வளர்ச்சியிலும் அக்கறைகொண்டு பணிபுரியும் சமூகத்தொண்டனாகவும் விளங்குகின்றார்.

அவர் நீண்ட ஆயுளைப் பெற்று தான் வாழும் சமூகத்திற்குப் பணி பல புரியவேண்டும் என இறைவனை வேண்டுவோமாக!

பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை
துணைவேந்தர்
யாழ். பல்கலைக்கழகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பொன்னாண்டு, மணியாண்டு,பவள ஆண்டு என்றெல்லாம் பல ஆண்டு காண வாழ்த்துகின்றோம்

திரு.க. தேவராஜாவுக்கு இந்தாண்டு பொன் ஆண்டு. இச்சிறப்பு நிகழ்வினை நினைவுகூற தேவா அமிர்தம் என்னும் மலரினை வெளியிடவுள்ளனர். தேவாவின் நண்பர்கள், ஊரவர்கள் யாவரும் ஒன்றுசேர்ந்து பொன்விழாச் சபையொன்றினை அமைத்து 10.03.2001 அன்று விழாக்கொண்டாட எண்ணியுள்ளனர்.

தேவா ஆரவாரமில்லாமல் அலுவல் பார்க்கும் ஒருவர். மிகுந்த பொறுமையுடன் எதனையும் செய்யும் இயல்புடையவர். எங்களிற் பலரைப் போலன்றி, தேவா பல பிள்ளைகளுக்குத் தந்தை. இம்மக்கட் செல்வம் அவருடைய ஆளுமைக்கு ஒரு காரணமாகும். பல பிள்ளைகளை அன்புடன் வளர்த்த அவர் பல்கலைக்கழக மாணவர்களையும் அன்புடன் பயிற்றுகின்றார், அவர்களுடைய பிரச்சனைகளையெல்லாம் கேட்டறிந்து வழிசொல்பவர்.

தேவாவின் இன்னொரு சிறந்த பண்பு என்னவென்றால், எல்லாக் காரியங்களையும் சிரித்த முகத்துடனே செய்வதாகும். தேவாவுக்கு எதிரிகளென்று எவருமே இருக்கமாட்டார்கள்.

பல்கலைக்கழகச் சமூகத்திலே ஏதாவது தப்பபிப்பிராயங்கள் பிளவு ஏற்படுமிடத்து அவற்றைத் தீர்த்துவைக்க யாரை அனுப்பலாமென்று எண்ணும்போது தேவாவினுடைய பெயரே உடனடியாக நினைவுக்கு வரும். எவரையும் மனம் நோகவைக்காமல் காரியங்களை அவர் செய்வார்.

சொன்ன சொல் காப்பவர் தேவா. ஒன்றைத்தான் செய்வேன் என ஏற்றுக்கொண்டாரெனில் அவ்விடயம் செய்து முடிந்ததென நாம் எண்ணியிருக்கலாம். சில காரியங்களைச் செய்து முடிப்பதற்குப் பலரும் அவரை நாடிச் செல்வதை நான் கண்டுள்ளேன்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலே கடமை செய்கின்றபோது அவருடன் சேர்ந்து பணியாற்றவும், அவருடைய பணிகளைப் புறத்தே நின்று பார்க்கவும் கடந்த இருபது ஆண்டுகளுக்கு மேலாக எனக்கு வாய்ப்புக் கிடைத்தது. அப்படிப் பழகியவர்களுள் மிக மென்மையான உள்ளங்கொண்டவர் தேவா. ஏதையும் கரவாக வைத்துச் சாதிக்க வேண்டுமென அவர் எண்ணுவதில்லை.

அவருக்கென ஒரு மாணவர் குழாம் இருப்பதுபோல, ஒரு நல்ல நண்பர் கூட்டமும் இருக்கின்றது. பல்வேறு தரத்தினர் அவரைக் காண வருகின்றனர். ஊர் விடயமென்றால், ஓடியோடிப் பார்ப்பார். பல்கலைக்கழகத்துக்குள் பம்பரம் போல் சுழல்வார்.

ஓர் இனிமையான நண்பனாகிய தேவா பொன்னாண்டு, மணியாண்டு, பவள ஆண்டு என்றெல்லாம் கடந்து செல்லவும், அவருடைய துணைவியார், பிள்ளைகள் யாவரும் அவருடனிணைந்து எல்லா வகையான பேறுகளையும் பெற்று வாழப் பார்வதி உடனுறை பரமேஸ்வரன் அருள்செய்வான். தேவாவுக்கு என்னுடைய வாழ்த்துக்களும் ஆசிகளும்.

பேராசிரியர். அ.சண்முகதாஸ்,
உயர்பட்ட ஆய்வுப் பீடாதிபதி,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நான் கண்ட தேவா

திரு. தேவராசாவுடன் எனக்கு நீண்டகாலப் பரிச்சயம் உண்டு. அவருடன் எனக்கு உள்ள தொடர்பு மிக இறுக்கமானது. கல்வித்துறையில் மட்டுமல்லாமல் பல வழிகளிலும் நாம் பரஸ்பர தொடர்பு கொண்டுள்ளோம்.

ஏன்றும் மாறாத புன்சிரிப்பு கொண்டவர் தான் நண்பர் தேவராசா. அவரைப் பலரும் தேவா என்று தான் அழைப்பார்கள். எவருடனும் மறந்தும் கோபித்துப் பண்பில்லாமல் கதைக்கமாட்டார். யார் அவரைப் பேசினாலும் புன்னகையிலேயே பதில் சொல்வார். பல்கலைக்கழகத்தில் அவருக்கு யாரும் எதிர்ப்பில்லை. அங்கு மட்டுமல்ல அவருடைய ஊரான தாவடியில் கூட எதிரி யாரும் இல்லை.

மக்கள் தொண்டன் தேவராசா இணுவிலுக்கு வரப்பிரசாதம். ஆலய உற்சவங்கள், கலியாணங்கள் அமங்கல நிகழ்வுகள் அனைத்திலும் முன்னின்று பொறுப்புடன் கருமம் ஆற்றுவார். அவரை உணர்ந்து நயந்து பாராட்டுவது தான் இப் பொன்விழா.

அன்பு நிறைய உடையவர்கள் மேலோர் என்பது பாரதி கூற்று. எல்லோரும் இன்புற்றிருக்கச் சேவை செய்வதே அவர் வாழ்வின் இலட்சியம். கற்றவர் கல்லாதவர் என்ற பேதமின்றி அனைவருடனும் அன்பாகப் பழகும் தேவா ஓர் அபூர்வ மனிதன்.

**அறிவினான் ஆகுவதுண்டோ பிறிதின்நோய்**
**தந்நோய் போல் போற்றக்கடை என்பது வள்ளுவர்**

வாய்மொழி தேவாவும் மற்றவர் துன்பம் கண்டால் அதை எப்பாடுபட்டாவது போக்க வேண்டுமென்று உழைப்பவர். தன்னம்பிக்கையும் தெய்வநம்பிக்கையும் கொண்ட தேவா மானிடத்துக்கொரு எடுத்துக் காட்டென்றால் மிகையில்லை.

எப்போதும் எங்கும் எவரிடத்தும் நல்லதையே காணும் அவர் வாழ்விற் பல நலங்களும் பெற்று வாழ எல்லாம் வல்ல யாழ் பல்கலைக்கழக பார்வதி உடன் அம்பரமேஸ்வரனை வேண்டுகின்றேன்.

**பேராசிரியர். சே. பாலச்சந்திரன்.**
**பீடாதிபதி கலைப்பீடம்**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பழகுவதற்கு இனிய தேவா

யாழ்ப்பாணப் பிரதேசத்தில் தாவடி பகுதியில் பிறந்து வளர்ந்து, இந்து தமிழ்க் கலவன் பாடசாலையில் தனது ஆரம்பக் கல்வியையும் தொடர்ந்து கொக்குவில் இந்துக் கல்லூரியில் தமது இடைநிலைக் கல்வியையும் மேற்கொண்டு சிறப்பாக செயல்பட்டுள்ளார். வணிகக் கல்வியில் அதிகளவு ஆர்வம் இருந்ததன் விளைவாக அத்துறையில் சிறப்பாக விளங்கி ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தில் முகாமைக் கற்கையியல் துறையில் சிறப்பான கல்வியைப் பெற்று சிறந்த முறையில் பரீட்சை முடிவுகளை பெற்றிருந்தார்.

யாழ் பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராக பதவியேற்று 1979ம் ஆண்டிலிருந்து பல்கலைக்கழகத்தில் இது சார்ந்த துறைகளின் வளர்ச்சிக்கு அரும்பணியாற்றி வருகின்றார். 1994ம் ஆண்டு வணிகத்துறையின் தலைவராக நியமிக்கப்பட்டு அத்துறையின் வளர்ச்சியில் மிகவும் முக்கிய இடத்தைப்பெற்றுள்ளார். இன்று யாழ் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத் தலைவராகவும் பணிபுரிந்து வருவது மேலும் ஒரு சிறப்பம்சமாகும்.

சரீர சேவை என்பது அவருடன் கூடப்பிறந்த ஒன்றாகும். பலரும் அவரைச் செல்லமாக 'தேவா' என அழைப்பர். பலரும் இப்பதத்தை பயன்படுத்தி, பல்வேறு நன்மைகளை அவரிடமிருந்து பெறுவதனை நான் அறிவேன். கொக்குவில் இந்துக் கல்லூரியில் பழைய மாணவ மன்றத் தலைவராக இருப்பதுடன் அரிய சேவைகளை பாடசாலைக்கு ஆற்றிவருகின்றார்.

திருமண வாழ்வில் இராசையா இலட்சுமிதேவியை கரம்பிடித்து குழந்தை செல்வங்களுடன் வாழ்ந்துவரும் எனது இனிய நண்பரும் நம்பிக்கையுடையவரும் நீண்டகாலம் வாழ்ந்து நல்ல சேவைகளை சமூகத்துக்கு வழங்கவேண்டும் என வாழ்த்துகின்றேன்.


**மா.நடராஜசுந்தரம்,**
**பீடாதிபதி,**
**முகாமைக் கற்கைகள் வணிக பீடம்,**
**யாழ் பல்கலைக்கழகம்.**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்றும் வாழ்க

யாழ் பல்கலைக்கழக வர்த்தகத்துறைத் தலைவரும் சிரேஸ்ட விரிவுரையாள ருமான நண்பர் தேவராஜா ஒரு தர்ம வீரர்.மாணவனாக, விரிவுரையாளராக. சமூகநலன் விரும்பியாக ஒரு பாசமுள்ள குடும்பஸ்தராக பல கோணங்களில் நான் தேவாவைப் பார்க்கின்றேன். அவர் சுறுசுறுப்பு நிறைந்த தேனீ போன்ற மனிதர். தான் கல்வி கற்ற கொக்குவில் இந்துக்கல்லூரி விடயம் என்றால் இராப்பகல் பாராமல் ஓடித்திரிவார். பழைய மாணவர் சங்கத்தின் தலைவராய் இருந்து அளப்பெரிய சேவை செய்திருந்திருக்கின்றார். தான் சார்ந்த பல்கலைக்கழகத்தின் அலுவல் என்றாலும் சரி அவருடைய பிள்ளைகள் கல்வி கற்கும் யாழ் புனித ஜோண் பொஸ்கோ கல்லூரியின் விடயமென்றாலும் சரி தனது ஸ்கூட்டர் வண்டியில் மனம் சலியாது ஓடித்திரிந்து காரியங்களைச் செம்மையாகக் கவனிப்பார். அவர் சிறந்த சமூக சேவையாளர். அத்தகைய ஒரு கர்மவீரருக்கு 50 ஆண்டுகள் அகவை என்று விழா நடப்பதில், அவரைப் பாராட்டுவது சாலச் சிறந்தது எனக் கருதுகின்றேன். அவர் நீடூழி வாழ்ந்து, கல்வி உலகுக்கும், அவர் சார்ந்த சமூகத்துக்கும் சிறந்த சேவை ஆற்ற இறைவன் துணை நிற்க.

து. வைத்திலிங்கம்,
யாழ் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பல்கலைக்கழகப் பணியும் சமூகப்பணியும் தொடர வாழ்த்துகிறேன்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வணிகவியற் துறைத்தலைவர் திருக.தேவராஜா அவர்களின் 50வது அகவையொட்டி தேவா பொன்விழாச் சபையினர் அவருக்குப் பொன்விழாவினைக் கொண்டாடி 'தேவா அமிர்தம்'என்ற மலரினையும் வெளியிடவுள்ளதை அறிந்து மிக்க மகிழ்ச்சியடைகின்றோம். எம் இனிய நண்பர் திரு க.தேவராஜாவுக்கு முதற்கண் எம் இதயங்கனிந்த நல்வாழ்த்துக்கள் உரித்தாகுக.

திரு.க.தேவராஜா யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் வணிகவியற் துறை வளர்ச்சிக்கு அளப்பரிய பணியாற்றிவருபவர். பல்கலைக்கழக கல்வியில் இற்றைக் காலத்தில் முக்கியத்துவம் பெறும் வணிகவியல் கற்கைநெறியின் வளர்ச்சியில் தனக்கென ஓர் இடத்தை உருவாக்கிச் செயற்பட்டு வருபவர். அண்மையில் முகாமைத்துவ வணிகவியற் பீடமொன்று எமது பல்கலைக்கழகத்தில் உதயமாகி இயங்குவதற்கு உறுதுணையாக விளங்குபவர். அன்பர் திரு க.தேவராஜா அமைதியும் அடக்கமும் இனிமையோடு இணைந்த எளிமையும் கொண்ட பண்பாளர். எவரோடும் இன்முகத்துடன் அன்பாகப் பழகும் நல்லாசான். அனைவரினதும் மதிப்பிக்குரியவர், பல்கலைக்கழக முக்கிய பணிகளாகிய கற்பித்தல், ஆய்வுசெய்தல் ஆகியவற்றைப் பொறுத்தவரை தமது துறைசார்ந்த நிலையில் நல்ல ஈடுபாடு கொண்டவர். மாணவர்கள் முதற்கொண்டு எவரும் கேட்டமாத்திரத்தே உதவிக்கரம் நீட்டும் பெருந்தன்மை கொண்டவர்.

தமது துறைசார்ந்த விடயத்தில் மாத்திரமன்றி சமய சமூகப் பணிகளிலும் தமது செயற்பாட்டை விரிவுபடுத்திய பெருமைக்குரியவர். தாம் வாழும் கிராமத்தின் வளர்ச்சியிலும் பெரும் ஈடுபாடுடையவர். தமது கிராமத்தில் உள்ள ஆலயங்களின் வளர்ச்சியிலும் பரிபாலனத்திலும் அக்கறை கொண்ட சமயப்பற்றுமிக்கவர். எமது யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பரமேஸ்வரன் ஆலய பரிபாலன சபையின் உறுப்பினராகவும் செயற்பட்டு உதவி வருபவர்.

இத்தகைய சிறந்த பண்புகளுடன் கூடிய திரு. க. தேவராஜா அவர்களின் பல்கலைக்கழகப் பணியும் சமூகப் பணியும் பல்லாண்டு காலம் தொடர வேண்டும், சிறக்கவேண்டும், இத்தகைய பணிகள் சிறக்க அவர் பல்லாண்டு பல்லாண்டு பல்லாண்டு காலம் தமது சுற்றமும் இனிதே நலமுடன் வாழ எல்லாம் வல்ல ஸ்ரீ பார்வதி சமேத பரமேஸ்வரனின் திருவருளை முன்வைத்து வாழ்த்துவதில் மிக்க மகிழ்ச்சியடைகின்றோம். அவருக்கென உருவாகும் மலராகிய 'தேவாமிர்தம்' அனைத்து நிலைகளிலும் சிறப்பதாகுக. தேவா பொன்விழாச் சபையினருக்கு எமது மனம்நிறைந்த பாராட்டுக்கள் உரித்தாகுக!.

பேராசிரியர் கலாநிதி
ப.கோபாலகிருஸ்ண ஐயர்,
தலைவர், இந்துநாகரிகத்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## நீடு வாழ்ந்து நிறைவு பெறவேண்டுமென அகமகிழ்வுடன் வாழ்த்துகிறேன்

அன்பு, அறிவு, அடக்கம், மனிதநேயம், பிறருக்கு உதவும் புனிதம் முதலிய பல்வேறு பரிமாணங்களைக் கொண்ட ஓர் ஆளுமையின் முழுமையை இவரிடத்திலே தரிசிக்க முடிகின்றது. இயக்கநிலைத் தலைமைத்துவத்தின் பண்புகள், முரண்பாடுகளை இசைவுறச் செய்யும் உளவியல் தலைமைத்துவப் பண்புகள், சமூகத் தளங்களில் வேர்பதித்த சமதர்ம தலைமைத்துவப் பண்புகள் முதலியவற்றின் வடிவினராக அன்புக்குரிய தேவராஜா அவர்கள் விளங்குகின்றார்கள். வளர்வுறும் நாடுகளின் ஆய்வறிவாளர்கள் எவ்வாறு இயக்கமுற வாழவேண்டும் என்பதற்கு ஓர் உன்னதமான மேற்கோள் மாந்தராக விளங்குதல் அவருக்குரிய தனித்துவமாகும். சமூக அறிகைக்கு ஏற்றவாறு துலங்கும் குணவியல்பு, சமூக ஊடாடங்களூடே நிறைவுகாணும் புலக்காட்சி முதலியவற்றைக் கொண்ட அவர் நீடு வாழ்ந்து நிறைவுபெறவேண்டுமென அகவை விழாவில் அகமகிழ்வுடன் வாழ்த்துகின்றோம்.

சபா. ஜெயராசா.

தலைவர்,
நுண்கலைப்பீடம்,
யாழ். பல்கலைக்கழகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உன்னை நண்பனாய் பெற்றநாம் பேறுடையோம்





நண்பன் தேவராஜாவுக்குப் பொன்விழா
என்றதும்
நெஞ்சிலே எல்லையில்லாத மகிழ்ச்சி
நிறைகின்றது.
'நல்ல மனம் வாழ்க' என்று
நினைவெல்லாம் உயிர்த்து களிக்கின்றது.

கள்ளம் கபடம் அற்ற அந்த
வெள்ளைச் சிரிப்பு
பொன்மனதின் சாட்சியாய்
தினமும் எங்களோடு இசைகின்றது.

'Humanizing the bureaucrcy'
'பணிக்குழு ஆட்சியை மனிதப்படுத்தல்',
இன்றைய காலத்து தேவையாய் எழுவது
எங்கள் நண்பன் ஆட்சியும் மாட்சியும்
புதிய தேவையின் இலக்கணமாய் மிளிர்வது.

நல்ல தொரு குடும்பம் பல்கலைக்கழகம் என்பார்
தேவாவின் அகராதியில்
எங்கள்
பல்கலைக்கழகமே நல்ல குடும்பமானது.

தமக்காகவே வாழ்வு என்ற
நவீன விழுமிய கோலங்களிடையே
சமூக வாழ்வின் சரிதங்கள் பலதருவான்
எங்கள் தேவா
இன்று
சமூகமே திரண்டு அவன் வாழ்வினைப் பாடும்.

உன்னை நண்பனாகப் பெற்ற நாம் பேறுடையோம்
வாழிய நீடு - வளமுடன் அன்பு நண்பா!

நண்பர்கள்,


கந்தையா சிவராஜா,
வணிகத்துறை,
யாழ் பல்கலைக்கழகம்.

கலாநிதி என். சண்முகலிங்கம்,
சமூகவியற்துறை,
யாழ் பல்கலைக்கழகம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நண்பனொருவன் நெஞ்சத்திலிருந்த பதிவுகள்...

ஐம்பது வருடங்கள் உலகியலில் நடைபோட்ட தேவாவின் 'மனிதநேயத்தை' எடைபோட்ட சமூகம் எடுக்கின்ற விழாவினோர் அங்கமான இவ் ஆக்கத்தில் எழுதக்கிடைத்த மையை என்வாழ்வில் பெறவரும் பாக்கியமாகக் கருதுகிறேன். வாழும் மனிதனைப் பற்றிய வார்த்தைச் சித்திரம், இனிவரும் காலத்திலும் உயிர்ப்பாய் உலாவரவேண்டும் என்கிற ஆதங்கம். தேவாவோர் 'ஆதர்சபுருசராதலால்' ஆதங்கப் படவோ, ஐயப்படவோ அவசியமில்லை என்றவாறாய் என்னுள் எழும் அசையாத நம்பிக்கை.

இவர் இந்தமிழுக்கு இந்துமதத்திற்கு, இந்த ஊருக்கு, இது செய்தார், இனிய சேவை செய்தார் என ஆற்றிய அரிய சேவைகளைத் தேடிப்பிடித்து அல்லது தேடிப்பிடிப்பித்து விழாக்காணும் விழாநாயகர்கள் வரிசையில் உன்னைத் தேடினேன் நீ அங்கில்லை.

பசிக்கு எதிராய் என்பணி, பிணிக்கு எதிராய் என்பணி, அறியாமைக்கு எதிராய் என்சேவை என்றவாறாய் சேவைக்கான பாதைகளை குறுக்கி தனிவழிப்படுத்தி வகுத்துக்கொண்டு சேவையாற்றி பாராட்டினைப் பெறும் விழா நாயகர்கள் வரிசையிலும் உன்னைத் தேடினேன் அங்கும் நீ இல்லை.

குடிசை, கோபுரம், ஏழை, பணக்காரர், கற்றோர் கல்லாதோர், உறவினர் அந்நியர் என்கிற பேதங்களுக்கு அப்பாலாய் அபேதமாய் 'பாரதி கண்ட கண்ணனாய்', சேவகனாய் மானிடத்துக்கு நீ வழங்கும் சேவைகளின் பாங்கு யாரிடம் உண்டு? உனது சேவையே மக்கள் சேவை. அதனையே நீ மகேஸ்வரனுக்கு ஆற்றும் சேவையாய் அர்ப்பணித்துக்கொண்டாய்.

'நற்றாள்' தொழும் மேன்மை கொண்டதே உனது கல்விப்பேறு. ஈதலும் இசைபட வாழ்தலுமாயமைந்த உயிர்க்கு ஊதியம் தேடித்தரும் வாழ்க்கை முறை. செல்விருந்தோம்பி வருவிருந்து காத்திருக்கும் உயர் மானிடம்.. உன் மணவாழ்வில் கிடைத்த 'தற்காத்து தற்கொண்டார் பேணும் தகைசான்று' பெண்பேறு. இல்வாழ்வின் பயனாய் இன்றும் கிடைக்கும் 'தம்மக்கள் சிறுகையளாவிய கூழ் உண்ணும் இன்பப்பேறு'. இவை நீ தேடிக் கொண்ட செல்வங்கள். இவை உன் சேவைப் பாங்கிற்கு உயிர்ப்பினையும் ஊட்டத்தினையும் வழங்குகின்றன. இத்தகைய சிறந்த பின்புலத்திலிருந்து, உதயமாகும் உன் சேவை மனப்பாங்கு, தேவைகளைக் கடந்த தெய்வீகப் பரிமாணம் கொண்டவை. உயர்ந்த பணிகளையே செய்விக்கவல்லவை.

'தேவனாய்', தேவா! நீ உயர்ந்து விட்டாய், எனினும் உன்னையோர் மனிதாயம் மிக்க மனிதனாகவே நான் காண்கிறேன். உனக்கான வாழ்த்துக்கள் இதயமுள்ள நெஞ்சங்களிலிருந்து என்றும் ஊற்றாகும் உனக்கான சிங்காசனம் 'நலிவுற்றோர்' நெஞ்சங்கள். இவ் இனிய வரலாற்று விழாவின் முன்னாயும் அங்குதான் நீ இருந்தாய், பின்னாயும் அங்குதான் நீ இருப்பாய். நல்லாசி வேண்டி இறைவனைப் இறைஞ்சுகிறேன். வாழ்த்துகிறேன். வணங்குகிறேன்.

க. சிவானந்தமூர்த்தி
சிரேஷ்ட விரிவுரையாளர்
மெய்யியல்துறை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்துரை

அகவை ஐம்பதை அடைந்து பொன்விழா காணும் அன்பன் தேவராஜாவைப் பல் சிறப்பும் பெற்றுப் பல்லாண்டு வாழ்க என வாழ்த்துவதில் பெருமகிழ்வு அடைகிறேன்.

பொன்விழாக் காணும் தேவாவின் குணாம்சங்கள் எல்லோராலும் போற்றப்பட வேண்டியவை, பின்பற்றப்பட வேண்டியவை, அண்டியவர்கள் அனைவரையும் அன்பால் அரவணைக்கும் அரிய பண்பாளன். எந்த நேரமும் எவர்க்கும் எந்த உதவியையும் செய்வதில் என்றும் பின்நிற்காத சேவகன். தனது இனிமையான இயல்பினாலும் இன் சொல்லாலும் எல்லோரையும் தன்னிடத்தே ஈர்க்கும் குணாளன்.

தொழில் வாழ்விலும் சமூக வாழ்விலும் உழைப்புக்கு ஓர் எடுத்துக் காட்டான உத்தமன். திரு. தேவராஜா அடைந்துள்ள உயர்வுகளும் சிறப்புக்களும் அவருடைய சீரிய செயற்பாடுகளின் சின்னங்களேயாகும். அவருடைய பொன் விழாவைப் பொலிவுடன் கொண்டாட எடுக்கப்படும் முயற்சிகள் யாவும் பொருத்தமானவையே.

இக் கைங்கரியத்தில் பொறுப்பேற்ற அனைவரையும் பாராட்டுவதோடு, விழாவின் நாயகனை மேலும் உயர்ந்து சிறக்கவென மனம் நிறைந்து வாழ்த்தி, அவர்மீது தனது அருட்பார்வையை நிலைபெறச் செய்யும்படி எங்கும் நிறைந்த பரம்பொருளை நெஞ்சார வேண்டுகிறேன்.

ஆறுமுகம்,
வாழ்நாள் பேராசிரியர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஈரநெஞ்சுடைய இனிய மனிதர்

ஈரநெஞ்சுடைய இனிய மனிதர்களால் இவ்வுலகம் நிலைக்கிறது. இன்றைய உலகில் ஈரநெஞ்சுடைய இனிய மனிதர்களைக் காண்பது மிகவும் அரிதாகிக் கொண்டிருக்கிறது. இந்நிலையில் ஈழத்திருநாடாகிய எமது புண்ணிய பூமியில் சில பண்புடையவர்கள், பலரை ஆற்றுப்படுத்துகின்ற இயல்புடை யவர்கள். ஒரு சிலர் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுள் ஒருவர் தான் பொன்விழாக்காணும் அன்பர் விரிவுரையாளர் திரு, தேவராசா அவர்கள். கடவுள் பக்தியும், கருணைஉள்ளமும் மிகுந்த குடும்பத்தில் பிறந்தவர் இவர். தாவடி, இணுவில் வாழ் மக்கள் "கோயில் மணியோசை கேட்டு" எழுந்து இறை பூசை கண்டு பின்பே தம்பணி தொடர்வார்கள். பிறர்க்கு தீமை எண்ணாத தாய்க்குத் தந்தைக்கு, மைந்தனாகத் தோன்றிய திரு.தேவராஜா அவர்கள் தன் இடைவிடாத முயற்சியால் உயர்வு பெற்றார். உயர்பட்டங்கள், பதவிகள் பெற்ற போதிலும் 'பணியுமாம் பெருமை' என்ற கூற்றிற்கமைய எவரோடும் இன்முகத்தோடு பேசி, எவரது இடரையும் தீர்க்க முயலுகின்ற ஓர் உத்தமர். மகாகவி பாரதியார் யார் மேலானவர்கள்? என்பதற்கு ஓர் அரிய விளக்கத்தினை எடுத்துரைத்தார். "நீதியுயர்ந்தமதிகல்வி அன்பு நிறைய உடையவர்கள் மேலோர்" இவ்வார்த்தையின் இலக்கணமாக எம்மோடு வாழ்ந்து கொண்டிருப்பவர் ஆசிரியர் பிரான் திரு.தேவராஜா என்றால் மிகையாகாது. எவ்வேளையும் இறைவழிபாடு செய்யும் சுபாவம் இவரோடு கூடப்பிறந்தது. தாவடிப் பிள்ளையார் கோயில் தொண்டு முதல் இணுவில் அருள் மிகு பரராஜசேகரர் விநாயகர் ஆலயம் முதல் இணுவில் நரசிங்கர் ஆலயம் வரை தாழ்பணித்து வணங்குவதும் திருத்தொண்டு ஆற்றுவதும் இவரது இயல்பான பணியாகும். தன்னை அணுகி எவர் வரினும் அவரை பூரண மனத்தோடு உபசரிக்கின்ற ஓர் புனிதத் தன்மையை இவரிடம் யான் கண்டு இன்புற்றேன். படித்தவர்களாக இருக்கலாம், படிக்காத பாமரர்களாக இருக்கலாம். எவரையும் மனிதர்களாக மதிக்கும் இவரது மாண்பினை இவரிடம் யாம் கற்க வேண்டும். பல்கலைக்கழக வளாகத்துள் தன்னை அறிந்தவர்களுக்கு மட்டுமன்றி தன் கண்ணில் அகப்பட்டவர்கள் அனைவரையும் நாடி, ஏது வந்தீர்கள்? என்று வினாவி, தன்னால் ஆனதைச் செய்கின்ற ஒரு தயாவாணன் இவர் இவரிடம் படித்தவர்கள் இவரது இரக்க சுபாவத்தை என்றும் வியந்து பேசுவர். இவரது வார்த்தைகள் அனைவ ரையும் அரவணைக்கும் சக்தி மிக்கவை திருவள்ளுவர் புலமையாளனுக்கு இருக்க வேண்டிய தகுதியை வரையறுக்கும் போது பின்வருமாறு குறிப்பிடுகின்றார். ஒரு அறிஞர் மற்றையவர்களோடு உரையாடிச் செல்வானாயின் அவனது உரையை இனி எப்போது கேட்கலாம் என்ற ஆவலைத் தூண்டுபவனே உண்மையான அறிஞன், புலமையாளன் ஆவான். இதனையே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"உவப்ப தலைக்கூடி உள்ளப் பிரிதல் அனைத்தே புலவர் தொழில்" என்ற குறள் ஊடாக விளக்கினார். வள்ளுவப் பெருந்தகையின் இக் குறளுக்கு மிகவும் பொருத்தமான புலமையாளனாக திரு. தேவராஜா அவர்கள் விளங்குகிறார்கள். இவரோடு எப்போது மீண்டும் சந்தித்து உரையாடலாம் என்ற ஆதங்கத்தை அவரது வார்த்தைகள் ஏற்படுத்தத் தவறுவதில்லை.

இணுவில் கிராமத்தில் இன்று வாழ்ந்து கொண்டிருக்கும் கல்விமான்கள் வரிசையில் திரு.தேவராஜா அவர்கள் தனித்துவமான இடத்தை வகித்துக் கொண்டிருக்கின்றார். முத்தோருக்கும், இளையவர்களுக்கும் நடுநாய கமாக இவர் விளங்குகின்றார். இவரது பணிகள் சொல்லிமுடிக்க இயலாது. ஆண்டவன் சந்நிதியில் வடம் பிடித்திழுப்பார், இறந்தவர் வீட்டில் நின்று இடுகாடு வரை சுமப்பார், சபையில் பந்தி வைப்பார், அரிமாக் கழகத்தோடு அகதிமுகாமில் தொண்டு செய்யவார். கல்விப் பணியோடு கருணைப் பணிகள் பல செய்யும் இவரை வாழ்த்துவது எம்மரின் கடமையாகும். அவ்வகையில் அன்னாருக்கு அகவை ஐம்பது பெறும் இந்நாளில் அறிஞர்கள், அன்பர்கள் கூடி பொன்விழா எடுத்து போற்றுவது வாழ்த்துக்குரிய விடயமாகும். இவரது பிரிய பத்தினி, அன்புச் சகோதரி லக்சுமி உண்மையிலேயே இலட்சுமி கடாச்சம் நிறைந்தவர். இனிய தம்பதிகள், மழலைச் செல்வத்தாலும், மகிழ்ச்சியாலும் நிறைந்து வாழுகின்ற பேற்றினை இறைவன் அவர்களுக்குக் கொடுத்துள்ளார். அவர்கள் நிறைவான திருப்பொலிவோடு இன்றுபோல் என்றும் வாழ இறைவனை இறைஞ்சி வாழ்த்தி வணங்குகிறேன். இணுவில் திருவூர் மக்கள் அபிவிருத்திச் சபையில் தலைமையாளர்களில் ஒருவராக அனைவராலும் பணிக்கப்பட்டுள்ள பேரறிஞர் திரு.தேவராஜா அவர்கள் எம் கிராமத்தின் விருத்தியை, எம் தேசத்தின் விருத்தியை மேம்படுத்த தொடர்ந்து பாடுபட வேண்டும் என அன்புடன் வேண்டுகிறேன். பலபேரை வாழ்விக்கின்ற பண்புடைய அறிஞர் தேவராஜாவிற்கு பொன்விழா எடுக்க முனைந்த அமைப்பாளர் திரு.ஞான.திருக்கேதீஸ்வரன் அவர்களையும், பொன்விழாச் சபையினரையும் நன்றியோடு பாராட்டி எனது வாழ்த்துரையைத் தெரிவித்து நிறைவு செய்கின்றேன்.

செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன்,
"பாலாவி"
மருதனார்மடம்,
இணுவில்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Massage for the 50th Birthday Anniversary

It gives me great pleasure to forward this message to you on the occasion of your Charter President Lion K. Thevarajah's 50th Birthday Anniversary.

Lion K.Thevarajah being an Educationist holding high office as the Head of the Commerce Department of the Jaffna University has taken up Lionism for the past nine months as the President of the Lions Club of Inuvil, in addition to his professional commitments.

Lions Club International is the largest service organisation in the whole word and Lion Theva's contribution as President of a Lions Club situated in a region faced with immense socio economic difficulties to assist the needy, is praiseworthy.

My sincere congratulations and best wishes to Lion Thevarajah on his 50th Birthday and wish him all good health and happiness for many years to continue in Lionisum to assist the needy with Love Light and Care.

I wish him a very happy and a prosperous New Year.

**Lion Rohitha Udawatte MJF**
**District Governor - 360 B**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## MESSAGE FROM LION DR.V.THIYAGARAJAH REGION CHAIRMAN REGION IX- DIST.306B. LIONS CLUBS INTERNATIONAL

As Region Chairman – Region IX of Dist.306B – Lions Clubs International it gives me immense pleasure in contributing this message to the 'Souvenir' to be released in connection with the GOLDE Jubilee celebration of lion K.Thevarjah – our President of Lions Club of Inuvil. Knowing very well Lion Theva's capabilities and leadership qualities Lions of Inuvil club made the correct choice by inviting him to accept the vital position of Charter Presidency of their club.

Lion Theva is an unassuming personality who willingly helps those in need. I am aware a number of people from all walks of life daily call over on him seeking his advice, guidance and assistance and he too in turn ungrudgingly obliges. He is very popular not only in his native place but in the whole of Jaffna District. He holds key positions in number of other organizations. He is also at present functioning as the President of Jaffna University Teachers' Association.

On behalf of the Regional Lions' family – congratulations and best wishes to you Lion Theva on your $50^{th}$. Birthday and let the blessings of 'ALLMIGHTY' be with you at all your future endeavours.

Lion Dr. V. Thiyagarajah J.P
Region Chairman – Region IX
Dist. 306B,
Lions Clubs International



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பொன் விழா நாயகன் தேவா

## திருநிறை தேவராசா அவர்களுக்கு பொன்விழா தேவா அமிர்தம் என்ற மலர் வெளியீடு

இச் செய்தி என்செவியில் பட்டதும் அகமிக மகிழ்ந்தேன். வணிகத்துறைத் தலைவர் தேவராஜா கல்விச் செல்வம் நிறையப் பெற்றவர் நிறை கல்வியால் உயர்பதவிகளைப் பெற்றவர். கல்வியும் உயர்பதவியும் பெற்ற பெரியோர்கள் பணிவுடன் திகழ்வார்கள் என்பது பெரியோர் வாக்கு. அதற்கு இலக்கணமாக விளங்குபவர் திருவாளர் தேவராசா. இன்முகம் காட்டி வரவேற்பது, இன்சொல்க் கூறி உரையாடுவது, அமைதிகாட்டி பிறர் கருத்துக்களைக் கேட்பது. பிறர்மனம் நோகாது தன் கருத்துக்களை எடுத்துக்கூறுவது எச்சந்தர்ப்பத்திலும் நிதானத்தை கடைப்பிடிப்பது, இவை யாவும் இவர்தம் சொத்துக்கள்.

லயன்ஸ் தேவராஜா ஊரெல்லாம் கூடி தேரிழுக்கும் போது பார்வையாளராக பார்த்து நிற்காதவர், பங்காளியாகச் செயற்படுபவர். சமூக உணர்வு மிக்கவர் நலிந்த சமுதாயத்திற்கு உதவிகள் புரிபவர், தலைமைத்துவப் பண்புகள் நிறையப் பெற்றவர்.

கொக்குவில் இந்துவின் மைந்தன் என்று கூறுவதில் பெருமை கொள்பவர். கொக்குவில் இந்துவின் பழைய மாணவர் சங்கத்தின் உறுப்பினராகவும் தலைவராகவும் அமர்ந்து கல்லூரியின் வளர்ச்சிக்கு செயற்படும் செயல் வீரன்.

**'சீரும் சிறப்பும் கீர்த்தியும் பெற்று பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றேன்'**

'பணியுமாம் என்றும் பெருமை'
'குணநலம் சான்றோர் நலனே'.

'பண்புடைய பட்டுண் டுலகம் அது இன்றேல்
மண்புக்கு மாய்வது மன்'

– திருக்குறள்.

லயன்ஸ் இ.நடராசா,
தலைவர் பழைய மாணவர் சங்கம்,
கொக்குவில் இந்துக் கல்லூரி.

வலையத் தலைவர்,
லயன்ஸ் கழகம் 306 B,
யாழ் மாவட்டம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நலமாண்டு பல்லாண்டு வாழ்க நீடு!

கந்தையரும் அன்னையுமாய்(க்) கசிந்து பக்தி
காத்திட்டுத் தாவடியின் விநாய கர்க்குத்
தந்தபெரும் வேண்டுதலால் தவத்தில் வந்தோன்
தான்தேவ ராஜாவென் றுரைத்தால் அஃது
விந்தையல அவர்வாழ்வே விளக்க மாகும்!
விளைவுகளும் தகைமைகளும் வெளிச்ச மன்றோ!
சிந்தைநின்ற சிறப்போடும் சீரி னோடும்
செந்தமிழ்க்கு நலம்சேர்த்து வாழ்க நீடு!

கற்பித்தற் கூடங்கள் கழகம் சங்கம்
கண்ணியமாய்(ப்) பணியாற்றி(க்) கருத்து ஒன்றி(ப்)
பற்றுற்று(ச்) செயலாக்க ஊக்கம் பெற்று(ப்)
பாங்குடைய முகாமைத்துவப் பரப்பைப் பற்றிச்
சொற்பற்றும் எழுத்தாக்கம் தந்த 'தேவா'!
தொடர்பணிகள் துலங்கிடவும் மேன்மை பெற்று
நற்பற்றால் நம்மண்ணை நேசித் தென்றும்
நலமாண்டு பல்லாண்டு வாழ்க நீடு!

எல்லோரும் 'தேவா' என்(று) அழைக்கும் அன்பன்
ஏற்றமுறு பண்பாலே ஈர்க்கும் நண்பன்!
வல்லோனாய் பல்கலையில் வர்த்த கத்தை
வளமாக்கும் துறைதன்னை ஆளும் மேலோன்!
நல்லோர்கள் நடைஉடையில் நாட்டம் மிக்கோன்!
நற்கருமம் ஆற்றுவதில் நலம்சேர் வல்லோன்
நல்லோரும் போற்றுகின்ற பாங்கு பெற்றோன்
பத்தைந்து ஆண்டுபல நீடு வாழ்க!

✍
நயினைக் கவிஞர்
நாக. சண்முகநாதபிள்ளை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



*அன்பு அவரது மனம்,*
*அடக்கம் அவரது குணம்.*
*அறிவுடைமை அவரது தனம்.*
*ஆளுமை அவரது பலம்.*
*இளநகை கொண்டது முகம்.*
*ஆமாம் ! அத்தனையும் கொண்ட அற்புத மனிதன் யார்?*
*அப்படியொரு அறிஞனை நாம் காண முடியுமா?*
*ஏன் முடியாது? அத்தனையும் உடையவர் தேவராஜா.*

கொக்குவில் இந்துக் கல்லூரியில் அவர் மாணவனாகப் படித்தகாலம் இன்றும் இனிமையான எண்ணமாக பசுமையாக நினைவில் நிற்கின்றது. படிப்பிலே அளவிட முடியாத ஆர்வம். எதையும் கேட்டறிந்து தெளிவுறும் மனப்பாங்கு. படபடப்பின்றி, ஆரவாரமின்றி செயற்படும் திறமை. எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பிலும் மெய்ப்பொருள் காண்பதில் ஆர்வம் கொண்டவர். அவரது நற்பண்புகள் ஆசிரியர்களால் கவர்ந்ததில் ஆச்சரியமில்லை. ஆசிரியர்களும் மாணவர்களும் அவரை விரும்பினார்கள். தேவராஜா அவர்களிடம் காணப்பட்ட குருபக்தி சிறப்பானது. தனது ஆசிரியர்களை நேசித்து வணங்கினார் என்றுதான் கூறவேண்டும். கொக்குவில் இந்துக் கல்லூரியின் வணிகத்துறை வளர்ந்து சிறப்புற காரணமான முன்னோடி மாணவர்களில் தேவராஜா குறிப்பிடத்தக்கவர். எல்லோரும் எதிர்பார்த்தது போலவே பல்கலைக்கழகப் பட்டதாரியா கினார். பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராகி இன்று வணிகத்துறையின் தலைவராகி சிறப்புற மிளிர்கின்றார். ஆயினும் அவரது சிறப்பியல்புகள் மாறவில்லை. அன்பும் கருணையும் எளிமையும் மாறவேயில்லை.

கொக்குவில் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் தலைவராக திறம்படக் கடமையாற்றினார். கல்லூரி மீது அவர் காட்டும் அதீத அன்பு அற்புதமானது. கல்வியில் அவர்காட்டும் ஆர்வம் மகத்தானது. நல்லதொரு இளஞ்சந்ததியை உருவாக்குவதில் மிகுந்த நாட்டமுடையவராக விளங்குகின்றார். இளைஞர்கட்கு அவரது வழிகாட்டல் மிகவும் தேவையாகின்றது.

தேவராஜா அவர்கள் சிறந்த ஆன்மீகவாதி. அவர் சந்தர்ப்பவாதி அல்ல. மக்கள் சேவையே மகேசன் சேவை என்பதை நன்கறிந்தவர். அரிமாக் கழகத்தின் (இணுவில்) தலைவராக அவர் செய்த நற்பணிகளில் பலவாகும்.

இவரால் எமது கொக்குவில் இந்துக் கல்லூரி பெருமை அடைந்துள்ளது.

அவர் எனது மாணவன் என்று பேருவகையுடன் எண்ணும்போது எடுத்துக்கூறும் போது ஏற்படும் மகிழ்ச்சி......................

எல்லாம்வல்ல ஆண்டவன் அவருக்கும் அவரது குடும்பத்துக்கும் சகல சௌபாக்கியங்களையும் அருள்வாராக.

"அவரது தன்னலமற்ற தூய சேவை தொடரட்டும்"

சுடர் இ. மகேந்திரன்,
இளைப்பாறிய அதிபர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## யாழ்ப்பாணம் மத்தியகல்லூரி அதிபர் திரு.க.இராசதுரை அவர்களின் வாழ்த்துச் செய்தி

வாழ்க்கைத்தத்துவத்தை மட்டும் போதிப்பவன் தத்துவஞானி யாகிவிடமுடியாது; போதிப்பது போல வாழ்ந்துகாட்டவும் வேண்டும்; சோக்கிறட்டீசுக்கு நஞ்சூட்டப்பட்டது போல, யேசு பெருமான் சிலுவையிலறையப்பட்டதுபோல, மகாத்மாகாந்தி சுடப்பட்டது போல ஆகிவிடுமே யென்றெண்ணி போதனையுடன் நிற்பவன் சமூகத்தின் 'போலி' யாகின்றான்.

போதனையைச் சாதனையாக்கிக்காட்டுபவன் உடன் 'ஞானியாகக் கணிக்கப்படாவிடினும் சமூகவரலாறு அவனை பின்பற்றும் இது வரலாறு எமக்குத்தந்தபாடம்.

இந்தவகையில் சொல்வதனைச் செயலில் காட்டி உயர்ந்து நிற்பவர் திரு.க.தேவராசா, விரிவுரையாளனாக கடமை முடித்து சமூகத்தைவிட்டு ஒதுக்கி நின்று தன்னை ஒரு "உயர்ந்தோனாக' தனதுமட்டில் காட்டி நிற்கும் கற்பனை வாதியல்ல அவர்.

சமூகத்தில் இவர் தடம்பதிக்காத துறையேயில்லை எனலாம், கல்லூரிகள், கலையகங்கள் ஆலயங்கள், சனசமூக நிலையங்கள், சமூகசேவை நிறுவனங்கள் நட்புரிமை வட்டங்கள் என இவரின் தொடர்புகள் விரிந்து நீளும்.

கிராமப்புறப் பாடசாலைகளில் கற்று அந்தக் கிராமத்தைமட்டும் நேசிக்காது கிராமிய வாழ்வில் நாட்டம் கொண்டு சமூகத்தின் அடித்தளத்தில் இருந்து உச்சிமட்டும் அவற்றின் தன்மைகேற்ப மாற்றியும், மாறியும் உழைக்கும் ஒரு உண்மையான கல்வியியலாளனை நான் திரு. க.தேவராசாவிடம் காண்கின்றேன்.

ஒரு எழுதுவினைஞனாகக் கடமையைத் தொடங்கி இன்று ஒரு பெரும் கல்வி நிறுவனமான யாழ். பல்கலைக்கழக வணிகவியல்துறைத் தலைவராக விளங்குவது அவரின் உழைப்பின் உள்ளத்தூய்மையின் பிரதிபலன் என்பதனை எமக்குப் பாடம் புகட்டுகின்றது.

அன்பரின் 50வது வயது நிறைவுறும் போது இன்னும் பலகாலம் அவரின் சேவையை நாம் பெற இறையருள் புரியும் என்ற நம்பிக்கையுடன் அவரை வாழ்த்துகின்றேன்.

க. இராசதுரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எல்லாச்சிறப்பும் பெற்று பல்லாண்டு வாழ்க

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் வணிகத்துறைத் தலைவர் திரு.க.தேவராசா அவர்களை அறியாத கல்வி உலகு இருக்கமுடியாது. தாவடியில் பிறந்த அவர் தனது ஆரம்பக் கல்வியைத் தாவடி இந்துத் தமிழ் கலவன் பாடசாலையிலும் உயர் கல்வியை கொக்குவில் இந்துக் கல்லூரியிலும் கற்றார். பின் கொழும்பு வித்தியோதயாப் பல்கலைக் கழகத்தின் வணிகத்துறைச் சிறப்புப்பட்டதாரியாக வெளியேறிய இவர் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் உதவி விரிவுரையாளராக, விரிவுரையாளராக பதவி வகித்து இன்று வணிகத்துறையின் தலைவராக உயர்ந்து நிற்பதைக் கண்டு மிக்க பூரிப்படைகின்றேன்.

நடுநிலை தவறாத கல்வி அழகும், எளிமையான நடையும் எல்லோருடனும் அன்புடன் பழகும் பெருந்தன்மையும், இவரது அணிகலன்கள் என்றால் அது மிகையாகாது. தனித்துப் பல்கலைக்கழகத்துடன் நின்றுவிடாது தான் கற்ற கல்வியை சமூகத்துடன் இணைந்து ஆற்றும் – சமூக, சமயப் பணிகள் பாராட்டுதற்குரியது. இணுவில் லயன்ஸ் கழத்தின் தலைவராக இருந்து அவர் நல்கும் சேவைகள் பற்பல.

இணுவிலில் திருமணம் செய்து பிள்ளைச் செல்வங்களைப் பெற்று இல்லற வாழ்விலும் சிறந்து விளங்கும் இவர், கல்வியில் மட்டுமல்ல சமூக, சமய கலாசார பாரம்பரிய பண்பாடுகளில் இருந்து விலகாது வாழ்பவர். "எவ்வழி நல்லவர் ஆடவன் அவ்வழி நல்லை வாழிய நிலனே" என்ற அடிகளுக்கு ஏற்ப சிறப்புற வாழும் அவரது வாழ்வையும் உயர்வையும் கண்ட கொக்குவில் இந்து அன்னை பூரிப்படைகின்றாள்.

பல்வேறு சிறப்புக்களைக் கொண்ட திரு.க.தேவராஜா அவர்களுக்கு பொன்விழா எடுக்கும் விழா குழுவினரை இச் சந்தர்ப்பத்தில் பாராட்டுவதுவதுடன் விழா நாயகன் எல்லாச் சிறப்பும் பெற்று பல்லாண்டு காலம் வாழ கிருபாகர சுப்பிரமணிய சுவாமியை வேண்டி வாழ்த்துகிறேன்.

நன்றி

பொ. கமலநாதன்
அதிபர்
கொக்குவில் இந்துக் கல்லூரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எம் இதய தடாகத்தில் என்றும் வாடாத மலராக வண்ணமுற வீற்றிருக்க வாழ்த்துகிறோம்

உயர்திரு க. தேவராஜா அவர்கள் தன் 50வது அகவை எட்டுகின்ற இவ் வேளையில் பொஸ்கோ பாடசாலையின் அதிபர் ஆசிரியர்கள், மாணவர்கள் சார்பில் அன்னாருக்கு இதயம் கனிந்த வாழ்த்துக்களை சமர்ப்பிக்கின்றேன்.

பார்வைக்கு எளியவராகவும் பண்பின் சிகரனாகவும் சேவையில் தொண்டனாகவும் அறிவில் ஆதவனாகவும் விளங்குபவர் எமது அன்பிற்குரிய உயர்திரு தேவராஜா ஆவார்.

மிகப் பெரும் கல்விப் பொறுப்பை ஏற்று அல்லும் பகலும் நூல்பல ஆய்ந்து நுண்ணறிவு புகட்டுகின்ற இவர் எம் பாடசாலையோடு பின்னிப் பிணைந்த பேரறிவாளரில் ஒருவராவார். எமது பாடசாலை அபிவிருத்திச்சங்க செயலாளராக கடமையாற்றுங்கால் இவரது சேவை மனப்பான்மை எம்மை வியக்க வைத்தது. சாதி மத வேறுபாடுகளுக்கு அப்பால் தனது அறிவையும் ஆற்றலையும் மாணவர் தம் மதிநலம் பெருக்க ஆனமட்டும் உதவிய அளப்பெரும் தொண்டனாவார்.

எங்கள் பாடசாலையின் இதய தடாகத்தில் என்றும் வாடாத மலராக வண்ணமுற வீற்றிருக்கும் திரு க.தேவராஜா அவர்கள் பொன்விழாக் காண்பது கண்டு பூரித்து நிற்கின்றோம். ஆசிரியர் மாணவர் பெற்றோர்களது பெருமதிப்பினை ஒருங்கே பெற்ற இப் பெருமகனார் ஆண்டுகள், நூறு வாழ்கவென்று இறைவனை வேண்டி நிற்கின்றேன்.

அருட்செல்வி. ஜீ. செல்வராணி,
அதிபர்,
யா/புனித ஜோண் பொஸ்கோ
வித்தியாலயம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பல்லாண்டு வாழ்ந்து பணிகள் பல புரிக

எனது பிரிவிலுள்ள மிக முக்கிய பிரமுகர்களில் ஒருவரும் யாழ் பல்கலைக்கழக வணிகத்துறைத் தலைவரும் சமூக சேவகருமான தாவடியைச் சேர்ந்த திரு. க. தேவராஜா அவர்கள் பொன் விழாக் காண்பதையிட்டு எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன். திரு. தேவராஜா அவர்கள் சிறந்த நற்குண நற்பண்புகள் படைத்தவர். இனிய சுபாவமுடையவர். சமூகப் பணியில் கூடிய ஈடுபாடு கொண்டவர். இணுவில் அரிமாக் கழகத்தின் ஆரம்பகால உறுப்பினரும் தலைவருமாவார். சமயப் பணியிலும் தம்மை ஈடுபடுத்தி தாவடி அம்பலவாண வேத விநாயகர் ஆலய பரிபாலன சபைத் தலைவராக இருந்து அரும்பணியாற்றியவர்.

எனது பிரிவின் கல்வி, கலை, கலாசார அபிவிருத்திப் பணிகளுக்கு தமது ஆதரவை எப்போதும் வழங்கி ஊக்குவிப்பவர். அவர் நல்ல ஆரோக்கியத்துடன் பல்லாண்டுகள் வாழ்ந்து நம் சமூகத்துக்கு மேலும் தொண்டுகள் புரிய வாழ்த்துகின்றேன்.

ஆ.மகாலிங்கம்,
பிரதேச செயலாளர், வலி தெற்கு,
உடுவில்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்க வளமுடன் பல்லாண்டு

என் இனிய மாணவர் திரு. க.தேவராஜாவிற்கு அகவை ஐம்பது என்பதை என்னால் நம்புவதற்கு முடியவில்லை. முந்தநாள் போன்று இருக்கின்றது. கொக்குவில் இந்துக் கல்லூரியின் வகுப்பறையில் என்முன் பாடம் கேட்டு அடக்க ஒடுக்கமாக அமர்ந்திருந்த சிறுவன் தேவராஜாதான் என் மனக் கண்ணில் ஸ்படிகமாகப் படிந்துள்ளமை தெரிகின்றது அமைதியும், ஒழுக்கமும் நிறைந்த மாணவனாக க.தேவராஜா தனது பாடசாலை நாட்களில் விளங்கினார். அதே பணிவும் ஒழுக்கமும் பல்கலைக்கழக விரிவுரையாளராக உயர்ந்து நிற்கும் போதும் மாறிவிடவில்லை. குருவை என்றும் மதித்துக் கனம் பண்ணும் பண்பின் உச்சமாணவத்திலகமாக அவர் இன்றும் விளங்குகின்றமைதான் பொன்விழாவிற் குரியவராக அறிஞர்கள் கணிப்பிட வைத்துள்ள தென்பேன்.

திரு க.தேவராஜா ஆசிரியத்திறன் குறித்து நான் பல்லாண்டுகளாகக் கேள்விப்பட்டுள்ள போதிலும், 1997/2000 காலகட்டத்தில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பதிவாளராகக் கடமையாற்றிய தருணத்தில் அறிந்து கொண்டமை எனக்குப் பெரும் திருப்தியையும் மதிப்பையும் ஏற்படுத்தின. வர்த்தகத்துறையில் நிகரில்லாத ஆசானாக அவர் விளங்கி வருகின்றமை மனமகிழ்ச்சியைத் தரும் சங்கதியாகும். தனது முழுக்கவனத்தையும் நேரத்தையும் மாணவரின் நலனுக்காகச் செலவிட்டு வருவதால் ஏனைய விரிவுரையாளர்கள் போன்று தமது பேராசிரியத் திறனாய்வுக்கான புள்ளிகளைச் சேரிக்கின்ற சுயநலத்தினுள் ஆழ்ந்து போகாது இருக்கின்றாரோ எனவும் நான் எண்ணுவதுண்டு. அவ்வகையில் இந்தப்பொன்விழா வாண்டைத் தனது சுயநலத் தேவைக்கும் பயன்படுத்தி, காலநீரோட்டத்தில் அழிந்து போகாது எழுந்து நிற்க வேண்டுமென ஆசானுக்குரிய நிலையில் தேவராஜாவைக் கேட்டுக் கொள்கின்றேன்.

மாபெரும் ஜாம்வான்கள் அரசோற்றிய/அரசோற்றும் பீடம் யாழ்பபாணப் பல்கலைக் கழகம் பேராசிரியர் க.கைலாசபதி, பேராசிரியர், சு.வித்தியானந்தன், பேராசிரியர் கா.சிவத்தம்பி, போராசிரியர் நந்தி, பேராசிரியர் அ.சண்முகதாஸ் முதலானானோர் வரிசையில் திரு. க.தேவராஜாவை நான் தரிசிக்க வேண்டுமென்பது என் பேரவா. பல்கலைக்கழகத்திற்கும், அதற்கு வெளியேயுள்ள சமூகத்திற்கும் ஏதோ ஒரு வகையில் பெருந்தொண்டாற்றியவர்/ தொண்டாற்றிவருவர்கள் அந்த ஜம்பவான்கள், பதவியையும் கதிரையையும் வெறுமனே அலங்கரித்தவர்களல்லர், பதவியால் பெருமைபெற்றவர்களல்லர், பதவிக்குப் பெருமை சேர்த்தவர்கள். வருங்காலம் திரு. க. தேவராஜாவை அவ்வாறான நிலைக்கு உயர்த்துமென்பதில் எனக்கு ஐயமில்லை. ஏனெனில், திறனும், சாதிக்கும் சக்தியும், மானிடநேயமும் ஒருங்கே பெற்ற திறமைசாலி அவராவார்

மணிவிழா, பவளவிழா, நூற்றாண்டு விழா என அனைத்தையும் காண திரு க.தேவராஜாவை வாழ்த்துகின்றேன்.

**"வாழ்க பல்லாண்டு, வளங்களுடன்"**

கலாநிதி க. குணராசா
(செங்கையாழியன்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பொன்விழா நாயகரின் பணி தொடர வாழ்த்துகின்றேன்

'அறியவற்று ளெல்லாம் அரிதே பெரியாரைப்
பேணித் தமராக் கொளல்'.

யாழ் பல்கலைக்கழக வர்த்தகத் துறைத்தலைவர் திரு. க. தேவராஜா அவர்களின் 50 வது அகவையொட்டி வெளியிடப்படும் இப் பொன்விழா மலருக்கு வாழ்த்துச் செய்தியொன்றினை வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

கல்வியும் சிறந்தோங்கும் மக்களைக் கொண்ட தாவடியூரை வாழ்விடமாகக் கொண்ட திரு. தேவராஜா அவர்கள் தான்பெற்ற கல்வியை பல்கலைக்கழக மட்டத்திற்கு உயர்த்திப் பெரும் புகழ்பெற்றவர். சிரித்த முகத்துடன் பல்கலைக்கழக மாணவரிடம் உலாவிவருவது தினமும் கவனிக்கக்கூடிய காட்சியாகும். தான் பிறந்த மண்ணின் கலை கலாசார சமய பண்பாடுகளைப் பேணிக் காப்பதில் பெரும்பங்க வகிப்பவர். திரு. க.தேவராஜா பங்குபற்றாத கலாசார சமய நிகழ்ச்சிகள் இல்லை என்று எண்ணுமளவுக்கு இத்துறைகளில் தனது பணியை ஆழமாகப் பதித்தவர்.

இவ்வண்ணம் சிறப்புற்றிருக்கும் ஒரு பெரியாருக்கு எடுக்கும் விழா சிறப்புற அமைவதற்கும், அவரின் பணி தொடரவும் எனது வாழ்த்துக்கள்.

எஸ். ஆர். ஜெயப்பிரகாசம்,
நிர்வாக அதிகாரி - யாழ் மாவட்ட சமாதான நீதவான்,
பிரதேச செயலகம், வலி. தெற்கு,
உடுவில்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கடமைவீரன்

உலகில் பிறக்கின்ற ஒவ்வொரு மனிதனும் தானும் வாழ்ந்து பிறரையும் வாழவைக்க வேண்டும் என்ற எண்ணங் கொள்ள வேண்டும். ஆயினும் அவ்வாறாக வாழ்பவர் வெகுசிலரே. அத்தகைய நன்மனம் கொண்டோரில் ஒருவராகத் திரு.க. தேவராசா அவர்கள் விளங்குகிறார்கள்.

காட்சிக்கு எளியவராக கடமை வீரனாக, வேண்டும் சமயத்தில் உதவும் கரமாக விளங்குபவர் அவர்.

நான் வயதில் கூடியவனாக இருந்த போதிலும் அவரது மாணவன் என்று சொல்வதில் பெருமையடைகின்றேன். இப்படியாக என்போன்றோர்க்கு மட்டுமன்றி பலருக்கும் வழிகாட்டியாக விளங்கும திரு. க.தேவராஜாவுக்குப் பொன் விழா எடுத்துச் சிறப்பிப்பது மிகவும் பொருத்தமானதே என்பதில் ஐயமில்லை.

வந்தாரை வரவேற்பதிலும் அவர்களது தேவை அறிந்து ஆவன செய்வதிலும் அவருக்கு நிகர் அவரே. கன்றுக்கு இரங்கிப்பால் கொடுக்கும் தாய்ப்பசு போல கல்வியைப் புகட்டுபவரும் அவரே. எல்லாம் இறைவன் செயல் என்று எண்ணி ஆண்டவனைத் தினந்தோறும் தொழுபவரும் அவரே.

இப்படியாகத் தொண்டுமனத்தினராகத் திகழும் திரு க.தேவராஜா அவர்கள் பல்வகைச் சிறப்புகளுடனும் பல்லாண்டுகள் வாழ வேண்டும் என்று வாழ்த்துகின்றேன்.

**திரு நடராசா. சிவரத்தினம்** B.A,
**முகாமையாளர்,**
**இலங்கை வங்கி,**
**சுண்ணாகம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பல்லாண்டு காலம் வாழ பரராஜசேகரப்பிள்ளையார் பாதம் பணிந்தோம்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் முகாமைத்துவ, வணிக பீடத்தில் வணிகத்துறைத் தலைவராக விளங்கம் பெருமதிப்பிற்குரிய உயர்திரு க.தேவராஜா அவர்கள் கல்வித்துறைக்கும், சமயத்துறைக்கும், முழுச் சமூகத்திற் குமே தன்னை அர்ப்பணித்து வரும் பெருமகனாவார். அறிவின் விளைவால் அமைதியும் அடக்கமும் இனிமையோடு இணைந்த எளிமையும், தேவராஜா அவர்களின் தன்மையான புன்னகையில் நிதமும் வெளிப்படும் அவரது சான்றாண்மையின் சான்றுகள். அவர்கள் போன்றோரின் சிந்தனைகளும் செயற்பாடுகளுமே தமிழ்கூறும் நல்லுலகம் வாழ வகை செய்யப்பட்டுள்ளது.

அமைதியான சுபாவம் உடைய தேவராஜா அவர்கள் மற்றவர்களுடன் அன்பாகப் பழகுவார். சக விரிவுரையாளர்கள் , பேராசிரியர்கள், நண்பர்கள், மற்றும் மாணவர்கள் எல்லோரும் அவரை மிக விருப்போடு அணுகுவர். அவர் எமது சிறந்த விருப்பத்திற்குரிய வாடிக்கையாளர் மட்டுமன்றி, எமது வங்கி சமூகத்தால் மதிக்கப்படும் ஆசானுமாக எல்லோராலும் பெருமதிப்பைப் பெற்றவர். இத்தகு சிறப்புமிக்க தேவராஜா அவர்கள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துக்கும், சமூகத்திற்கும் பல்லாண்டுகள் சேவை செய்ய வேண்டும் என்பதே எமது பிரார்த்தனையாகும்.

அவரின் பொன்விழாக்கண்டு பெருமைகொள்ளும் இணுவில் பதிவாழ் சமூகத்தினருடன் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக, மக்கள் வங்கிக் கிளையினராகிய நாமும் பங்குகொண்டு, அவரும் அவரது குடும்பத்தினரும் பல்லாண்டு காலம் வாழ வேண்டுமென எல்லாம் வல்ல பரராஜசேகரப் பிள்ளையாரின் பாதாரவிந்தம் பணிந்து வாழ்த்துகிறோம்.

அவரது பொன்விழா மிகவும் சிறப்பாக நடந்து சதாபிஷேகம் வரை அவரது பணிதொடர எல்லாம் வல்ல இறைவன் அருளை வேண்டி வாழ்த்துகிறோம்.

திருமதி ப. ரகு,
மக்கள் வங்கி,
யாழ் பல்கலைக்கழகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைவே எங்களின் உயர்வு

கொக்குவில் இந்து அன்னையின் இணையில்லாப்
பெருமைக்கு காரணமாகும் முத்துக்களில் ஒன்று
முதிர்கிறது – அந்த 'ராஜா' வுக்கு இன்று பொன்விழா
தேவாவை நாமும் நிறைமனத்தோடு வாழ்த்துவோம்.

## வெண்பா

ஆல்போல் தழைத்து அறுகுபோல் வேரூன்றி
சால்பே தலை நிற்கும் சற்குணராய் – மேலான
ஓண் பொருளை யேத்திநிதம் உத்தமரே – எஞ்ஞான்றும்
கண்போல வாழ்வீர் கனிந்து!

இஃது இல்லறத்தில் அவர் இணைந்த ஞான்றில்யான்
பாடிய இதம் நிறைந்த வாழ்வு – அப்பாடலாலேயே
இன்றும் அவர்களை வாழ்த்துவதைவிட வேறேது இனியது?

அன்புடன்
எம் எஸ் ஸ்ரீ தயாளன்,
உதவிப் பணிப்பாளர் - கல்வி, தமிழ்த்துறை,
கல்வி வலயத் திணைக்களம்,
யாழ்ப்பாணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மனித நேயமிக்க சமூக சேவையாளன்

அறிஞர்கள், ஆராய்ச்சியாளர்கள், ஆன்மீகவாதிகள், இலக்கியவாதிகள், ஈகையாளர்கள், தொழிலதிபர்கள், மருத்துவர்கள், பொறியியலாளர்கள், சமூக சேவையாளர்கள் எனத் தன் மைந்தர்கள் பல்வேறு துறைகளில் முன்னணி வகிப்பதைக் கண்டு பெருமகிழ்ச்சியடைகின்றது கொக்குவில் இந்துக் கல்லூரி. எமது இந்துக் கல்லூரியின் வளர்ச்சிக்கு அன்றுமுதல் இன்று வரை உதவுவதில் கல்லூரியின் பழைய மாணவர் சங்கம் கண்ணும் கருத்துமாயிருந்து செயற்படுகின்றது. பழைய மாணவர் சங்கத்தின் செயற்பாடுகளில் அதிக ஆர்வத்துடன் பங்குகொண்டு உழைப்பவர் மதிப்பிற்குரிய திரு. தேவராஜா. அவரது சேவையைப் பாராட்டிக் கௌரவிக்கும் வகையில் அவரைப் பழைய மாணவர் சங்கத் தலைவராகத் தெரிவு செய்து மகிழ்ந்தனர் எமது பழைய மாணவர்கள். சங்கத்தின் தலைவராகத் திறம்படச் செயலாற்றியவர். ஏமது கல்லூரியின் புகழ்பூத்த அதிபர்களில் ஒருவரான திரு. ஹண்டி பேரின்பநாயகம் அவர்களின் நினைவாகச் சிறுவர் நூலகமொன்றினை உருவாக்கத் திறம்படச் செயலாற்றியமையை எம்மால் பாராட்டாமல் இருக்கமுடியாது.

மனித நேயமிக்க சமூக சேவையாளன். சேவை என்பது அவர் உயிர்மூச்சு. உற்றார், உறவினர், நண்பர்கள், தெரிந்தவர்கள், தெரியாதவர்கள் என்று பாராது எந்த உதவி கேட்டாலும் தயங்காது முன்னின்று உதவுபவர் திரு தேவராஜா. கேட்காமலே, கெஞ்சாமலே தேவையறிந்து ஓடிச் சென்று உதவிகள் செய்யும் பெருமகன். இணுவிலில் லயன்ஸ் கழகம் அமைத்து அதன் முதல் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டவர் லயன் தேவா.

இன்முகம், இன்சொல், நற்செயல், அடக்கம் என்பன அவரது அணிகலன்களாகும். பல்கலைக்கழக வணிகத் துறைத் தலைவர் என்ற அகந்தையின்றிப் பழகுபவர். அவரது ஆற்றல் அளவிடற்கரியது. ஆளுமை மகத்தானது. வியத்தகு வணிக விற்பன்னர். நல்லதொரு அறிஞர் குழாமை உருவாக்கும் வல்லவர் லயன் தேவா அவர்கள்.

தெய்வ பக்தியும் திருத்தொண்டும் அவரது சிறப்பியல்புகளாகும். எல்லாவற்றிற்கும் மேலாக கொக்குவில் இந்துக் கல்லூரி மீது அவர் வைத்திருக்கும் அன்பும் ஆர்வமும் மகத்தானது. திறமைமிக்க தேவா அவர்களும் அவரது குடும்பத்தினரும் பல்லாண்டு காலம் பெருவாழ்வு வாழ வாழ்த்துவதுடன் தேவா அமிர்தம் மலரில் எமது சங்கத்திற்கும், வாய்ப்பினைத் தந்துதவிய தேவா பொன் விழாக் குழுவினருக்கும் கொழும்புக் கிளைசார்பில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

லயன் அ.பற்குணம்,
(அகில இலங்கை சமாதான நீதவான்)
செயலாளர் - கொ.இ.க. பழைய
மாணவர் சங்கம்,
கொழும்புக் கிளை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலய பரிசளிப்பு விழாவின்போது உரையாற்றுதல்.



பிராந்திய கருத்தரங்கில் பங்குபற்றிய மாவட்ட கவணர் லயன் தில்லைநாதனிடம் பரிசு பெறுதல்.



பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாவில் கலந்துகொள்ளல்.



யாழ்.தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரி வருடாந்த ஒன்றுகூடல் வைபவம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ். சுண்டிக்குளி மகளிர் கல்லூரியின் கருத்தரங்கில் உரையாற்றுதல்.




யாழ். வேம்படி மகளிர் கல்லூரியின் புத்தக வெளியீட்டில் பங்குகொள்ளல்



யாழ். கொக்குவில் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கத் தலைவராக பணியாற்றுதல்.



இணுவில் இந்துக்கல்லூரியின் பாலர் பிரிவு திறப்பு விழாவில் பங்குகொள்ளல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தேவாவின் சமூகப்பார்வை

'எங்கும் பாரடா இப்புவி மக்களைப் பாரடா உனது மானிடப் பரப்பை பாரடா உன்னுடன் பிறந்த பட்டாளம் என்குலம் என்றுனைத் தன்னிடம் ஒட்டிய மக்கட் பெருங்கடல் பார்த்து மகிழ்ச்சிகொள் அறிவை விரிவுசெய் அகண்டமாக்கு விசாலப் பார்வையால் விழுங்கு மக்களை அணைந்துகொள் உன்னைச் சங்கமமாக்கு'.

என்பது புரட்சிக்கவி பாரதிதாசனின் உரிமையும் பரிவும் கூடிய வேண்டுகோள். விசாலப் பார்வையால் மக்கள் உள்ளங்களைக் கொள்ளை கொண்ட தேவா ஓர் இனிய மனிதர். பழக இனியவர். பக்குவமடைந்த உள்ளம் படைத்தவர். வையகம் பயனுற வாழத்துடிப்பவர்.

நல்லதோர் வீணை செய்தே நலங்கெடப் புழுதியில் எறிவதுண்டோ என்ற யதார்த்த உணர்வு உள்ளத்தை உந்த யாவரும் கேளீர் என்ற பரந்த நோக்குடன் உயர் பண்பும் பெருந்தகையாய் உலவுகின்ற பொன்மனத்துச் செம்மல் தேவா மனிதம் நிரம்பிய மானுடன் சொல்லும் செயலுமாய் எம்மிடை வாழ்கின்ற பெருமகன்.

முந்தித் தாவடிக் குற்றவன் என சேனாதிராய முதலியாரின் நாவிற்பட்ட தாவடியைப் பிறப்பிடமாகவும், இணுவையம்பதியைப் புகுந்த இடமாகவும் கொண்டவர். ஆயின் இவ்விரு ஊர்கள் மட்டுந்தான் உறவு பணிக்கும் ஊர்களல்ல. யாதும் ஊரே என்ற பக்குவ உள்ளத்தோடு பழகும் இனிய உள்ளம் படைத்தவரை எம்மிடை கொண்டமை பெருமைக்குரியதே.

'வெள்ளத்தனைய மலர் நீட்டம் மாந்தர்தம் உள்ளத்தனையது உயர்வு' என்ற வள்ளுவன் குறளுக்கு எடுத்துக்காட்டாக அமைந்த சான்றாண்மைப் பேராளன். சமூகப் பணிகளில், கல்வி முன்னேற்றங்களில், ஈடுபாடு கொண்டு உழைக்கின்றவர் தேவராஜன் அவர்கள். வணிகத்துறைத் தலைமையோடு அகங்காரமோ, தலைக்கனமோ கொள்ளாது மிகமிகப் பணிவாகவும், அன்பாகவும் மக்கட் பரப்புடன் பணிசெய்து அணியானவர்.

வடபுலத்துப் பாடசாலைகள் சிலவற்றில் அபிவிருத்திக்கு அயராது உழைப்பவர். எனது பணிக் காலத்தில் புனித பொஸ்கோ வித்தியாலய அபிவிருத்திக்கு பாடசாலை அபிவிருத்திச் செயலாளராக இருந்து உன்னத செயற்பாடுகளை இயற்றியமை கண்கூடு. இதேபோல் கொக்குவில் இந்துக் கல்லூரி போன்ற பிற கல்விச்சாலைகளுக்கும் உதவுகரம் நீட்டும் உள்ளம் படைத்தவர்.

கல்விப் பணியும் சமூகப்பணியும் இருகண்களாகக் கொண்ட தேவா உறுதியான செயற்பாட்டு வீரர். ஆயின் புனிதமான முறுவலிக்கும் புன்சிரிப்பை செயலூக்கங்கட்கு ஊக்கியாக்கிக் கொள்பவர். உடுக்கை இழந்தவன் கைபோல நண்பர்கள், அன்பர்கள் இடுக்கண்களையும் பான்மை கொண்ட தேவா இன்று பொன்விழாவை எட்டிய அகவையினர். பிசிராந்தையர் பேசிய சான்றோர் பலர் யான் வாழுமூர் என்பது ஈழத்துத் திருவாரூராம் இணுவையம்பதிக்கு தேவாவினால் அணிபெறுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரிது அரிது மானிடராதல் அரிது. அத்துடன் ஞானமும் கல்வியும் நயத்தல் அதனிலும் அரிது. அந்தக் கூற்றுக்களுக்கு அச்சொட்டாக எம்மிடைவாழும் பலரில் தேவா மேலானவர் என்று கூறினாலும் மிகையாகாது. இணுவையம்பதி, தாவடியூர் இவை தந்த ஒரு புதல்வன் 'சாதிகள் இல்லையடி பாப்பா' என்று சாற்றிய பாரதியின் வழிநின்றவர். நிற்பவர் என்னும், போது உள்ளம் விம்முகிறது. பாழாய்ப்போகும் பாருக்கு - குறிப்பாகத் தமிழ் மண்ணுக்குத் தேவையானதொன்றுமாகும். அவ்வழி செவ்வழியெனச் சிந்தைகொள்பவர்கள் மலிய வேண்டும். பல நிகழ்வுகளில் தேவாவின் அசலம் போன்ற ஆணித்தரமான செயற்பாட்டை இல்லை உறுதிப்பாட்டை அனுபவித்திருக்கின்றேன்.

முற்றிய நெல்லைப்போல் பதவி தேவாவை அசைத்ததில்லை. பணிவு மேலும் மேலும் கவிந்து நிற்பதைப் பார்த்திருக்கிறேன். நாட்டு நிகழ்வுகள் அனைத்திலும் அங்கிங்கெணாதபடி எங்கும் பிரகாசமாய் நிற்கும் இறைவன்போல் பொறுமையுடன் கூடிய புன்சிரிப்புடன் பங்களிப்புச் செய்வதை உணர்ந்திருக்கிறேன்.

பெரியோரைக் கனம் பண்ணும் மேன்மைக்குரியவர். சிறியோரைத் தாங்கும் சிந்தையுடையவர். செயல்களை எண்ணிய முடிய, நல்லவே எண்ணித், திண்ணிய நெஞ்சத்தோடு திறம்படச் செயலாற்றுபவர். ஒரு சொல்லிலே தேவாவைக் கூறப்போனால் அவரோ சமூகப் பிராணி சாத்வீகப் பேரொளி.

தொண்டர்தம் பெருமை சொல்லவும் பெரிதோ என்பதற்கமைய இறையுள்ளம் கொண்ட தேவா எங்களுக்கு மேலும் பணி பல செய்ய இன்னுமொரு பொன்விழாக்காலம் பாரிடை உலவ உலகெலாம் உணர்ந்தோதற்கரியவன் உறுதுணைபுரிய உளமார வேண்டுகின்றேன். நூறு வரை ஊறுபடாது வாழ இணுவையம்பதியுறை விநாயகனும் முருகனும் அம்மை சிவகாமியும் அருள்பாலிக்கட்டும்.

சமூக நற்பார்வை கொண்டார் சாந்தமே பொலிவாய் கொண்டாய்
சாற்றிடும் பணிகள் யாவும் நீட்டமாய் நிறைவு கண்டாய்
போற்றிடும் விதத்தில் மண்ணில் பொலிவுறு இதயம் விண்டாய்
நாற்றிசை எங்கும் நின்தன் நற்புகழ் மேவ வாழ்வாய்.

அன்பன் கோ.சி. வேலாயுதம்,
முன்னாள் பிரதிக்கல்விப்பணிப்பாளர்,
யாழ் கல்வித்திணைக்களம்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிரித்த முகமும் செய்யும் அவாவும்

சிரித்த முகத்துடனும் எதையாவது செய்யவேண்டும் என்ற அவாவோடும் வாழ்கின்ற எனது நண்பன் தேவராஜா ஆபத்தான உதவிகள் என்று தெரிந்தும் கூட யார் கேட்டாலும் மறக்காது உதவிசெய்ய விழைகின்ற தன்மையே அவரது தனித்த இயல்பு. நண்பன் தேவராஜாவை பல கோணங்களில் பார்க்கலாம். நண்பர் குழாத்தின் பார்வையில் சிலர் வீட்டில் இலட்சுமியை வைத்துக்கொண்டு வெளியிலே சரஸ்வதிக்காக அலைபவர். ஆண்டின் ஆரம்பத்தில் நண்பர்களினதும், அந்தக் காலத்தில் மாத்திரம் உதவிகேட்டு வருபவர்களினதும் பிள்ளைகளின் பாடசாலை அனுமதிக்காக பாடசாலைகளின் படிகளில் ஏறி அலைந்துதிரியும் தேவராஜாவைப் பார்த்து நண்பர் குழாம் கூடிக் கதைப்போம் 'யாரோ பெற்ற பிள்ளைக்கெல்லாம் தகப்பன் மாதிரி தேவா அனுமதி கேட்டுத் திரிகிறானே' பிள்ளையைப் பெற்றவர் கூட காட்டாத அக்கறையும் அலைச்சலும் இவருக்கு உண்டு. பாடசாலையில் மாணவர்களைச்சேர்ப்பது மாத்திரமல்ல பாடசாலையை அபிவிருத்தி செய்வதற்காக கல்விக்கந்தோர் வரை பலமுறை சென்று பணியாற்றியும் வருகிறார். நான் அறிந்தவரையில் கொக்குவில் இந்துக் கல்லூரி, தாவடி சைவப் பாடசாலை, சென்ஜோன் பொஸ்கோ பாடசாலைகளின் பௌதீக கட்டட வளர்ச்சிக்காக பலமுறை கல்விக் கந்தோருக்கு போய்வந்ததைப் பார்த்திருக்கிறேன். பல்கலைக்கழகத்திலும் வணிகத்துறை மாணவர்களின் விருப்பத்துக்குரிய விரிவுரையாளர்களில் ஒருவர். பல்கலைக்கழக ஆசிரிய மத்தியில் அன்பாகப் பழகும் சுபாபமுடையவர் என்ற நன்மதிப்பும் உடையவர். இவரும் இவர் குடும்பமும் நீண்டகாலம் நல்வாழ்வு பெறவேண்டும் என்பதே எங்கள் அவா.

ப.சிவநாதன்
தலைவர்
பொருளியற்றுறை
யாழ். பல்கலைக்கழகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தலைமைத்துவத்திற்கான அவதார புருஷர்

பேராசான் தேவராஜா அவர்கள் ஆரம்பக்கல்வியையும் இரண்டாம்தர கல்வியையும் தாவடி இந்து தமிழ்க் கலவன் பாடசாலையிலும் கொக்குவில் இந்துக் கல்லூரியிலும் முகாமைத்துவம் சார்ந்த பட்டப்படிப்பை ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்திலும், முதுமாணிப் பட்டத்தை யாழ். பல்லைக்கழகத்திலும் பெற்றார். கல்வியிலும்,பண்பிலும் உயர்ந்து நின்ற இவரைப் பதவிகள் படிப்படியாக உச்சநிலைக்கே இழுத்துச்சென்றன. இந்த வகையில் யாழ். பல்கலைக்கழகத்தில் உதவி விரிவுரையாளராக, சிரேஸ்ட விரிவுரையாளராக பணி புரிந்தார். பதவியின் உச்சகட்ட மாக இளம் வயதிலேயே அதிக மாணவர்களைக்கொண்ட வணிகத்துறைக்கு தலைவராக நீண்டகாலம் பதவி வகிக்கின்ற பெருமையும் இவரையே சாரும்.

மேலும் ஆலய பரிபாலனசபைத்தலைவர், பாடசாலைகளில் பழைய மாணவர் சங்கம், பெற்றோர் சங்கம் ஆகியவற்றின் பொறுப்பு வாய்ந்த பதவிகளை வகிக்கின்றார், வகித்துக் கொண்டிருக்கின்றார். மேலும் லயன்ஸ் கழகம், கூட்டுறவு அமைப்பு ஆகியவற்றில் முகாமை மட்டப்பொறுப்புக்களை வகித்தார். கல்விசார் பதவிகளிலும் சமூக அமைப்புக்களிலும் சமய அமைப்புக்களிலும் பொறுப்பு வாய்ந்த பதவிகளை எல்லோரினதும் ஆசியுடன் மேற்கொள்கின்ற பெருமை இவரையே சாரும். பதவிகளால் இவர் பெருமை அடைந்ததை விட இவரினால் பதவிகள் பெருமை அடைந்ததும், சேவை பெற்றோருமே அதிகம். இத்தகைய நிலைக்கு இவருடன் இணைந்து காணப்பட்ட தலைமைத்துப் பண்புகளே அடிப்படைக் காரணமாகும். ஒருவர் தன்கீழ் பணிபுரிகின்ற பணியாளர்களைத் தாமாகவே முன் வந்து முழுவினைத்திறனையும் வழங்கி சேவை செய்ய வைப்பவரே உண்மையான தலைவராவார். இந்த வகையில் இவர் எங்கு பதவிகள் வகித்தாரோ அங்கெல்லாம் இவருடைய செயற்பாடுகளும் அதன் விளைவுகளும் உதாரணமாக அமைந்துள்ளது.

01. இவர் பொறுப்புக்களை ஏற்கும்போது செய்து முடித்து சாதனை படைப்பேன் என்ற மன உறுதியுடன் பொறுப்பேற்பதுண்டு. இதற்கு அண்மையில் யாழ். பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தின் பதவியை ஏற்ற போது பலர் அவரை சூழலைக் காட்டி பயமுறுத்திய போதும் அதனை ஏற்று அங்கத்தவர்களுக்கும் சமூகத்துக்கும் சேவைகளை வழங்கிய வண்ணம் இருக்கிறார்.

02. தலைமைத்துவத்துக்கு நடுநிலைமை முக்கியமானது. அந்த வகையில் பிரதேசம், உறவு, நட்பு, அறிந்தவர், என்ற வேறுபாடின்றி சகலரையும் சமமாகமதித்து சேவை வழங்குகின்ற வழிநடாத்துகின்ற பண்புடையவர். இதனை அவரது தலைமையில் பணிபுரியும் ஊழியர்கள் மீது காட்டுகின்ற அக்கறை இதனை வெளிப்படுத்துவதாக அமைந்திருக்கின்றது.

03. ஒரு தலைவர் மற்றவர்களுடன் சுமூகமாகப்பழகும் பண்புடையவராக இருத்தல் வேண்டும். இவரது சிரிப்பு எந்தக் கோபக்காரனையும் சாதாரண நிலைக்குக்கொண்டு வந்து விடும். இது ஏனைய பணியாளர்களை மகிழ்ச்சியான சூழலில் பணிபுரிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைக்கிறது. இந்நிலை ஒத்துழைப்பை வழங்கவும், ஊழியர்கள் வினைத்திறனை அதிகரிக்கவும் இந்நடத்தை உதவுகிறது.

04. ஒரு தலைவர் மற்றவர்களிடம் தங்கியிருக்கக்கூடாது. அன்பளிப்புக்கள், சலுகைகளைப் பெறக்கூடாது. இந்த வகையில் இவர் பண அடிப்படையிலும், பொருள் அடிப்படையிலும், ஏனையோருக்கு உதவி தானாகவே முன்வந்து உதவி செய்யும் பண்புடையவர். இதனால் இவர்மீது ஏற்படும் விசுவாசம் பணியாளர்களை வினைத்திறனுடன் பணிபுரிய வைக்கிறது.

05. திறனான தலைவர் அன்பு காட்டவேண்டும். ஜனநாயக ரீதியான அணுகுமுறை வைத்துக்கொள்ள வேண்டும். அதிகார ரீதியான அணுகுமுறையைக் கையாள்வதில்லை. இவரது செயற்பாடுகள் வேண்டுதலாக இருக்குமே தவிர கட்டளையாக இருக்காது. இந்த வகையில் குழந்தையிலிருந்து முதியோர்வரை சிற்றூழியர்களிலிருந்து மேல்மட்ட முகாமை ஊழியர் வரை அன்பான அணுகுமுறையைக் கொண்டவர்.

06. தலைவர் விட்டுக்கொடுக்கின்ற விடயங்களுக்கு விட்டுக்கொடுக்கும் பண்புடையவர். ஒருவர் தனது நிலைமையைக் கூறும்போது சரியெனத் தெரிந்தால் ஏற்றுச்செயற்படும் பண்புடையவர். இதனால் ஒவ்வொருவரும் தமது மன அபிப்பிராயத்தை தெரிவிக்கக்கூடியதாக இருக்கும். ஒவ்வொருவருடைய சரியான நிலையை ஏற்றுச்செயற்படும் பண்புடையவர்.

07. நிறுவனச் சொத்துக்களை பொது இலக்கை அடைவதற்கே பயன்படுத்துவார். தனது சொந்த நலன்களுக்கு பயன்படுத்த மாட்டார். எமது வணிகத்துறைக்கு ஒப்படைக்கப்பட்ட சகல சொத்துக்களையும் துறைக்குரியது எனக்கருதி சகலரும் சமமாகப் பயன்படுத்த அனுமதிப்பவர். ஏனையோரைப் போல திணைக்களச்சொத்துக்கள் தலைவரக்கெனக் கருதி வைத்திருந்து செயற்படுபவர் அல்ல. இது ஏனையோரை தூண்டுகின்ற செயற்பாடாக அமைகிறது.

08. முன் மாதிரி தலைவர் இருக்க வேண்டும் ஒரு துறை வளர்ச்சியடைய வேண்டுமாயின் சகல பணியாளர்களினதும், ஒத்துழைப்பு வேண்டும். ஒத்துழைப்பு இல்லாமல் தலைவர் மட்டும் செயற்படமுடியாது. இந்த வகையில் ஏனைய துறைத் தலைவருக்கு முன் மாதிரியாக செயற்படுபவர், வழிப்படுத்தல், பொறுப்பொப் படைத்தல்,பணியாளர்களை வழிப்படுத்துபவர்.

09. எங்கள் தலைவரின் வெற்றி அவருடைய சமூக அக்கறையிலும் தங்கியிருக்கிறது. தற்காலத்தில் தானும் சூழலும் வாழ்ந்தால் போதும் என்ற எண்ணம் உள்ளவரே அதிகம் இந்த நிலையிருந்து விடுட்டு சமூக சேவையின் மூலம் அவர்கள் அடையும் வளர்ச்சியிலும், மகிழ்ச்சியிலும் இனிமை காண்பவரே இவர். கல்வியுடன் சேர்ந்த செல்வமே சிறப்புடையது. சாதாரண மக்களும் பிள்ளைகளைக் கற்பிப்பதற்கு பாடசாலைகளில் அனுமதி பெற்றுக்கொடுத்து அவர்களின் சமூக அபிவிருத்திக்கு வித்திட்டவர். இவர் பணியின் சிறப்பினை இவர் செய்த கல்விச்சேவை மூலம் யாவரும் அறிவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10. தலைமை வகிக்கின்ற ஒருவர் மனித நடத்தையைப் புரிந்தவராக இருக்க வேண்டும். குழு நிகழ்வு தனக்கு எத்தகைய தாக்கத்தை உருவாக்கமோ அதே தாக்கத்தை உருவாக்கும் என்பதனை உணர்ந்து வழிப்படுத்தும் பண்பாளர். அந்த வகையில் அவரது கட்டளைகள் நிறைவேற்றக் கூடியதாகவே அமைந்து இருக்கும்.

தொழில்நுட்பக் கல்லூரி உயர் தொழில் நுட்பக் கல்லூரி , பல்கலைக்கழகம், ஏனைய பல மட்டக் கருத்தரங்குகளில் பங்கு பற்றியதனால் வணிகக் கல்வியை போதித்ததன் மூலம் யாவரும் இவருடைய மாணவர்களாக்கியுள்ளார்.

இவரது சேவையால் உயர்ந்த நிலையில் பலர் உள்ளவர். இதில் நானும் ஒருவன். பல்கலைக்கழகம் பட்டப்படிப்பினை முடித்து வெளியேறியபோது கல்விக்கான வாய்ப்பினை உருவாக்கித்தந்து வணிகக் கல்வியில் பல நூல்களை எழுதவும், கல்விச் சேவையினை அளிக்கவும் முழுக்காரணமாக இருந்து வித்திட்டு வளர்த்தவர் இவர்.

மேற்கூறிய வழிகளால் தலைவருக்கும், தலைமைத்துவப் பண்புக்கும் முன் உதாரணப்புருஷராக இவர் விளங்குகிறார். அத்துடன் நல்லன எண்ணி, நல்லன செய்து, தன்நலம் கருதாது பிறர்நலன் பேணும் அதி உத்தமர். நற்பண்புகள் யாவும் ஒருங்கிணைந்த பண்பாளர். இவரின் சேவையையும் பண்பினையும் எவரும் போற்றாமல் இருக்க முடியாது. இத்தகைய பண்பாளர் சகல வளத்துடன் சகல சௌபாக்கியத்துடனும் நீடூழி வாழ்ந்து சேவை அளித்திட எல்லாம் வல்ல இறைவனை நாம் வேண்டுகிறோம்.

இ.இரட்ணம்
சிரேஸ்ட விரிவுரையாளர்,
வணிகத்துறை,
யாழ். பல்கலைக்கழகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஒரு மாணவியின் பார்வையில் தேவா......

'தேவாமிர்தம்' இன்று மொட்டவிழும் ஓர் முழுமலர். இதழ்விரித்துச் சிரிக்கும் ஓர் பன்னீர் மலரின் ஐம்பதாவது அகவையில் பொருத்தமான பெயரோடு வெளிவருகின்றது தேவாமிர்தம்.

நிமிர்ந்த நடை, நேர்கொண்ட பார்வை, அமிர்தமாய்ப் பொழியும் வார்த்தைகள், தாராள மனசு, இவை தான் தேவாவை அலங்கரிக்கும் அணிகலன்கள். இதுவரைகாலக் கல்வி வாழ்க்கையில் நான் சந்தித்த நல்லாசிரியர்கள் பலர். இவர்களுக்கெல்லாம் முன்னுதாரணமாய் விளங்கியவர் தேவா என்றால் மிகையாகாது.

ஸ்ரீ ஜெயவர்த்தனபுரப் பல்கலைக்கழகத்தில் தொழில் நிர்வாகத்தில் விஞ்ஞானமாணிப் பட்டத்தினைப் பெற்றுச் சிறப்புச் சித்தியடைந்த தேவா தனது சேவையைத் தனது மண்ணுக்கு ஆற்றவேண்டும் என்ற ஆவலோடும் அவாவோடும் இங்கே வந்து காலூன்றியவர். பல்கலைக்கழகத்தின் சேவையில் 20ற்கும் மேற்பட்ட வருடங்கள் சேவையாற்றி தனது நன் மாணாக்கர் பட்டியலை நீளச்செய்து கொண்டிருக்கும் இவர் பல்கலைக்கழகத்தில் மாத்திரமே தனது அறிவுச் சுடரின் மிளிர்ச்சியை மட்டுப்படுத்திவிடவில்லை. கல்விப் பொதுத் தராதர உயர்தர மாணவர்களின் கல்வி முன்னேற்றத்திற்கும் கூட தனது சிறந்த பங்களிப்பை ஆற்றியவர். இன்றும்கூட ஆசிரியர் சமூகத்திற்கான பல்வேறு கருத்தரங்குகளை ஒழுங்குபடுத்தியும் கொண்டுநடாத்தியும் மாணவர் கல்விக்குச் சிறந்த வழிசமைத்துக் கொடுப்பதில் இவர் ஆற்றும் பங்கு குறிப்பிடத்தக்கது.

கல்வியில் தனது அறிவு வளத்தை விருத்திசெய்யும் நோக்கோடு முதுகலைமாணிப் பட்டத்தினையும் பெற்றுக்கொண்ட இவர் எத்தனையோ முதுகலை மாணிகள், முதுதத்துவமாணிகள் உருவாகக் காரணமாக இருந்திருக்கிறார், இருந்து கொண்டிருக்கிறார் என்பது மாணவ சமூகத்தின் ஓர் நற்பயன் என்றே கூறவேண்டும்.

தாவடி இவர் பிறந்த ஊர். அதன் அயலூர் இணுவில் இவர் வாழ்விற் சிறப்படைந்த ஊர். ஆனால் இவரது சேவை பரந்து விரிந்தது. ஒரு சில ஊர்களில் மட்டுமல்ல யாழ்ப்பாணக் குடாநாடே இவரால் மகிழ்வு பெற்றிருக்கின்றது என்பதனைக் குறிப்பிட்டேயாக வேண்டும்.

தேவா ஒரு சிறந்த சமூக சேவையாளன். தனிநபராகவும் அமைப்புக்களினூடா கவும் இவர் ஆற்றிய சேவைகள் பட்டியல் ஒன்றுக்குள் அடங்கிப் போய்விடக்கூடிய வையல்ல. எங்கு, எப்போது, யாருக்கு என்ற பேதமின்றி தனது நேசக்கரங்களை நீட்டுவதில் இவருக்கு நிகர் இவரேதான். அரிமாக் கழகத்தின் தலைவராக இருந்தும் இவர் பல சேவைகளை வழங்கியிருக்கின்றார், வழங்கிக் கொண்டிருக்கின்றார்.

தாராள சிந்தை கொண்ட தேவா, எனது நல்லாசிரியர், நீண்டகாலம் நலமோடு வாழ்ந்து இந்த மண்ணுக்கு சேவையாற்றி வழிகாட்ட வேண்டுமென்று இறைவனைப் பிரார்த்தித்து எனது நல்லாசிரியன் நீடுழி காலம் வாழ வேண்டுமென்று வாழ்த்தி நிறைவு செய்கின்றேன்.

திருமதி. நித்தியலட்சுமி தர்மசீலன்,
தலைவர், முகாமைத்துவத்துறை,
யாழ் பல்கலைக்கழகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## யா/தாவடி இந்துத் தமிழ்க் கலவன் பாடசாலையின் வளர்ச்சிக்கு

## திரு.க. தேவராஜா (வர்த்தகத்துறைத் தலைவர்) அவர்களின் சேவை

யா/தாவடி இந்துத் தமிழ்க் கலவன் பாடசாலையில் 1987ல் அதிபராக இருந்த அருவை நாகராஜன் அவர்களின் காலத்தில் பழைய மாணவர் சங்கம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டவேளை திரு. க. தேவராஜா அவர்கள் செயலாளராக நியமிக்கப்பட்டார். அன்று தொடங்கிய இச் செயலாளர் பதவியை (1987 – 1999)வரை திறம்பட ஆற்றிவந்தார்.

அவரின் செயற்பாட்டால் தான் குறித்த பாடசாலையில் கல்விகற்ற பழைய மாணவர்கள் பலர் அங்கத்தவர்களாகச் சேர்ந்து ஒரு ஸ்திரமாக பழைய மாணவர் சங்கத்தை உருவாக்க முடிந்தது. பழைய மாணவர்களின் முயற்சியினாலும் பெற்றோர்களின் ஆதரவோடும் எமது பாடசாலைக்குப் புதிய காணி (7 பரப்பு) வாங்கப்பட்டது. அதன் பின்பு இவர்களின் விடாமுயற்சியினால் தற்காலிக கொட்டகை அமைக்கப்பட்டு ஆரம்ப வகுப்புக்கள் (1,2,3) ஆரம்பிக்கப்பட்டது. வெளிநாட்டில் வாழும் பழைய மாணவர்கள் பெற்றோர்களின் உதவிகளைப்பெற்று 3 மாடிக் கட்டிடம் கட்டுவதற்கு இளைப்பாறிய கல்விப் பணிப்பாளர் திரு. சிவபாதம் அவர்களால் அத்திவாரமிடப்பட்டு கட்டிட வேலைகள் ஊக்கமாக நடைபெற்ற பொழுது நாட்டில் ஏற்பட்ட அசம்பாவிதத்தால் பூர்த்தியடையாமல் தடைப்பட்டது. மாணவர்களின் கல்வியை வளர்த்துச் செல்ல வேண்டும் என்ற நோக்கை இலக்காகக் கொண்ட பழையமாணவர் சங்கம் புதிய கட்டிடத்தின் கீழ்மாடிக்கு ஓலைக்கூரை அமைத்து ஆறு வகுப்புக்கள் நடாத்துவதற்கு உதவியது. இந்நிலை இன்றுவரை அவ்வாறே வகுப்புக்கள் நடந்துகொண்டு இருக்கின்றன.

திரு. க. தேவராஜாவின் முயற்சியால் இன்றுவரைக்கும் பழைய மாணவர்கள் சங்கம் தான் விளையாட்டுப் போட்டிக்கான செலவுகளை ஏற்று உதவி செய்து வருகின்றது. 1996ம் ஆண்டு திரு. சி. சிவசுப்பிரமணியம் உப அதிபராக இருந்த காலத்தில் ஆசிரியர் பற்றாக்குறை ஏற்பட்ட பொழுது தொண்டர் ஆசிரியர்கள் இருவரை வைத்து கற்பித்தல் நடத்திய வேளை அவர்களின் வேதனத்திற்கு திரு. க. தேவராஜா அவர்களின் முயற்சியால் தாவடி வேத விநாயகர் பரிபாலன சபையும் தாவடி சத்திய சாயி பாபா நிலையமும் உதவிசெய்து வந்தது.

இப்பாடசாலைக்கு 6.10.1997 இல் புதிய அதிபராக வந்தவேளை பழைய மாணவர் சங்கத்தினர் எனக்கு உறுதுணையாக நின்று செயற்பட்டு வருகின்றனர். அதில் திரு. க. தேவராஜா அவர்கள் எந்நேரத்திலும் உதவி ஒத்துழைப்பு கேட்கும் நேரத்தில் மனம் கோணாது சேவையாற்றி வந்தார். 1999 இல் சிறுவர்கள் தரம் 1, 2, 3 மாணவர்கள் மணல் நிலத்தில் இருந்து கல்விகற்க விரும்பாத பழைய மாணவர்கள் நிலத்திற்கு சீமெந்திட்டு அவர்களின் சுகாதார வசதிகளை ஏற்படுத்திக்கொடுத்திருக்கின்றார்கள். இச் சேவை பாராட்டிற்குரியதாகும்.

நன்றி

செ. செல்வராசா,
அதிபர்,
யா/தாவடி இந்துத் தமிழ்க் கலவன் பாடசாலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பொன் விழாக்காணும் தேவா என்னும் சேவையாளன்......

அண்மைக்காலமாக இப் பிராந்தியத்தில் எல்லோராலும் பேசப்படுகின்ற செல்லமாக அழைக்கப்படுகின்ற ஒரு பெயர் தேவா திருவாளர் எனும் க. தேவராஜா யாழ் பல்கலைக்கழக வணிகத்துறைத் தலைவர் அவர்கள். பல்வேறு சிறப்புக்கள் கொண்ட இணுவில் கிராமத்தை மேலும் மெருகூட்டிக் கொண்டிருப்பவர். எமது அன்புக்குரியவர் தேவா அவர்கள் மென்மையான பேச்சு, இளகிய மனம், எதற்கும் ஆம் என்ற தலையசைப்பு, ஆழ்ந்த அறிவு, பரந்த சிந்தனை இத்தனையும் தன்னகத்தே கொண்டவர் தேவா அவர்கள்.

1976/77k; ஆண்டு காலப்பகுதியில் ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தில் தொழில் நிர்வாகமாணிச் சிறப்புப் பட்டம் பெற்று அடுத்துவந்த காலப்பகுதியில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழத்தின் வணிக்த்துறையில் உதவி விரிவுரையாளராகத் தனது சேவையை ஆரம்பித்த திரு தேவா அவர்கள் பிறந்த இடத்திற்கும் புகுந்த இடத்திற்கும் பெருமை தேடித்தரும் அளவிற்கு அவரது சேவை பரிணாமம் பெற்றுள்ளது.

இன்னார் இனியார் என்றில்லாமல் யார் சென்றாலும் அவ் வீட்டு வாயிற்கதவு எந்நேரமும் எல்லோருக்காகவும் திறந்தேயிருக்கும். அவ்வாறான ஒரு வல்லானுக்கு விழா எடுப்பதனால் இணுவில், தாவடியூர் மக்களுமே சிறப்படைகின்றனர். பொருத்தமான நேரத்தில் பொருத்தமான கைங்கரியத்தைச் செய்வதன் மூலம் இவ்விரண்டு ஊர் மக்களுமே பெருமை பெறுகின்றனர்.

சேவைக்கென்றே பிறந்த தேவா அவர்களைத் தேடிவந்தது சர்வதேச அரிமாக் கழகத் தலைவர் பதவி பொருத்தமான ஒருவருக்கே அப்பதவி வழங்கப்பட்டுள்ளது. இதனால் அக் கழகம் பெருமை பெறுகின்றது. அவர் தனது பதவிக் காலத்தில் செயற்கரிய பல வேலைத் திட்டங்களை செய்து முடித்துள்ளார். எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும். இம்மூன்றுக்கும் அவர் தனது தலைவர் பதவிக்காலத்தில் பல்வேறு ஒழுங்குகள் மூலம் பல வேலைத் திட்டங்களை முடித்து மாணவர்கள் மத்தியிலும் மக்கள் மத்தியிலும் நீங்காத இடத்தைப் பெற்றுள்ளார்.

எல்லாவற்றிற்கும் மேலாக எமது பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினராக இருந்து அவர் ஆற்றிய சேவைகள் பல அவரால் எமது சங்கமும் எமது பாடசாலையும் பெருமை பெறுகின்றது. பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினராக இருந்தகாலத்தில் பௌதீக வள, கல்வி வள அபிவிருத்தியில் அவரது சேவை காத்திரமானது. அவரால் கண்ட வளர்ச்சிகள் பல. இவ்வாறான ஒரு சேவையாளனுக்கு தக்க தருணத்தில் ஊர்மக்கள் எல்லோரும் சேர்ந்து விழா எடுப்பதையிட்டு மனமகிழ்ச்சி அடைகின்றேன். அவர் மேன்மேலும் பல சிறப்புக்கள் பெற்று பல்லாண்டு காலம் வாழ்ந்து சேவைகள் பல புரிந்து எமது கிராமத்திற்கும் தமிழ் மண்ணிற்கும் பெருமைகள் பல தேடித்தந்து இன்புற்றிருக்க இணுவில் ஸ்ரீ பரராஜ சேகரப் பிள்ளையாரை இறைஞ்சுகின்றேன்.

க.கனகராசா,
அதிபர்,
யா/இணுவில் இந்துக் கல்லூரி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இது அறிமுகமல்ல......

நான் உங்கள் முன் எழுத முற்படுவது அறிமுகமல்ல. ஏனெனில் என்றோ இவர் எல்லோரிடத்தும் அறிமுகமாகி விட்டவர். ஆகையினால் இது இவர் பற்றிய என் உளப்பதிவை கோலமிடுகின்ற ஒன்றேயன்றி வேறல்ல.

பழகுவதற்கு இனியவர். பக்குவமான பண்பாளர், காரிய சமர்த்தர், பல்வேறு வகை மனிதர்களையும் ஏக காலத்தில் கவர்வதிலும் அவர்களைப் பொது நோக்கங்களுக்காகப் பயன்படுத்துவதிலும் பட்டறிந்தவர்.

மனித தர்மங்கள், மனிதப் பெறுமானங்கள், மனித கௌரவங்கள் மதித்துப் பேணப்பட வேண்டிய சமுதாயத்துக்கு எல்லோரையும் ஆற்றுப்படுத்தப்பட வேண்டும் என்பதற்காக தன்னையே முன்னோடியாக நிறுத்துபவர். அற்புதமான அந்த ஆத்மா தான்................. மதிப்புக்குரிய வணிகத்துறைத் தலைவர் தேவராசா அவர்கள். இவர் தம் வாழ்க்கைப் பாதையிலே பதித்துவரும் தடங்கள் துலாம்பரமானவை. துல்லியமானவை. இவரது வாழ்க்கைப் பாதையானது அரும்பாகி, மொட்டாகி, மலராகி.............. என விரிந்து ஓர் பரந்த உலகை நோக்கி வலம் வருவது துலக்கமாகத் தெரிகின்றது. தனிமனிதத் தொடர்பு வழியாகவும், சமூகம் சார்ந்தும், பதவிவழி சார்ந்தும் ஆற்றிவரும் பணிகள் சீர்தூக்கிப் பார்க்கப்பட வேண்டியவை.

'கல்வியை ஊட்டுவதன் மூலம் அதன்வழி எந்தவொரு ஏழைக்கும் உதவ முடியும்'. இது அவரது தளராத நம்பிக்கை. இந்த இலட்சியத்தை இளமையிலேயே நடைமுறைப்படுத்தத் தொடங்கி விட்டார். தன் ஆரம்பக் கல்வியை யா/தாவடி இந்துத் தமிழ்க் கலவன் பாடசாலையில் ஆரம்பித்த போதே இன்வெண்ணத்தின் வழி வாழத் தொடங்கிவிட்டார். இளம் பராயம் வரை ஊர்ப்பாடசாலையிலேயே கற்றுவந்தார். இடைநிலைக் கல்வியை வகுப்பு ஒன்பதிலிருந்து யா/கொக்குவில் இந்துக் கல்லூரியில் வளர்த்துக் கொண்டார். வர்த்தகத்துறை அவரை ஆட்கொண்டது. விரும்பிக் கற்றார். அயலூர் கொக்குவில் என்பதால் நட்பும் உதவியும் அயலிலும் வளரத் தொடங்கியது.

கசடறக் கற்ற தன் பயன் க.பொ.த (சாதாரணம்), க.பொ.த (உயர்தரம்) இரண்டிலும் குறிப்பிட்டுச் சொல்லவைத்த பெறுபேறுகளைக் கண்டார். பல்கலைக்கழகக் கல்வியில் கால் பதித்தார். வித்தியோதயப் பல்கலைக்கழகத்தில் (ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகம்) தொழில் நிர்வாகமாணிப்(B. Sc. In Business Administration) பட்டம் எளிதில் சிறப்புச் சித்தியுடன் கைகூடியது. அவரது காட்டில் கல்வி என்ற மழை எப்போதும் ......... எப்போதுமே கனிந்து கொண்டிருந்தது.

தன் கல்வி வளர்ச்சியின் ஒவ்வொரு படிநிலையிலும் தந்தையார் செல்லக்குட்டியார் கந்தையாவையும் (தாவடி) அன்புத் தாயார் வைத்திலிங்கம் அன்னம்மாவையும் (இணுவில்) பெருமையோடு பார்க்கின்றார். உளமார நேசிக்கின்றார். மனக் கோவிலில் என்றும் பூசிக்கப்பட வேண்டியவர்கள் என்பார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன் மகனை சான்றோன் எனக்கேட்டு பெற்றோர் வாழ்ந்தனர். இன்றும் வாழ்ந்து கொண்டிருக்கும் தாயார் பெருமைகளை மகன் பொருட்டு சுமப்பதில் உவகை அடைகிறார். அவர் முகம் என்றும் அன்றலர்ந்த தாமரையே.

இன்றைய ஸ்ரீ ஜெயவர்த்தன புர பல்கலைக்கழகத்தில் தனது பி.எஸ்.ஸி தொழில் நிர்வாகமாணிப் பட்டப்படிப்பை மேற்கொண்டிருக்கும் சமகாலப் பொழுதினிலே 1972ம் ஆண்டில் தொகை மதிப்பு புள்ளிவிபரத் திணைக்களத்திலும் எழுதுவினைஞராக இணைத்துக் கொண்டவர். தொழிலும் கல்வியும் அன்று தன் இரு கண்கள் என மதித்தார். கல்வியில் எத்துணைச் சிறப்புக்களை எட்ட முடிந்ததோ அதே போல் தொழிலிலும் துலங்கிக் கொண்டிருந்தவர். குறுகிய காலத்துள் பல படிகளில் ஏறி நிமிர்ந்து நின்றவர். சித்திரமும் கைப்பழக்கம் போல் தொழிலும் மனப் பழக்கமானது போலும்.

இருந்தும் ........................

பல்கலைக்கழகக் கல்வியில் பெற்ற சிறப்புச் சித்தி விரிவுரையாளராகும் வாய்ப்பைக் கொடுத்தது. வித்தியோதயப் பல்கலைக்கழகத்தில் தமிழ்மூலம் ஆரம்பிக்கப் பட்ட வணிகத்துறை முதலாவது மாணவர் அணியில் இவரும் ஒருவராகும் வாய்ப்புப் பெற்றமை எதிர்கால வாழ்க்கை உயர்வுக்கும் வாய்ப்பாக மாறியது.

வளர்ச்சிப் பாதையில் கடந்துவந்த படிகளை நினைத்துப் பார்ப்பது சுவையானது. சுகமானது. வழிகாட்டிய ஆசான்கள் போற்றுதற்குரியவர்கள் என்பது இவரது நினைப்பு.

மாலை நேர வகுப்புக்கள் வைத்து இளமைக் கல்விக்கு உரமிட்ட தாவடி இந்துத் தமிழ்க் கலவன் பாடசாலை முந்நாள் அதிபர் திரு இராசசிங்கம் அவர்கள் கண்களில் நிறைந்து காணப்படுகின்றார். கனிட்ட கல்வியில் தம்மை ஆற்றுப்படுத்திய ஓய்வு பெற்ற அதிபர்கள் திரு. C.K.கந்தசாமி, சுடர். மகேந்திரன், திரு. அ.பஞ்சலிங்கம் ஆசிரியை செல்வி உமா கந்தையா ஆகியோர் தம் சித்தத்தோடு கலந்துவிட்ட ஆசான்கள் எனச் சொல்வதில் பெருமைப்படுகின்றார். பல்கலைக்கழக கல்விக் காலத்தில் திரு. எஸ் மாணிக்க வாசகர் வழிப்படுத்திய ஆற்றுமை இன்றும் மாணிக்க ஒளியாக மிளிர்கிறது என ஒளி பெருக்குகிறார்.

தமிழ் மண்ணில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் தோன்றி புதிய உள்ளீர்ப்புக்களைச் செய்து அணிகளை உள்வாங்கிக் கொண்டிருக்கும் காலம் அது. பேராசிரியர் கைலாசபதி அன்றைய துணைவேந்தர். இக்காலப்பகுதி 1977 ஜனவரியில் உதவி விரிவுரையாளராக இணைகின்றார். தனியொருவராக முழுப் பாடங்களையும் தன் துறைசார் மாணவருக்கு ஊட்டுகிறார். பொருளியற்றுறை, வர்த்தகத்துறை இணைந் திருந்த காலத்தில் கடமைச் சுமை கனக்கவில்லை. களிப்போடே கடமையாற்றத் தூண்டியது அவரை.

விரிவுரையாளராக தொழிற்படும் காலத்தில் 'நல்லாசான் எப்போதும் கற்றுக்கொண்டே இருப்பான்' என்ற கூற்றுக்கு அமைவது போல்

1990 இல் "பொதுக் கூட்டுஸ்தாபனங்களின் ஆளணி முகாமைத்துவம்" என்ற ஆய்வுத் தலைப்பில் எம்.ஏ பட்டத்தைப் பெறுகின்றார்.

கணக்கியல் நுட்பத்துக்கான நிறுவன (MAAT) அங்கத்தவராகவும்;;

1992 இல் பட்டயக் கணக்கறிஞர் நிறுவனத்திலும் இணைகின்றார். இவற்றின் வழி கற்பித்தற் திறன் வினைத்திறன் பெறுகின்றது. கடமை மேன்மை அடைகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலைப்பீடத்துடன் இணைந்து செயற்பட்ட நிலை மாறி முகாமைத்துவ வர்த்தகத்துறை தனிப்பீடமாக உருவெடுத்த காலை விரிவுரையாளர்களது எண்ணிக் கையும் மாணவர்களது எண்ணிக்கையும் பெருகுகின்றது. 1999மே இல் முகாமைத்துவ வணிகபீடம் என உருவெடுத்த வேளை பதினைந்து விரிவுரையாளர்களையும் ஐந்நூறுக்கு மேற்பட்ட மாணவர்களையும் தன்னுள் அடக்கி இயங்கிக் கொண்டிருந்தது. இத்துறையில் தலைமைப் பதவியை ஏற்றதும் பீடம் தனிப்பொலிவு பெறுவதாயிற்று.

தர்மத்தோடு கூடிய கடமை தனித்துவமானது. நித்தியமானது. ஒரு மனிதன் தன் வாழ்க்கையில் செய்யும் தர்மம் தான் அவன் தனக்கெனச் சேமித்துக்கொள்ளும் சிறந்த சேமிப்பு எனப்படுகிறது. தர்மம் செய்வதைப் பழக்கமாக்கிக் கொண்டால் மனம் சுத்தமடைகிறது. இங்கே அன்பர் 'தர்மதேவா' ஆகின்றார்.

'ஒளிர்கின்ற விளக்காக நீ இருந்தால் தான் ஏனை விளக்குகளை ஏற்றிவைக்க முடியும்' என்கிறார் வங்கக் கவிஞர் ரவீந்திரநாத்தாகூர்.

மகிழ்ச்சி நிறைந்த மனதை உடையவன் தான் சகல செல்வங்களும் உரித்தாளியாவான்.

இங்கே, தர்மத்தோடு கூடிய வாழ்வு, ஒளிர்கின்ற கல்வி அறிவு, மகிழ்ச்சி நிறைந்த வாழ்வு நிறைந்திருந்ததன் பயன் மாணவ சமுதாயம் இன்ன பிறர் நயம் பெறும் வகை சார் படைப்புக்கள், செல் நெறிகள் இவர் வழி ஆக்கம் பெறுகின்றன. நயன் தரும் நூல்களும், கட்டுரைகளும், கருத்தரங்குச் சொற்பொழிவுகளும் வெளிவந்தன.

### க.பொ.த (உயர்தர) மாணவருக்கான

அ. நடைமுறை விடயங்கள்,
ஆ. வர்த்தகத்திறன் அண்மைக்கால அபிவிருத்தி என்பனவும்.

### பட்டப்படிப்பு மாணவருக்கான

'முகாமைத்துவம்' ஆகிய நூல்கள் பெரிதும் பயன்பயப்பன.

### இவை தவிர

'விருட்சம்' (வணிக மன்ற வெளியீடு)
'சமூக ஒளி' (சமூக விஞ்ஞான மன்ற வெளியீடு)

போன்ற பல்கலைக்கழக வெளியீடுகளிலும் கல்லூரிகளின் வழி வெளிக்கொணரப்படும். பருவகால,வருடாந்த வெளியீடுகளிலும் தன் ஆக்கங்களை பங்களிப்புச் செய்து கற்றலுக்கு கனம் சேர்ப்பார்.

இவரது சமூகப்பணி தனித்து நோக்க வேண்டிய ஒன்று. ஓயாது சுறுசுறுப்புடன் சிரித்த முகத்துடன் எவருக்கும் உதவ வேண்டும் என்ற எண்ணக் கனதியுடன் அலைபவரிடத்தே சமூகப்பணி அன்றாடக் கடமைகளில் ஒன்றாகி விட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமயத்திலே கொண்ட ஆழ்ந்த ஒழுக்கம் ஆலயத் தொண்டுகளில் இணைய வைக்கிறது. தாவடி அம்பலவாணர் வேத விநாயகர் இவரது குல தெய்வம். விநாயகரில் கொண்ட பக்தி பிற்காலத்தில் இவ்வாலயத்தின் நிருவாக சபைத் தலைவராக உயரவும் பணியை மேலும் பதனிடவும் அவரை ஆட்படுத்தியுள்ளது. இன்று நாம் வணங்கும் நடமாடும் தெய்வம் சத்தியசாயி பாபா வரை பக்தியின் உயர்வு உச்சமாகிறது. இணுவில் சத்திய சாயி சேவா நிலையத்தின் தலைவராகி இறைபணியை விசாலித்துள்ளார்.

சமூகப் பணியில் கல்வி நிறுவனங்களுடன் இணைந்த பங்களிப்பு குறிப்பிடத்தக்கது. யா/தாவடி இந்துத் தமிழ்க் கலவன் பாடசாலை பழைய மாணவர் சங்க செயலாளராக 1992 - 1998 காலப்பகுதியில் கடமையாற்றி தான் கற்ற ஆரம்ப பாடசாலைக்கு வளம் சேர்த்துள்ளார். 1995,1996ம் ஆண்டுக் காலப்பகுதியில் யா/கொக்குவில் இந்துக் கல்லூரியின் பழைய மாணவர் சங்க தலைவராக செயற்பட்டும், யா/புனித ஜோண் பொஸ்கோ பாடசாலை அபிவிருத்திச் சங்க செயலாளராக 1994 - 1998 ம் காலப்பகுதியில் செயற்பட்டும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊழியர்சங்க உபதலைவராக 1998 - 2000 ஆண்டுக் காலப்பகுதியில் செயற்பட்டும் வாழ்நாள் எல்லாம் தன் கடன் .................. பணி செய்து வாழ்வதே என்பதை நிலைநிறுத்துமாப்போல் காண்பது மகிழ்ச்சிக்குரியதே.

மானிப்பாய் வட்டம் லயன்ஸ் கழகம் தன் தொழிற்பாட்டின் விரிவுக் கட்டத்தில் இணுவில் திருவூரிலும் ஒரு கழகத்தை உருவாக்க முயற்சி எடுத்த வேளை எல்லார் மனத்திலும் சொல்லாமலே உருப்பெற்ற ஒரு தலைவர் உருவானார். கல்விச் சேவையும், பொதுச் சேவையும் இரு கண்களெனப் போற்றும் துடிதுடிப்பான உள்ளம் தலைவராக பெயர் பெற்றது.

மிகவும் நகைச்சுவையாகவும், கலகலப்பாகவும் பேசும் சுபாவம் ஒருவரிடமுள்ள ஆற்றல்களை அவதானிப்பின் தோழமையுடன் பழகும் பண்பு எல்லாவற்றுக்கும் மேலாக பெரும் புகழும் தேடச் சிறிதும் பறந்து திரியாத தன்னடக்கம், இவைகளின் மொத்த வடிவமாய் மிளிரும் அந்த உள்ளம் தகைமையினால் தலைமைக்குப் பொருத்தமாகியது.

லயன்ஸ் உறுப்பினர்கள் சாப்பாட்டு வேளைகளில் கொக்கோகோலாவினால் கை கழுவுவார்களாமே......... என விசனப்பட்டவர் தன் தலைமைத்துவத்தினால் பாமரனையும் We Serve என்ற மகுட வாசகத்தின் கீழ் இணைத்து சேவையை பிறப்புரிமையாக் கியவர். இவரது தலைமைத்துவத்தின் கீழ் ஏழைகள் கண், மருத்துவ வசதிகளைப் பெறவும் மாணவர் கல்வியைப் பெறவும் வழி சமைக்கப்பட்டது.

பல்வேறு பரிமாணங்களைக் கொண்ட ஒரு மனிதாபிமான உழைப்பாளி, தன் உழைப்பைப் பெரிதும் அலட்டிக் கொள்ளாத தன்னடக்கப் பொக்கிசம் எங்களுடன் எங்களது சம காலத்தில் புகழுடன் வாழ்ந்து கொண்டிருக்க இந்த அற்புதமான நினைவுகள் எமக்கே பெருமை சேர்க்கின்றன.

திரு. இ. துரைஎங்கரசு, B.A (Special),
கல்வியியல் டிப்ளோமா,
அதிபர்,
யாழ்/இணுவில் மத்திய கல்லூரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேவாவைப் பற்றிய சில வார்த்தைகள்....



தாவடியில் பிறந்த நண்பன் தேவராஜா பரபரப்பில்லாத, எளிமையான, வசதி குறைந்த ஆனால் நேர்மை தவறாத குடும்பத்திலே பிறந்தவர். அவருக்கும் எனக்கும் கொக்குவில் இந்துக் கல்லூரியிலேயே முதல் தொடர்பு ஏற்பட்டது. ஆரம்பக் கல்வியை வெவ்வேறு பள்ளிகளில் முடித்துக் கொண்ட நாங்கள் இடைநிலை, உயர்நிலைக் கல்வியைப் பெறுவதற்காக கொக்குவில் இந்துவில் இணைந்து கொண்டோம். ஆரம்ப காலம் தொடக்கம் ஒரே வகுப்பில் பயின்ற நாங்கள் பல்கலைக்கழகம் வரை ஒன்றாகவே கற்று முடித்தோம். பல்கலைக்கழக வாழ்விலும் ஒரே அறையிலேயே இருந்து கல்வியைக் கற்றோம். எங்கும் எந்த இடத்திலும் தேவாவும் நானும் பிரிந்ததில்லை. சில சமயங்களில் நான் தனித்து எங்கு சென்றாலும் அங்கு தேவாவைக் கேட்பார்கள். தேவா தனித்துச் சென்றால் அங்கு என்னைத் தேவாவிடம் கேட்பார்கள். அப்படி தேவாவும் நானும் ஆருயிர் நண்பர்கள் என்பது எல்லோருக்கும் தெரிந்த விடயமாகும். அந்தத் தோழமை இன்றுவரை நீடிப்பது கண்டு உண்மையில் மனம் பூரிப்படைகின்றேன், பெருமைகொள்கின்றேன். அத்தகைய நண்பன் ஒருவனுக்கு பொன்விழா எடுப்பதையிட்டு மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன். வாழ்த்துக்கூறுவதிலும் ஆசிகூறுவதிலும் சந்தோசப்படுகின்றேன்.

நண்பன் தேவராஜாவை எல்லோரும் செல்லமாக தேவா என்றே அழைப்பார்கள். அவரது தகப்பனாரும் தாயாரும் தேவு என்றே அழைப்பார்கள். நண்பன் தேவா நட்புக்கே இலக்கணமானவர். சில நண்பர்களிடையே உள்ள நட்பு சிலகாலம் தான் நீடிக்கும். பலகாலம் தொடர்வது அபூர்வம். ஆனால் எனக்கும் தேவாவுக்குமிடையிலான நட்பு தேனிலும் இனிமையானது, ஒருபோதும் கசத்ததில்லை. இவ்வாறு எமது நட்பு தொடர்வதற்கு முக்கிய காரணம் எம்மிடையே உள்ள புரிந்துணர்வு, விட்டுக்கொடுக்கும் மனப்பாங்கு, சகிப்புத் தன்மை போன்றவையாகும். நண்பன் தேவாவைக் கோபிக்குமளவுக்கு அவரிடம் வேண்டாத குணங்கள் எவையுமிலலை. தேவாவுக்கு கோபக்காரர்கள் எனக்குத் தெரிந்தவரை இன்றுவரை எவருமில்லையென்றே கூறலாம். குழந்தைகள் தொடக்கம் முதியவர் வரை, தேவாவுக்கு நண்பர்கள் இருக்கிறார்கள். அவருக்கு ஏழை - பணக்காரன், படித்தவன் - படிக்காதவன், உயர்ந்தவன் - தாழ்ந்தவன், உள்ளவன் - இல்லாதவன் என்ற பேதமும் கிடையாது. எல்லோருடனும் இனிமையாகவும், சுவையாகவும் பழகும் சுபாவம் அவருக்கு உண்டு.

இன்றைய உலகில் பெரும் பதவியை வகிக்கின்ற பெரியவர்கள் தம் பதவியையே பெரிதாக நினைத்து தாம் நடந்துவந்த பாதையை திரும்பிப் பார்க்காமல் வந்தவழி மறந்து அதிகாரப்பிடியில் வாழ்கின்றார்கள். அற்பனுக்கு மவுசு வந்தால் அர்த்த இராத்திரியில் குடை பிடிக்கின்றார்கள். ஆனால் நண்பன் தேவாவோ தனது பதவியைப் பெரிதாக ஒருபோதும் நினைத்ததில்லை. தனது பதவியின் தன்மைக்கேற்ப தனது வாழ்க்கை முறையை மாற்றிக்கொள்ளவில்லை. எப்படி ஆரம்பத்தில் தேவாவை நான் எப்படிக் கண்டேனோ அதே மன எழுச்சியுடன் தான் இன்றும் காணப்படுகின்றார். தேவாவின் இன்றைய பதவிக்கான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதிரை தேவாவால் பெருமை கொள்ளுமே தவிர பதவிக் கதிரையால் தேவா பெருமை கொள்ளவில்லை என்றே கருதுகிறேன்.

நண்பன் தேவாவின் இன்னொரு முக்கிய பண்பு எந்நேரமும் புன்சிரிப்புடன் வாழ்வதாகும். இவ்வாறு இருப்பது என்போன்ற பலருக்குச் சிலவேளைகளில் ஒத்துவராத தன்மை கொண்டதாகும். துயர் வந்தாலும் கூட அதை இலகுவில் மறந்து தனது சுபாவத்தைப் பழைய நிலைக்கு கொண்டுவந்து எல்லோருடனும் கலகலப்பாகப் பேசி மகிழும் தன்மை உண்மையில் மெச்சத்தக்கதாகும். அதுமட்டுமன்றி எவர், எதை, எந்நேரத்திலும் கேட்டாலும் கூட தன்னால் முடிந்தவரை செய்து கொடுப்பது அவரது இன்னொரு பண்பாகும். வேலைத்தலத்தில் கூட பொதுத் தேவைக்கு சென்றாலும் அவர்களை உபசரித்து ஆவனசெய்து கொடுத்து வழியனுப்பும் பண்பை நான் பலமுறை அவதானித்திருக்கிறேன். அதுமட்டுமன்றி தனது பிறந்த ஊரான தாவடி மக்கள் புகுந்த ஊரான இணுவில் மக்கள் என்னென்ன உதவிகள் கேட்டாலும் உணவை மறந்து உறக்கத்தை விட்டு, ஏன் தனது குடும்ப வேலைகளையே மறந்து ஓடிஓடிச் செய்து கொடுப்பார். தேவாவைக் கொண்டு எந்த காரியத்தையும் இலகுவில் செய்யலாமென்று மக்கள் படையெடுப்பதை நான் கண்டுள்ளேன். இப்படியான சேவை மனப்பான்மை கொண்ட தேவாவை மக்கள் இணுவில் லயன்ஸ் கழகத் தலைவராக தேர்ந்தெடுத்துள்ளது உண்மையில் பொருத்தமானதே. அதுமட்டுமன்றி பொன்விழா எடுப்பதும் மக்கள் தேவாவை எவ்வளவுக்கு நேசிக்கின்றார்கள் என்பதை எடுத்துக் காட்டுகின்றது.

நண்பன் தேவாவை அவரது வீட்டில் சந்திக்கச் சென்றால் அவரைச் சந்திப்பது என்பது அபூர்வம். அவர் யாரோ ஒருவரின் அலுவலுக்காக வெளியில் சென்றுவிட்டார் என்றுதான் துணைவியார் சொல்லுவார். இவ்வாறான செயற்பாடுகளுக்கு தேவாவின் மனைவி இலக்சுமியும் காரணமானவர் என்றுதான் கூறவேண்டும். தேவாவைப் போலவே அவரின் துணைவியும் இன்முகத்துடன் வந்தாரை வரவேற்று உபசரித்து வழியனுப்புவார். மனைவி அமைவதெல்லாம் இறைவன் கொடுத்தவரம் என்ற வாக்கியத்துக்கிணங்க தேவாவின் மனைவி மக்கள் யாபேரும் தேவாவின் செயற்பாடுகளுக்கு இடையூறின்றி துணைபோவதால் தான் தேவா என்றும் புன்சிரிப்புடன் காரியங்களை ஆற்றக் கூடியதாகவுள்ளது. சுருங்கக் கூறின் தேவாவின் குடும்பம் ஒரு பல்கலைக்கழகமாகும்.

ஒரு மனிதன் பிறந்து வாழ்வது முக்கியமல்ல. அவன் தனது வாழ்நாளிலே சமூகத்திற்கு எவற்றைச் செய்தான் என்பதே முக்கியமாகும். பிறந்த வீட்டிற்கும், புகுந்த வீட்டிற்கும், சமூகத்திற்கும் நாட்டிற்கும் தன்னாலான பங்களிப்பை இயன்றவரை செய்பவன். மனிதருள் மாணிக்கமாக திகழ்கிறான். அத்தகைய ஒருவன் தான் நண்பன் தேவா என்றால் அது மிகையாகாது. இவ்வாறான நற்குண நற்செய்கைகளுடைய எனது நண்பன் தேவாவுக்கு பொன்விழா என்பதையிட்டு உண்மையில் அக மகிழ்கின்றேன். மனம் பூரிப்படைகின்றேன். தேவாவுக்கு பொன்விழா என்ன? மணிவிழா, பவளவிழா, நூற்றாண்டு விழாக்களை கூட அவர்கள் கொண்டாடவேண்டும் என மனதாரப் பாராட்டி வாழ்த்துகிறேன். அவர் தனது குடும்ப துணைவியுடன் நன்மக்களுடன் இனிதே நலமுடன் வாழ எல்லாம் வல்ல வைத்தீஸ்வர – வாலாம்பிகா சமேதரை இறைஞ்சுகிறேன்.

திரு. நா.வன்னியசிங்கம்
(B.Sc Dip. in Edu.)
அதிபர்,
யா/வைத்தீஸ்வராக் கல்லூரி,
யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொன்விழாக் காணும் நலங்கள் பொலிந்த சான்றோன்

இணுவையூர் இன்று இந்திரவிழாக் கொண்டாடுகின்றது. என் நெஞ்சிற்கு நெருக்கமான அன்பர், நண்பர் 'தேவா' தனது ஐம்பதாவது அகவைப் பொன் விழாவைக் கொண்டாடு கின்றார். இது அவர் பெற்றோருக்கும், மனைவிக்கும், மக்களுக்கும், உடன் பிறப்புக்களுக்கும், உற்றார் உறவினர்களுக்கும், ஊருக்கும் பெருமை. படித்த கொக்குவில் இந்துக் கல்லூரிக்கும் பெருமை. யாழ் பல்கலைக்கழகத்திற்கும் பெருமை, ஏன் எமக்கும் பெருமைதான். இதில் எமக்கு மட்டற்றமகிழ்ச்சி.

மானிடர் எல்லோருக்கும் பொன்விழா எடுப்பது குறைவு. மக்களுடன் மக்களுக்காக வாழும் மனித நேயம் நிறைந்த ஒரு சிலருக்கு மட்டுமே இச் சந்தர்ப்பம் கிடைக்கின்றது. அவர்களுள் ஒருவர் இவர். தேவா ஒரு விரிவுரையாளர் தான், ஆனால் எல்லா விரிவுரையாளருக்கும் இப் பாக்கியம் கிடைக்கின்றதா? இவர் எல்லோராலும் விரும்பப்படும் விரிவுரையாளர். விரோதிகள் என்று இவருக்குகொருவருமிலலை.

'பெற்றதாயும் பிறந்த பொன்னாடும் நற்றவவானிலும் நனி சிறந்தனவே' என்ற பாரதியின் கூற்றுக்கிணங்க மண்ணை நேசித்தவர், மாணவரை நேசித்தவர், தனது துறை சார்ந்த பிரச்சினைகளையும், ஏனைய பொதுப் பிரச்சினைகளையும் உரியவர்களுடன் கலந்துபேசி சாதகமான பதிலைப் பெறுகின்ற சாதனையாளன் அவரது கோரிக்கைகளை மறுக்காமல் செய்துகொடுக்கத்தக்கவாறு அதனை முன்வைப்பதில் அவருக்கு இணையாருமில்லை.

கம்பீரமான தோற்றம், அமைதியான முகபாவம், இனிய வார்த்தை, விருந்தோம்பல், நேர்மை, அடக்கம், பணிவு, பண்புடமை, கடமையுணர்வு, கண்ணியம், கட்டுப்பாடு, இரக்கசுபாவம், ஈகை, அறிவு, திறன், ஆன்மீகம் ஆகிய இத்தியாகி நல்ல விழுமியங்கள் பொலிந்த சிறந்த ஆளுமையாளர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்று எமக்குத் தேவையான கல்வி 'நல்ல மனிதனை உருவாக்கு கல்வியேயாகும். (The man making education) எமது சமூகத்தில் நல்ல மனிதர்க அருகிவருகின்றனர். இருப்போரும் பண்பாட்டு அமைதியை (Cultural Silenc கைக்கொள்கின்றனர். இதனால் சமுதாயம் சீரழிந்து, சிதைந்து போகின்றது. இதற்கு பல்கலைக்கழகம் தம்மாலான பணியைச் செய்யவேண்டிய தேவை காலத்தை ஓட் வேண்டப்படுகின்றது. தேவா போன்ற நடமாடும் புத்திஜீவிகள் சராசரி மனிதர்களு பிரச்சனைகளையும் மனங்கொண்டு ஆர்வத்துடன் கேட்டறிந்து உதவுவது, ஆலோசனை வழங்குவது இன்னும் அவருக்குப் பெருமை தரும் விடயமாகும்.

இவரைச்சூழ எப்பொழுதும் ஒரு முற்போக்கான - மறுமலர்ச்சி வேண்டிநிற்கும் குழு இருந்து வருகின்றது. இக் குழு நாட்டிற்கு நல்லதை - வேண்டியதை காலமறிந்து செய்துவருகின்றது. மலருக்கு ஒரு ஆசிச்செய்தி தரும்படி மலரமைப்புக் குழு அன்பர் ஞான திருக்கேதீஸ்வரன் அவர்கட்கும் ஏனையோருக்கும் நன்றிகள் சேரமாகூடும்.

தேவா இன்னும் தன்னை வளர்க்க வேண்டும். தன் உடல் நலனில் அக்கறை கொள்ளவேண்டும். 'ஊரின் மத்தியிலுள்ள ஊரணி' என்று இவரின் சேவை பெருக வேண்டும் என விளைவதுடன் 'நல்லதொரு குடும்பம் பல்கலைக்கழகம்' எனப் பெயர் சிறக்க வாழ நயினை நாகபூசனி அம்மனை இறைஞ்சுகின்றேன்.

**இரகுநாதன் சிவபாதசேகரம்,**
**அதிபர்,**
**யா/கொக்குவில் ஸ்ரீ இராமகிருஸ்ண வித்தியாசாலை,**
**கொக்குவில்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பண்புடையார் பட்டுண்டுப் உலகம்

நாம் வாழும் உலகம் ஐம்பூதங்களால் உருவானது. இது எதனால் நிலைத்திருக்கிறது எனக் கேட்டால், கல், மண் பாறை, நீர் இவற்றினால் நிலைத்துள்ளது என்பர் அறிவியலாளர். கடவுள் கருணையால் என்பர் சமயவாதிகள், கோள்களின் ஈர்ப்பினால் என்பர் வேறு சிலர். ஆனால் உலகம் என்று கூறும் பொழுது, அதன் தோற்றத்தால் கல்லும் மண்ணும் பாறையும் நீரும், நேர்ந்த ஓர் அமைப்பென்றே பொதுவாகக் கருதப்படுகிறது. அவற்றை மட்டும் வைத்துக் கொண்டு உலகம் என்று தீர்மானிக்க முடியாது.

உலகிலுள்ள சடப்பொருள்களைவிட, உலகில் வாழும் உயிர்களும் அவற்றுக்கும் மேலான ஆறறிவு உயிர்களான, மக்களையே நாம் உலகம் எனக்கருதுதல் வேண்டும் எனவே உலகிலுள்ள உயிரினங்கள் நிலைப்பதற்கு அங்கு வாழும் மக்கள் பண்பே மேலானதென மதிக்கப்படுகின்றது.

இதனாலேயே இந்த உலகம் எதனால் இருக்கிறது என்பதற்கு "தமக்கென முயலா நோன்றாள், பிறர்க்கென முயலுனர் உண்மையானே" என்று ஈராயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட புறப்பாடல் தெளிவுறச் செப்புகின்றது.

ஆம். நாமுண்டு, நமது வேலையுண்டு, பேரும் புகழும் உண்டு, அவையே எம்மை வாழ்விக்கப் போதுமானவை என்ற மனப்பாங்குடன் வாழ்பவர்களினால் எவருக்குமே நன்மை இல்லை. சீவ இரக்கமின்றி, மனிதரெனப் பெயர் தாங்கி வாழ்க்கை நடத்தினால், போரும் பூசலும் குடிகொண்டு, உலகமே ஒரு கொலைக்களமாய் மாறிவிடும், அவ்வாறான கொடிய நிலை தோன்றாமல் இருப்பதற்குக் காரணம், மனித நேயம் கொண்ட நெஞ்சப் பண்பே தம்மையும் வாழ்வித்து, அயலாரையும் வாழச் செய்கின்றது.

இவ்வகைப் பண்புடை நெஞ்சம் கொண்டவர்கள் நம்மிடையே வாழ்வதனாலேயே சாதாரண குடிமக்கள் நிம்மதி மூச்சுவிடுவதுடன் வாழ்விலும் உயர்வடைய முடிகின்றது. அத்தகைய அன்பு நெஞ்சம் கொண்ட பண்பாளர்களை அடையாளம் கண்டு மதிப்பளித்தல் நன்றிக் கடனாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்கண்ணோட்டத்துடன் நோக்கும் பொழுது, எமது மனக் கண்முன் சிலர் தெரிவதுண்டு. அதற்கெல்லாம் அவர்களது முன்னோர்கள் செய்த புண்ணியச் செயல்களே காரணமாய் அமைவதை வரலாற்றில் காணலாம்

இந்த வகையிலே எம் மத்தியில் வாழும் சிலர் நினைத்துப் பார்ப்பதற்கு உரியவர்களாவர். யாழ். பல்கலைக்கழக வணிகத் துறைத்தலைவர். திரு க.தேவராசா அவர்கள் விடாமுயற்சியும் தொண்டுள்ளமும் உடையவர். "தந்தை எவ்வழி, மைந்தரும் அவ்வழி" என்பதற்கிணங்க அவரது தந்தையார் திரு செ. கந்தையா அவர்கள் தாவடி வடக்கு மாரிதோட்டம் என்ற பகுதியிற் பிறந்து, அதனையே தமது வாழ்பதியாகவும் கொண்டவர். அவர் "ஓங்கி உலகளந்த உத்தமனை நினைவூட்டும் உயரிய தோற்றமும் பின் குடுமியும் சில சின்னமாய் திருநீற்றுக்குறியும் அணிந்து கொண்டு தாவடி வேதவிநாயகர் முதல் இணுவில் கந்தசாமி கோயில், பரராஜசேகரப் பிள்ளையார் கோயில போன்ற தெய்வச் சந்நிதிகளுக்குச் சென்று வழிபாடு செய்வதில் மிகுந்த அக்கறை உடையவர்.

இறையன்பு மிக்க அவரின் மனைவி அன்னம்மா அவர்களும் நற்குணம் உடையவர். இவர்கள் இருவரும் இல்லற வாழ்வில் இணைந்து, நன்மக்களைப் பெறும் பேறுபெற்றவர்கள். இருவர் ஆண்களும் இருவர் பெண்களுமாக நால்வரைப் பிள்ளைச் செல்வங்களாகப் பெற்று மகிழ்ந்தனர்.

## தம்பொருள் என்பதம் மக்கள் அவர்பொருள் தத்தம் வினையால் வரும்

என்பது வள்ளுவர் வாய்மொழி

திரு கந்தையா குடும்பத்தினரின் இனிய வாழ்வின் பேறாகப் பெற்ற தலைமகன் திரு க. பாலசுப்பிரமணியம் அவர்கள் இலங்கைப் பல்கலைக்கழகத்தில் (பேராதனை) பட்டம் பெற்றவர். இவர் ஈழத் தலைநகரில் அமைந்துள்ள இலங்கை மத்திய வங்கியில் மதிப்பார்ந்த பணியாற்றுகிறார். இரண்டாவது மகன் திரு. க. தேவராஜா வணிகத்துறையில பட்டம் பெற்று யாழ். பல்கலைக்கழத்தில் விரிவுரையாளராக முதலில் நியமனம் பெற்றார். அவ வணிகத்துறையில் ஈட்டிய ஊக்கத்தினால் பல மாணவர்களின் நன்மதிப்பிப்பைப் பெற்றதோ அத்துறையின் தலைவராகப் பதவியுயர்வும் பெற்றுப் பிரகாசிக்கின்றார்.

திரு. தேவராஜா அவர்கள் காட்சிக்கு எளியர், கடுஞ்சொல் அறியாத அவல ஒருவர்சந்திக்கச் சென்றால் சிரித்த முகத்துடன் எழுந்து வந்து, என்ன வேண்டும் என் கேட்டு, அவரின் மனம் ஏமாறாதவாறு பதிலளிப்பார். ஆறுதல் வார்த்தை என்பது அவர உடலோடு ஒட்டிய பிறந்தபெரும் பண்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"தேவா" என்று எல்லோரும் அன்புடன் அழைக்கின்ற திரு தேவராஜா அவர்கள் பெருமை சிறுமை பாராது எவருடனும் அன்பாகப் பேசும் பண்பினர். ஒருவரின் இடுக்கண் அறிந்து, ஏற்றவை உதவுவதில் மட்டற்ற மகிழ்ச்சி காண்பார். தமக்குக் கிடைத்த வசதி, வாய்ப்புக்களை மற்றையோருக்கும் பகிர்ந்தளிக்கும் அவரது நெஞ்சப் பண்பு, அவருக்கே சொந்தமானது.

எத்தகைய சூழ்நிலையிலும் தமது நிலைமாறாது நடந்து கொள்ளும் அவரது தனிப் பண்பு என்னும் போற்றுதற்குரியது. நல்லார் ஒருவரிடம் கிடைத்த செல்வம் நானிலத்திலுள்ளோர் பலருக்கும் உதவுகின்றது. பிறர் பயனுறும் வகையில் தமது இதயதப் பண்பை வளர்ப்பவர்கள் உருள்பெரும் தேருக்கு அச்சாணி போன்றவர்கள். அத்தகைய குணநலம் உடையோர் இருப்பதாலேயே உலக வாழக்கை உளதென்று சொல்லக் கூடியதாய் இருக்கின்றது. எனவேதான் "பண்புடையார்ப் பட்டுண்டு உலகம்" என்று வள்ளுவர் கூறுதல் முற்றிலும் பொருந்தும்.

வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடும் உள்ளமும் இனியவை காணும் போது மகிழும் நெஞ்சமும் ஒரு சிலரிடமே உண்டு. அத்தகை சீரியர் வாழ்வதாலேயே உலகம் வாழ்கிறது. பரந்த பெரிய உலகில் பலரும் பயனுற வாழ்வதே மக்கட் பண்பு என்பதை மனதில் நிறுத்தி வாழ்வோர் சமகாலத்தில் மாத்திரமன்றி எக்காலமும் மக்கள் நெஞ்சங்களில் நிலைத்து வாழ்வர்.

✍ சோ. பரமசாமி B.Sc



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சமூகத்தில் ஒரு தென்றல்

ஈழ மணித் திருநாட்டில் கலை மேவுகின்ற தாவடி ஊரின் உழைப்பாய் சென்ற உத்தமர் கந்தையா தம்பதிகளின் அருந்தவப் புதல்வனாக பிறந்தார். பள்ளிப்பருவத்தை கொக்குவில் இந்துவில் சிறப்புற ஆற்றிய வேளையில் நண்பரகள் சிறப்போடு நண்பனாய் விளங்கினார். எல்லோராலும் தேவா என செல்லமாக அழைக்கப்பட்டார்.

பள்ளிப் பருவம் முடித்து பல்கலைக்கழகத்தில் நல்லதொரு சமூக உடலியலாளராக திகழ்ந்து சிறப்புற பட்டம் பெற்றவர். ஆண்டு எழுபத்தைந்தனில் யாழ். பல்கலைக்கழக விரிவுரையளராக நியமிக்கப்பட்டார் பண்பாலும் அறிவாற்றலாலும் உயர்ந்து வணிகத்துறைத் தலைவராகவிளங்கினார். பல்கலைச் சமூகம் அன்பாகப் போற்றும் தலைவராகவும் விளங்குகின்றார். கற்பவர் தொடக்கம் கல்வியியலாளர் வரைக்கும் கனிவாகத் தேவா என அழைக்கும் சிறப்புப் பெற்றவர்.

தாவடி ஊர் மக்களும் இணுவையூர் வாழ் மக்களும் அன்புகனிய வாழ்த்திப் போற்றுகின்ற பேறு பெற்றவர் தேவராஜா அவர்கள். எவர் எது வந்து கேட்டாலும் இல்லையென்றோ மறுத்தோ உரைக்காத உயர்ந்த பண்பாளர். பள்ளிப் பருவம் முதல் பல்லைக்கழகம் வரை தன்னை வளர்த்த சமூகத்தை மறக்காமல் பல்வேறு சேவைகளை புரிந்தார். சமூக வளர்ச்சிக்கு பெருந் தொண்டாற்றி வருகின்றார்.

தென்றாலானது நதியில் விளையாடி கொடியில் குளிர்மையாக வளர்வது போல தேவா அவர்கள் சமூகத்திற்காக சேவையாற்றி சமூகத்தால் அன்பாகவும், பண்பாகவும் வளர்க்கப்படுபவர் இதற்கு ஓர் சான்றாக அவரது பொன்விழா அமைகின்றது.

நல்லதொரு இல்லம் பல்கலைக்கழகம் என்பதற்கு எடுத்துக்காட்டாக அவரது இல்லத்தில் கற்பவரும் கற்றவரும் கல்வியியலாளர்களும் ஒன்று சேர்ந்தபோது இன்முகத்துடன் வரவேற்று இருக்கை தந்து கலகலப்பாக கலந்துரையாடுபவர். இவரது சிறந்த ஆற்றலும் பண்பும் ஒப்பு நோக்கப்படுவதன்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூகத்தில் இணைந்தவர் என்பதற்கு எடுத்துக் காட்டாக 'தம்பி தேவாவிடம் சென்றால் அவர் எப்படியும் செய்து தருவார். தங்கச்சி! அவரிடம் சென்று கேள் மகளே! இது கொழும்பு செல்லவுள்ள மகளக்கு தகப்பனுடைய கூற்று' இங்கே பாருங்கோ அங்கே தேவாத் தம்பியை வழியில் கண்டதும் மறித்து கதைத்தேன். அவர் என்ன தங்கமான மனிதன் தான் எப்படியும் செய்து தருவதாக கூறினார். இது ஒரு குடும்பத் தலைவியின் கூற்று' எமது கூட்டத்திற்கு கருத்துரை வழங்குவதற்கு எப்பொழுது நான் போய் கேட்டாலும் எவ்விதமான மறுப்புமின்றி தான் வருவதாக சிரிப்புடன் கூறும் சிறப்புமிக்கவர் தேவா சேர் அல்லவா!

நாம் மேலும் சமூகத்தில் அவர் பற்றிய சிறப்புக்களை அறிய முற்படின் சொல்லில் அடங்கா, இன்றைய சமூகத்தின் ஒரு தென்றலாக பிரகாசித்துக்கொண்ட தேவராஜா என்றால் அது மிகையாகாது.

'சமூகமே நீ பெற்ற நல்ல ஆசான்
நலமுடன் வாழ என்றும் வழங்குப்பாயாக'

திரு.சி. நடராசா
ஆசிரியர்,
யாழ். மத்திய கல்லூரி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எல்லார்க்கும் இனியார்

இன்று பொன்விழாக் காணும் மா மனிதன் திருவாளர் க. தேவராஜா அவர்களது ஆற்றல், திறமை, கல்வி, சமூகப்பணியை யாவரும் அறிவர். பணிவு, அடக்கம் இவை யாவும் அவரிடமுள்ள பொக்கிசங்கள் தாவடிப்பதியில் நல்ல உத்தம குடும்பத்தில் திருவாளர் கந்தையா தம்பதிகளுக்கு கருவில் திருவுடைய புத்திரனாக அவதரித்தார். கற்றாங்கு ஒழுகும் பண்புடையாளன், தந்தையும், தாயும் முதற் தெய்வங்கள் என வாழ்ந்துவரும் செம்மல்,

> 'ஈன்ற பொழுதில் பெரிதுவக்கும் தன் மகனை
> சான்றோன் எனக் கேட்டதாய்'

உண்மையில் தாயும் தன் மகனின் சான்றாண்மை கண்டு பெருமையடைகின்றார்.

'மகன் தந்தைக்கு ஆற்றும் உதவி இவன் தந்தை என்னோற்றான் கொல்'

– என்னும் சொல்

என்ற சொல்லை காதினால் கேட்டு பெருமிதம் அடைந்தவண்ணம் தந்தை மறைந்துவிட்டார். திருவாளர் தேவராஜா அவர்கள் குலத்தின் விளக்காக தாவடிப்பகுதி வாழ் மக்கள் மட்டுமல்ல, யாவரும் மதித்து போற்ற வாழ்கின்றார். இவர் இணுவையூரில் உயர் குடும்பத்தில் திருமணம் செய்தார். இவருக்கு ஏற்ற இல்லத்தரசியாக இலட்சுமியதேவி என்பவர் மருகியாகி இல்லத்துக்கு திருமகளானார். அதனால் இருபக்க இல்லங்களும் சிறப்புப்பெற்று ஒளி வீசுவதனையும், நாங்கள் காண்கின்றோம். இணுவையூர் தாவடிப்பதி , ஆலயங்கள் கல்விக்கூடங்கள், நூல்நிலையங்கள் வளர்ச்சி பெற அயராது உழைத்துக்கொண்டேயிருக்கின்றார். பண்புடை. மக்கள் செல்வங்களைப் பெற்று வாழ்வதோடு யாழ். பல்கலைக்கழகத்தில் வணிகத்துறையின் தலைவராய் திகழ்கின்றார். ஓர் சாதாரண ஏழைக்குடும்பம் தொடக்கம் பல்கலைக்கழகம் வரை யாருக்கு என்னென்ன உதவி வேண்டுமோ அதனை மனப்பூர்வமாக செய்தவண்ணம் இருக்கின்றார். 'அடையாத வாயில் அகம்' எந்நேரமும் யாவரும் சந்தித்து உதவிபெறும் அளவிற்கு அவரது இல்லம் வரவேற்பதனை நாம் காணலாம். கோபம் என்றால் அவருக்கு தெரியாது. இத்தகைய அறிஞனுக்கு ஏழை பங்காளன், சமூகத் தொண்டனுக்கு இவ்வூர்மக்கள், அயலூர் மக்கள் பொன்விழா எடுப்பது மிகப் பொருத்தமானது. 'சுற்றத்துக்கு அழகு செழுங்கிளை தாங்குதல்" என்ற பழமொழிக்கும் இலக்கணமாக தன் உடன்பிறப்புகளுக்கு உறுதுணையாகவும் வாழ்ந்து வருகின்றார். 'அரிது அரிது மானிடராதல் அரிது" அதிலும் மானுடப்பிறப்புக் கிடைத்த அவர் மனிதன் மனிதராக வாழப்பழகியவர் திருவாளர் தேவராஜா அவர்கள் என்றால் யாவரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய விடயம் ஆகவே தான் மாமனிதனுக்கு போற்றி வாழ்த்தி விழா எடுக்கின்றோம். சாதாரண புருஷனாக இவர் அடிபோற்றி எல்லோரும் வாழவேண்டும். அதுவே அவருக்கு நாம் செய்யும் கைங்கரியமாகும். இத்தகைய மாமனிதன் யார்க்கும் இனியன் அவர் உளவலிமையும், உடல்வலிமையும் பெறுவதோடு கல்வியின் சிகரத்தினை அடைய எல்லாம் வல்ல தாவடிப்பதிவாள் ஸ்ரீ விக்னேஸ்வரப் பெருமான் இணுவையம்பதி ஸ்ரீ பரராஜ சேகரப் பிள்ளையார், முருகன்,அம்பாள் அருள் பெறவேண்டுமென்று வாழ்த்துகின்றேன்.

திருமதி அன்னலட்சுமி சின்னராஜா,
பண்டிதை
இணுவில் தெற்கு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தன்னலங்கருதாப் பெருந்தகை

இன்று பொன்விழாக்காணும் யாழ் பல்கலைக்கழக வணிகத்துறைத்தலைவர் உயர்திரு. க.தேவராஜா அவர்களை 1983ம் ஆண்டு முதன்முதல் கணக்கியல் ஆசிரியர் திரு. ஆ.மரியதாஸ் மூலமாக எமது நிறுவனத்திலே உயர்தர வர்த்தகத்துறை ஆசிரியராக இணைத்துக் கொண்டோம். இக்காலப்பகுதியில் அவரது ஒழுங்கான கல்விச் சேவையால் எமது கிராமத்தின் மாணவர்களின் கல்வி வளர்ச்சி மட்டுமல்லாது ஏனைய கிராம மாணவர்களின் கல்வி வளர்ச்சியினூடு எமது நிறுவனம் வளர்ச்சியைக் கண்டது. சேவை, மனப்பான்மை மட்டுமே நோக்காகக் கொண்டதால் ஆரம்பகாலத்தில் எமது நிறுவனத்தில் குறைந்த எண்ணிக்கையான மாணவர்கள் இருந்தபோதும் கூட ஒழுங்காக வருகை தந்து ஊதியத்தை பொருட்டாக மதிக்காது சேவையாற்றிய ஓர் பெருந்தகை மேலும் எமது நிறுவனத்தின் வளர்ச்சிக்கு அன்று தொடக்கம் இன்று வரை ஆலோசனை வழங்கி வருவது குறிப்பிடத்தக்கது.

இன்று எமது நிறுவனம் வெள்ளி விழாவினையும் கண்டு ஆயிரக்கணக்கான மாணவர்களுடன் இயங்குவதற்கு காரணமான நல்லாசான்களுள் இருவரும் ஒருவர் அதனால் தான் 1998ம் ஆண்டு இடம்பெற்ற எமது வெள்ளிவிழாவில் இவரையும் இவரது துணைவியாரையும் அழைத்துக் கௌரவிக்க வேண்டும் என்ற நான் கூறிய போது எமது நிறுவன ஆசிரியர் குழாமும் ஆளணியினரும் ஏகோபித்த குரலில் ஏற்றுக் கொண்டார்கள்.

எந்த ஒரு பிரச்சனையும் இவரிடம் சென்று அணுகினாலும் சிரித்த முகத்துடன் அவர்கள் மனம் அமைதியடையும் வண்ணம் ஆறுதல் கூறி அவர்களது பிரச்சனையை தன் பிரச்சனை போல கருதி தீர்வுகண்டு கொடுப்பது இவருக்கே உரிய ஒரு தனியன பாணியாகும்.

**"அழுக்காறு, அவா வெகுளி இன்னாச்சொல் நான்கும்**
**இழுக்கா இயன்றது அறம்"**

என்ற வள்ளுவரின் கூற்றுக்கு ஏற்ப வாழுகின்ற பெருந்தகையை பொன் விழா சிறப்புற வாழ்த்துவதோடு, மணிவிழா, பவளவிழா போன்ற அனைத்து விழாக்களையும் காண எல்லாம் வல்ல இருபாலை கற்பக விநாயகரை இறைஞ்சுகின்றேன்.

அன்புடன்
**த. வரதராஜன்**
உதவி அதிபர்
ஒழுக்காற்று சபை
யாழ் மத்திய கல்லூரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஐயா அவர்களைப் பற்றி ஒரு நோக்கு.....

பேராசிரியர் உயர்திரு. தேவராஜா (வணிகத்துறை) அவர்கள் பொன்விழா காணும் இந்நாளில் அவரை உள் அன்போடு வாழ்த்துவதில் அக மகிழ்வெய்துகின்றேன். பேராசிரியர் அவர்கள் கல்விப்புலத்திலும், தொழிற் காலத்திலும் உயர்நிலை பெற்றவர். கல்வி என்பது வாழ்க்கை, வாழ்க்கையே கல்வி, வாழ்வை செழுமைப்படுத்துவது கல்வி அழகு என்ற கல்வித் தத்துவத்திற்கு அணிகலனாக கல்வியை வாழ்வில் அலங்கரிக்கும் பெருந்தகை அவர்கள்.

முழுப் பொழுதும் உவகையுடன், நொந்த உள்ளங்களுக்கு குளிர் நிழலாய், இன் சொல் பேசி, சமூகத்தோடு ஒட்டி உறவாடி வாழும் நிறைவான மாந்தர் அவர்.

எந்த நேரத்திலும், எந்த இடத்திலும் தயக்கமின்றி அவரை அணுகமுடியும். அவ்வாறு தன்னைச் சந்திக்க வருபவர்களை விநாடிகூட தாமதிக்க செய்யாது அன்புடன் வரவேற்று, நேசக்கரம் நீட்டி உதவும் இயல்பான பணிவு அவருக்கே உரியது.

சொல்லிலும், செயலிலும் சமூகத்திற்கு ஆறுதலாக விளங்கும் அப் பெருந்தகை நீண்டகாலம் எம்மோடு, பல் சிறப்புக்களும் பெற்று வாழவேண்டும் என இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

அன்புடன்
ஐ. புவனேந்திரன்
விரிவுரையாளர்,
ஆசிரியர் கலாசாலை கோப்பாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நான்கண்ட மனிதன் தேவா!

'தோன்றில் புகழோடு தோன்றுக! அஃது இலார்
தோன்றலில் தோன்றாமை நன்று'.

-குறள் 230-

பிறக்கும் பொழுது அனைவரும் விலங்குகள் தான். பின்னர் வாழும் நெறியில் மனிதனாகித் தெய்வமாகிறான்.

நிறைந்த அவை அங்கு எத்தனையோ பேர் வாழுகிறார்கள். போகிறார்கள், அந்த அவையில் யாருடைய வரவு வரவேற்கப்படுகிறதோ. அவன் தான் மனிதன்.

இருபது ஆண்டுக் காலத் தொடர்பில் நான் கண்ட மனிதன் திரு. க. தேவராஜா ஆவார். சிரித்த முகம், பகை கொள்ளாப் பண்பு, அனைவரையும் ஒன்றாக நினைக்கும் சோசவீச சித்தாந்தம். இவை தான் நான் கண்ட மனிதனின் மனித குணம்.

தனியார் கல்வி நிறுவனங்கள் தேவாவை சந்திக்க வைத்தன. வர்த்தகத்தை வர்த்தகத்தனமின்றி கற்பித்த பெருந்தகை ஆவர். ஆசிரிய சமுதாயத்தில் நினைவு கொள்ளப்பட வேண்டியவர். ஆசிரியன் பாடத்தை நடத்துபவன் மட்டுமல்ல. அதற்கு மேலான மனிதப் பண்பை மாணவர்களுக்கு வாழ்ந்து காட்டுபவன் ஆவான். நல்லாசிரியனாக திகழ்ந்தவர், திகழுபவர் திரு தேவா அவர்கள்.

ஆன்மீகம் என்றால் ஆலயம் செல்லுதல் என்பது தற்காலக் கருத்தாக வருகிறது. தேவா உண்மையான ஆன்மீகவாதி. எவன் ஒருவன் மக்கள் தொண்டை மனத்திருப்தியுடன் செய்கிறானோ அவன் தான் ஆன்மீகவாதி என்பது எனது கருத்தாகும். ஆலய வழிபாடு மட்டுமல்ல. இன்னார் இவர் என்று ஆராயாமல் தன்னால் முடிந்ததை செய்பவர் ஆன்மீக வாதி தானே!.

1995 இல் யாழ்ப்பாணம் இடம்பெயர்ந்தது. எனது குடும்பம் வடமராட்சியில் புலோலியிலும். நண்பர் தேவாவின் குடும்பம் நெல்லியடியிலும் இருக்க நேரிட்டது. இடம் பெயர்வினால் ஏற்பட்ட சூழ்நிலை மாற்றம் அனைவரையும் மனச்சோர்வடைய வைத்திருந்தது. அந்த நிலையில் தேவாவின் வீடு இனிய பல நண்பர்கள் ஒன்றுகூடும் அவைக்களமாக மிளிர்ந்தது நினைவுக்கு வருகிறது. இனிய நண்பன் ஞான. திருக்கேதீஸ்வரனின் இடிச்சிரிப்பு, தேவாவின் மைத்துனர் திரு தேவராசலிங்கம், திரு முருகதிருவானந்தவாரியார் பற்றி தனது அனுபவங்களை கூறியமை இப்படியான பல நிகழ்வுகள் இடம்பெயர்வை மறக்க வைத்தன. அவை முடிந்து ஒரு நாள் யான் விடைபெறும் பொழுது என்னுடன் வாசல் வரை வந்து 'செல்வா ஏதும் தேவைப்பட்டால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தயங்காமல் கேட்கவும்' என்று அன்று தேவா கூறிய வார்த்தைகள் இன்னும் செவிய ரீங்காரமிடுகின்றது. பிறருக்கு இனிமை நயத்தோடு நன்மையை வழங்கும் இன்சொற் நமக்கும் நயத்தை தந்து நலத்தையே அளிக்கும் எனும் வள்ளுவர் வாய்மொழிக் இலக்கியமாகத் திகழ்பவர் திரு தேவா அவர்கள்.

இல்லறத்தை நல்லறமாக வாழ்ந்து காட்டுபவர் திரு. க. தேவராஜா ஆவ தனியார் கல்வி நிறுவனங்களில் ஆண்டுக்கு ஒரு தடவை தட்டில் கற்கண்டு இருக்கு ஆசிரிய நண்பர்கள் அனைவரும் வாயிலிட்டுச் சுவைத்துக் கொண்டு 'தேவாவை நினைத்துக்கொள்வோம். வையத்துள் வாழ்வாங்கு வாழும் என் இனிய நண்பன் பொன்வி மட்டுமல்ல, நூற்றாண்டு விழாவும் காண்பதற்கு அவர் உள்ளத்தில் குடிகொண்டுள்ள ஞா முதல்வன் அருள்புரிவான் எனத் திடமாக நம்புகிறேன்.

பல்கலைக்கழகம் சிலரால் பெருமையடைகிறது. அவ்வரிசைய திரு. க. தேவராஜாவும் ஒருவர். கல்வி என்பது ஒருவனை நெற்கதிராக்க வேண்டு அஃதின்றி நெட்டை நெடுமரமாக மாற்றக்கூடாது. வித்துவக் காச்சல் இன்றி மனக் கச அற கற்க வேண்டியவற்றை தெரிந்து கற்று அதற்கு தக நிற்பவர் வர்த்தகத்துல தலைவர் என்பது மிகைப்படுத்தலின்றிய உண்மையாகும்.

தேவாவைச் சந்திக்க பல்கலைக்கழகம் சென்றாலும் அதே தேவாவை தா காட்சிக்கு எளியராய் காணமுடியும். அவருடன் சில நிமிடங்கள் உரையாடினா 'அறிஞரைக்' கண்ட திருப்தி ஏற்பட்டுவிடும்.

உவப்பத் தலைக்கூடி உள்ளப் பிரிதல்
அனைத்தே புலவர் தொழில். - குறள் 394 -

**தனியார் கல்வித் துறையில் தனிமுத்திரை பொறித்தனன் தேவா!**
**பழக இனிய நண்பன் தேவா!**
**பாமரருக்கும் இனியன் தேவா!**
**நான் கண்ட மனிதன் தேவா!**

**வாழி நீ. நீடூழி.**

நண்பன்
இரா செல்வவடிவேல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளத்தால் உயர்ந்த உத்தமர்

ஆயிரக் கணக்கான விண்மீன்கள் பவனிவரும் விண் வெளியில் எல்லா நெஞ்சங்களையும் ஈர்க்கின்ற சக்தி வெண்நிலவுக்கு மட்டுமே இருப்பது போல் உள்ளத்தால் உயர்ந்த உத்தமராக எம் எல்லோரது அன்புக்குரிய உயர் திரு தேவா அவர்கள் அமைந்திருக்கின்றார். அளவற்ற அறிவு, அளவில்லாத தூய்மை, முடிவற்ற முயற்சியோடு தன் உள்ளத் தூய்மையுடன் உயர்வு தாழ்வின்றி அன்பு காட்டும் உயர்ந்த உள்ளம் படைத்த உத்தமராக தொடர்ந்து வாழ்வதென்பது முடியாத ஓர் செயல் என்பார்கள். ஆனால் எமது பேராசானோ முடியாது என்ற சொல்லை முறியடித்து அப்பண்புகளுடன் தொடர்ந்து வாழமுடியும் என வாழ்ந்து கொண்டிருக்கும் உத்தமப் பண்பின் உரைக் கல்லாக திகழ்ந்து வருகின்றார். 'அன்பு நாண் ஒப்பரவு கண்ணோட்டம் வாய்மையோடு ஐந்து சால்பு, ஊன்றிய தூண்' என்ற வள்ளுவன் வாக்கிற்கேற்ப ஓர் உத்தம சான்றோனாக ஊர்மக்கள் மத்தியில் உயர்ந்து நிற்கின்றார். கல்வி செல்வம் பதவி, என்பவற்றிற்கு அடிமைப்பட்டு விடாது அன்பு பண்பு மனிதநேயம் எனப் பலவற்றை மதித்து பணிவுடன் உள்ளத்தால் உயர்ந்தவராக உற்றார் உறவினரால் மட்டுமல்லாது ஊர்மக்களாலும் நாடளாவிய நட்பினாலும் எல்லோர் உள்ளங்களிலும் உயர்ந்து நிற்கும் உத்தமராக திகழ்ந்து வருகின்றார்.

அன்னையிடம் நீ அன்பை வாங்கலாம்.
தந்தையிடம் நீ அறிவை வாங்கலாம்.
இரண்டும் வாங்கினால் பேரை வாங்கலாம்.
பேரை வாங்கினால் ஊரை வாங்கலாம்.

என்ற கவிக்கூற்றின் இலக்கணப் புருஷராக திகழ்ந்து. உள்ளத்தால் உயர்ந்த உயர்திரு தேவா அவர்கள் அன்பீனும், ஆர்வம், உடமை அது ஈனும் நண்பெனும் நாடாச் சிறப்பு, என்னும் பொன் மொழிக்கு இலக்கணமாக எல்லோர்க்கும் இனியவராகவும் சந்தர்ப்பம் அறிந்து உதவும் கற்பக தருவாகவும் எல்லோருக்கும் இவ்வுலகில் நல்ல வண்ணம் வாழ வேண்டும் என்னும் உயர்ந்த பண்பு உள்ளம் கொண்ட அன்பு நடமாடும் கலைக் கூடமாகத் திகழ்ந்து அண்டி வந்தோர்க்கெல்லாம் பெரும் விருச்சமாக இருந்து அழியாப் புகழை தனக்கே உரியதாக்கி எதிர்கால பரம்பரைக்கு ஓர் வழிகாட்டியாகவும் கலங்கரை விளக்காகவும் திகழ்ந்து வருகின்றார். மனிதருள் மாணிக்கம் உண்டு என்று சொன்ன வார்த்தைக்கு உயிர் கொடுத்து ஓர் உத்தமராக எங்கள் அன்புத் தேவா அவர்கள் அமைந்திருக்கின்றார் என்றால் அது அவரது அடக்கமான அன்பு கனிந்த கருணை கூர்ந்த பண்பே அவரது இச் சிறப்பிற்கு காரணமாக அமைந்து எல்லோர் நெஞ்சங்களிலும் நிறைந்து 'தோன்றிற் புகழோடு தோன்று' என்ற வள்ளுவன் வாக்கிற்கு இலக்கணமாய் வாழந்து கொண்டிருக்கின்றார். புகழ் என்பது தேடிச் செல்வதாக இருந்தல் ஆகாது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்புகழ் ஒருவரை தேடிவர வேண்டும். அதுவே நிலையான புகழாக அமைந்து வருகின்றது என்ற அமுத வாக்கிற்கு அச்சாணியாக அமைந்துவிட்ட பெருமைக்குரிய வராக எமது அன்புத் தேவா அவர்கள் அமைந்திருக்கின்றார்......

ஒருவர் தன் வாழ்க்கையில் நல்லவராக வாழ்ந்தால் மட்டும் போதாது வல்லவராக இருக்கவேண்டும். அப்போது தான் அவரது செயல் ஆற்றல் பொருந்தியதாக இருக்கும். எங்களது பேராசானும் இத்தகைய ஆற்றல் வாய்ந்தவராக அமைந்திருக் கின்றார். முடியாது என்ற சொல்லை அவரது வாயிலிருந்து எதிர்பார்க்க முடியாது. எதையும் பார்க்கலாம் செய்வோம் என்றே சிரித்த முகத்துடன் கூறிக்கொள்ளும் பண்பு அவரிடம் இயல்பாகவே அமைந்து விளங்கியது. தன்னை நாடி வந்தவருக்கு தன்னால் இயன்றளவு உதவிகளைச் செய்யவேண்டும் என்ற இதயதாகம் உடையவராக வாழ்ந்து வருகின்றார். இதனாலேயே புகழ் இவரைத் தேடி வந்து கொண்டிருக்கின்றதே தவிர அவர் புகழைத்தேடிச் சென்றது கிடையாது. தன் தளரா உழைப்பினால் உயர்ந்து ஊர்போற்ற வாழ்ந்து கொண்டிருக்கும் உத்தமராக மட்டுமல்லாது அன்பும், அறமும் உழைத்தாயின் இல்வாழ்க்கை பண்பும் பயனும் அது என்ற பொன் மொழிக்கேற்ற அன்பு அறம் இரண்டையும் தனது வாழ்க்கையின் இலட்சியச் சொற்களாகக் கொண்டு அதன் பெறுபேறாக அன்பின் வழி பண்பையும் அறத்தின் வழி பயனையும் வளர்த்துக் கொண்டு தன் இல் வாழ்க்கையில் மேம்பட்டு இனிதே திகழ்ந்து வருகின்றார்.

சிந்தனை, சொல், செயல் மூன்றும் ஒன்றாக அமைகின்ற போதே அச் செயல் உயர்ந்து நிற்கின்றது. அத்தகைய செயல் உடையோர்களே சமூகத்தில் உயர்ந்து நிற்கின்றார். உயர்ந்த உள்ளத்தில் தான் உயர்வான சிந்தனைகள் தோன்றும். அவ்வாறு சிந்தித்த நல்ல சிந்தனைகளைச் சொல்லும் போது அது சபை ஏறுவதாக அமைந்து விடுகின்றது. அதுவே பின் செயலாக மாறும்போது அது அடுத்த தலைமுறைக்கு ஓர் வழிகாட்டியாகவும் கிடைத்தற்கரிய பொக்கிசமாகவும் அமைந்துவிடுகின்றது. அத்தகைய உயர்ந்த சிந்தனை சொல் செயல்களோடு இணைந்து கொண்டவராக எமது மதிப்பார்ந்த உயர்திரு தேவா அவர்கள் அமைந்திருக்கின்றார். அத்தகைய இப் பெருமகன் தனது 50 வது அகவை நிறைவு செய்து பொன் விழாக் காணும் இச் சந்தர்ப்பத்தே அறிஞர்களும் பேராசிரியர்களும் கல்விமான்களும் அகமகிழ்ந்து விழா எடுப்பது எதிர்கால இளைய தலைமுறையினருக்கு ஓர் வழிகாட்டும் செயலாக அமைந்துவிடுகின்றது. அறிவை அளப்பதற்கு, அறிவு தேவை என்பதை எம் அறிஞர் குழாம் நிதர்சனப்படுத்தும் வகையில் இவ்விழாவை எடுத்திருப்பது உயர்ந்த நல்ல சிந்தனையின் வெளிப்பாடாகும். இந்நாளில் தனது 50 வது அகவை நிறைவு செய்து பொன் விழாக்காணும் எம் உள்ளத்தால் உயர்ந்த உத்தமராய் எம் அன்புத் தேவா அவர்கள் 'ஆல் போல் தளைத்து அறுகுபோல் வேரூன்றி பல்லாண்டு பல்லாண்டு நீடூழி வாழ்க' என வாழ்த்துவதோடு மட்டுமன்றி என் உள்ளத்து அவர் பற்றிய உணர்வை பகிர்ந்துகொள்ளச் சந்தர்ப்பம் அளித்த விழாக் குழுவினரான அனைத்து உள்ளங்களுக்கும் கரம்கூப்பி அன்புதனை சிரம்தாழ்த்தி நன்றி செலுத்துகின்றேன்.

நன்றி

நா. பாலகிருஸ்ணன்,
ஆசிரியர் (தமிழ்)
மானிப்பாய் மெமோறியல் ,
ஆங்கிலக் கல்லூரி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரு.க.தேவராசா அவர்கள் கல்வி உலகில் ஒரு கலங்கரை விளக்காக விளங்குபவர் என்பது வெள்ளிடைமலை கல்விச்சேவை மட்டுமன்றி அவர் சமய சமூக சேவைகள் செய்வதிலும் மிக்க ஆர்வமுடையவர். எமது ஆலயத்தில் செய்யப்படும் திருப்பணி வேலைகளுக்கு பலவகையாலும் உதபுபவர் சிறந்த பக்திமான். சைவ ஆசாரங்களையும், மரபுகளையும் பேணுபவர். இவ்வாறு அவர் பல காரியங்களை ஆற்றிய போதும் தன்னை ஆண்டவரின் கருவியாகவே கருதி வாழ்பவர். எனவே அவர் செய்யும் தொண்டுகள் தொடர அவரும் அவரது குடும்பத்தினரும் எமது ஸ்ரீ பரராசசேகரப்பிள்ளையாரின் அருள் பெற்று சகல செல்வயோக மிக்க பெருவாழ்வு வாழ வேண்டுமென்று பிரார்த்திக்கின்றேன்.

க. தங்கராசா
தலைவர் திருப்பணிச்சபை
ஸ்ரீ பரராசசேகரப்பிள்ளையார் கோவில்
இணுவில்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீடூழி வாழ்க!

தாவடி மண்ணில் பிறந்து, தாவடிப் பாடசாலையில் ஆரம்பக் கல்வி பயின்று தினசரி தாவடிப் பிள்ளையாரைத் தொழுது (இதுவரை இன்றுவரை) நாடு போற்றும் நல்லறிஞனாக பண்பாளனாக உயர்ந்து நிற்கும் நல்ல சேவையாளனைப் பாராட்டுவதில் நாம் பெருமை கொள்கிறோம்.

இந்த ஆலயத்தின் நிர்வாக சபை உறுப்பினராக செயலாளராக, தலைவராக, தேர்த்திருப்பணிச்சபை உறுப்பினராக, இப்படி எத்தனையோ பொறுப்புக்களை கடந்த சுமார் 20 வருடங்களாக வகித்து இறைபணி புரிந்து வரும் எமது அன்புக்கும், மதிப்புக்கும் உரிய திரு. க. தேவராஜா அவர்களின் உயர்வுக்கு அவரின் பெற்றோரின் பக்தியும் நம்பிக்கையுமே காரணம்.

அவருடைய தந்தையார் திரு. கந்தையா அவர்கள் ஒரு விவசாயி கடுமையான உழைப்பாளி, தான் கஷ்டப்பட்டும் பிள்ளைகளை கல்வி கற்க வைப்பதில் உறுதியாக இருந்தார். அவர்களின் குடும்பமே தாவடி பிள்ளையாரில் தீவிர பக்தி கொண்டவர்கள். அவர்களின் பக்திதான் இன்று திரு. தேவராஜாவை உயர்வடையச் செய்தது.

அருள்மிகு ஸ்ரீ அம்பலவாண வேதவிநாயகரின் அருள் என்றும் அவருக்கு உண்டு. அவரை ஆலய சார்பில் வாழ்த்துவதில் நாம் மகிழ்ச்சியடைகிறோம்.

**நீடூழி வாழ்க!**

| | | |
|---|---|---|
| **செ. அரியரத்தினம்**<br>**பொருளாளர்** | **S.R. சரவணபவன்**<br>**செயலாளர்** | **த. வீரசிங்கம்**<br>**தலைவர்** |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பெருமைக்கும் நுண்மைக்கும் பேரருட்கும் பேற்றின் அருமைக்கும் ஒப்பின்மையான்

என்ற முதுமொழிக்கிணங்க வாழ்கின்றவர் திருவாஎ.ர் கந்தையா தேவராஜா அவர்கள். இவர் யாழ் பல்கலைக்கழக வணிகத் துறைத் தலைவராவார். இவர் தமது சொந்த ஊராகிய தாவடி இந்து தமிழ்க் கலவன் பாடசாலையில் ஆரம்பக் கல்வி பயின்று கொக்குவில் இந்துக் கல்லூரியில் உயர் கல்வி கற்றார்.

இவர் உயர்வு தாழ்வு நோக்காமல் யார் யார் எந்தவகையான உதவியைக் கோரினும் மனநிறைவோடு செய்துகொடுக்கும் பரந்த நோக்கம் உடையவராதலின் பெருமைக்குரியவர் எல்லோரோடும் மனமகிழ்வுடன் அன்புகாட்டி அருளோடு நடப்பதால் நுண்மைக்குகந்தவர். பெரும் பெரும் விடயங்களை சாதிக்கக்கூடிய பேராற்றல் பெற்றமையின் பேரருள் படைத்தவர். ஆயிரத்தில் ஒருவராக போற்றக்கூடிய அன்பும் பண்பும் ஆற்றலும் இவரிடம் ஒருங்கிணைந்திருப்பதால் அருமைக்குரியவர். எனவே இவருக்கு ஒப்பாக எவரையும் கூறுவதரிது. தமது பிறந்த ஊராகிய தாவடி புகுந்த இடமாகிய இணுவில் யாழ் குடாநாட்டை அடுத்த எல்லாக் கிராமங்களிலும் இவருடைய ஆற்றொணாச் சேவை மேலோங்கிநிற்கிறது.

இவருடைய மனைமாட்சியை நோக்கும்போது பத்தாவிற்கேற்ற பதிவிரதையாய் வாய்த்த இலக்ஷ்மி என்ற மனையாள். மகாலட்சுமியாக உயர்ந்த பண்போடு அன்பின் உறைவிடமாய் விளங்குகின்றார். செல்விருந்தோம்பி வருவிருந்து காத்திருப்பார்.

என்ற முதுமொழிக்கிணங்க அவர்கள் இல்லம் நோக்கி வருவோரை மனமகிழ்வோடு உபசரித்து விடைகொடுப்பார். பிள்ளைச் செல்வங்களும் எவரோடும் அன்போடும் உறவாடும் பண்புள்ளவர்களாக உள்ளனர். திருவாளர் தேவராஜா அவர்கள் தன்னிகரில்லாத் தகமை தாளாண்மை தளர்வில்லா நேர்மை என்பவற்றில் உயர்ந்தவர்.

இவர் தமது கிராமம் அயல் கிராமங்கள் முதலியவற்றிலுள்ள கல்விக்கூடங்கள் நூல்நிலையங்கள் மன்றங்கள் கழகங்கள் யாவற்றின் வளர்ச்சிக்கும் இடைவிடாது உழைக்கும் பண்புடையவர். தலைமைதாங்கி நடத்தவும் வல்லவர். குறிப்பாக எமது திருநெறிய தமிழ் மறைக்கழகம் இவருடைய சேவையை என்றும் மறக்கமாட்டாது. கழக வளர்ச்சிக்கு வேண்டிய நிதி உதவி நல்கி கழகத்தை வழிநடாத்தும் நெறிமுறை, தலைமைதாங்குதல், ஆசி கூறுதல், பரிசு வழங்குதல் முதல் பல நிகழ்ச்சியிலும் பங்குகொண்டு எமது கழகத்தை வளம்படுத்திவருகின்றார். தமது அயலிலுள்ள எல்லா ஆலய விழாக்களிலும் கலந்துகொண்டு சிறப்பித்து வருகின்றார். பல சமூகத் தொண்டுகளிலும் ஈடுபட்டு எல்லோராலும் போற்றப்படுவதால் அன்னாருடைய புகழ் குன்றின் மிசை ஒளிபோல எங்கும் பிரகாசம் அடைந்துள்ளது. எனவே, இவருடைய சமூகத்தொண்டு நனிசிறக்க எல்லாம்வல்ல பரராஜசேகரப் பிள்ளையாரை வேண்டுகின்றேன்.

மா. இராசரத்தினம்
(முன்னாள் ஆசிரியர்)
திருநெறிய தமிழ் மறைக்கழகம்,
ஸ்ரீ பரராஜசேகரப் பிள்ளையார்
தேவஸ்தானம், இணுவில்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண்புக்கு இலக்கணமானவர்

யாழ் பல்கலைக்கழக வணிகத்துறைத் தலைவர் உயர்திரு தேவராசா அவர்கள் பொன்விழாக் காண்பதில் நாம் மிக்க மகிழ்வு கொள்கின்றோம்.

மதிப்பிற்குரிய கந்தையா தேவராசா அவர்கள் வணிகத்துறையில் திறன்மிகு மாணவ சமுகத்தை உருவாக்கியதோடு அவர்களின் வளர்ச்சிக்கு உறுதுணையாக பல கல்விசார் நூல்களையும் உருவாக்கியவர். அவரால் உருவாக்கபட்ட மாணவர்கள் பலர் நம் நாட்டிலும் நமது நாட்டுக்கு வெளியேயும் பல உயர்நிலைகளிலிருந்த இப்பொன்விழா நாயகனுக்குப் பெருமை சேர்த்து வருகின்றமை யாவரும் அறிந்ததே.

இப்பேராசான் கல்வித்துறைக்கப்பால் சமூகத்திற்கும் விழிப்புணர்ச்சி மிக்க வழி காட்டியாகத் திகழ்கின்றார் என்றால் அது மிகையாகாது.

உயர் பதவி பெற்றுவிட்டால் சமூக உறவுகளிலிருந்து விலகி சமூகத்தில் தம்மை உயர்வாகக் காட்டிக்கொள்வதில் பெருமை கொள்ளும் இன்றைய காலகட்டத்தில் சமூகத்தில் உள்ள அனைவரும் உயரவேண்டும் என்ற உன்னத நோக்கோடு தான் சார்ந்த சமூகத்தின் பாரம்பரிய கலாசார விழுமியங்களிலிருந்து விலகாது தன்னை நாடி வருவோருக்கெல்லாம் இன்முகம் காட்டி வரவேற்று வேண்டிய ஆலோசனையும், உதவியும், வழங்கும் உயர் பண்பாளன் உயர்திரு தேவராசா என்றால் மிகையாகாது.

இறைவன் சந்நிதியிலேயே உயர்வு தாழ்வு என்று பாகுபாடு காட்டப்படும் இன்றைய நிலையில் எமது பொன்விழா நாயகனின் இல்லம் நாடி வருகின்ற குடிசையில் வாழும் கூலித் தொழிலாளி முதல் மாளிகையில் வாழும் லட்சாதிபதிவரை, பள்ளி செல்லாப் பாமரர் முதல் பட்டங்கள் பல பெற்ற பேராசன்கள் வரை அனைவரையும் சமமாக வரவேற்கும் பொது நோக்கின் உச்சப்பண்பை வேறு எங்கும் காணமுடியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதவி நாடிச் சென்றால் அவரிடமிருந்து கேட்கமுடியாத வார்த்தைகள் இயலாது, முடியாது, நேரமில்லை என்பனதான்.

எந்த வேளையிலும் அவரிடம் காண முடியாதது. சினமும், சீற்றமும் தான். அவர் இது வரை உருவாக்காதது தனக்கெதிரான விமர்சகனைத்தான்.

சமத்துவத்தின் தேவனாக அந்தரிச்சுச் செல்வோருக்கு ஆபத்பாந்தவனாக கல்வி புகட்டுவதில் பேராசானாக, தனது தொழில் நிலைக்கப்பால் சிறந்த சமூக சேவகனாக, சைவத்தின் அறங்காவலனாக விளங்கும் சாந்தசொரூபிக்கு பொன்விழா என்றதும் எமது உள்ளம் பெரு உவகை கொள்கின்றது.

இப்பொன்விழா நாயகனுக்கு எதிரானதொரு விமர்சகன் ஏன் இதுவரை உருவாகவில்லை என்ற வினாவை எழுப்பி அதற்கு விடை தேட முற்பட்டால் அவர்தம் பண்பின் முழுமை நிலையை அறியலாம்.

இவ்வாறு சிறந்து விளங்கும் உயர்திரு தேவராசா அவர்களுக்கு பொன்விழா எடுப்பதில் அகமகிழும் அதேவேளை அவர் தனது கல்விப்பணியில் மேலும் மேலும் மேன்மையும், அவர்தம் கல்வி, சமூக சேவைகள் மேலும் வளர்ச்சி பெறவும் வாழ்த்துவதுடன், இப்பெருமகனை வாழ்த்துவதில் எமது கழகம் பெருமையடைகின்றது.

நன்றி

இணுவில் சைவத் திருநெறிக் கழகம்,
இணுவில்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "HELP EVER - HURT NEVER"

## எப்போதும் உதவிசெய் - ஒருவருக்கும் தீங்கிழையாதே - பாபா

பகவான் ஸ்ரீ சத்தியசாயி பாபா அவர்கள் 18 புராணங்களையும் இரண்டு வசனத்தில் கூறுவதனானால் 'எப்போதும் உதவிசெய் - ஒருவருக்கும் தீங்கிழையாதே' "Help ever - Hurt Never" என்று கூறுவார். இந்தக் கூற்றிற்கு ஒரு நடைமுறை உருவம் கொடுப்பதாயின் அது எமது அன்பிற்கும் மதிப்பிற்கும் உரிய நண்பர் தேவராஜா அவர்கள் தான். வயது வித்தியாசமின்றி எவர் உதவிகேட்டாலும் 'ஓம்' என்பதுதான் அவரது பதிலாக இருக்கும்.

இணுவில் ஸ்ரீ சத்தியசாயி பஜனை நிலையத்தின் தலைவராகப் பொறுப்பேற்று வழிநடாத்திச் செல்லும் இவர் பல்வேறு பொது ஸ்தாபனங்களின் தலைமைப் பொறுப்பையும் ஏற்று அனைவரது பாராட்டுதல்களையும் பெற்று வழிநடாத்திச் செல்கிறார்.

தன்னுடைய ஆரம்பக்கல்வி கற்ற பாடசாலையான தாவடி இந்து தமிழ்க் கலவன் பாடசாலையை மறக்காது அப்பாடசாலையின் பழைய மாணவர் சங்கத்தலைவரா கவும், அவர்களின் குலதெய்வமாக விளங்கும் தாவடி அருள்மிகு அம்பலவாண வேதவிநாயகர் ஆலய தலைவராகவும், செயலாளராகவும் பல பொறுப்புக்களை வகித்து, தொடர்ந்தும் பணியாற்றி வருகிறார். எமது தாவடிக் கிராமத்திற்கு பெருமை சேர்த்துத் தரக்கூடிய ஒருவராக அன்பர் தேவராஜா அவர்கள் மிளிர்ந்துகொண்டிருக்கிறார்.

அவருக்கு 50வயது என்பதை நம்பமுடியவில்லை. இன்னும் ஒரு இளைஞராகவே காட்சி தருகிறார் என்றும் இளைஞராகவே இருந்து நல்ல சேவைகள் செய்து, எமது நாட்டிற்கு அவசியம் தேவைப்படும் தன்னலமற்ற சேவைகள் செய்து ஒரு பூரண வாழ்வு வாழவேண்டுமென எல்லாம்வல்ல இறைவனை வேண்டுகிறேன்.

S.R.சரவணபவன்,
ஆன்மீக இணைப்பாளர்,
வடபிராந்திய சத்தியசாயி சேவா நிறுவனம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்று அவர் பல்கலைக்கழகத்தின் துறைத் தலைவர் ஆனாலும் என்றும் ...... எங்களுக்கு தேவா தான்!

1977 ஆண்டு ஒரு யூன் மாதம் ................

'நீயே வித்தையின் உறையுள்
நினதே எங்களின் உயர்வு
நினதடி ஏற்றுவோமே ..................'

பாடல் வரிகள் -

கல்லூரிக் கீதத்தின் - அந்த உணர்வு பூர்வமான அடிகளை எல்லோருமே சேர்ந்து அன்றும் பாடி முடித்தாயிற்று தலைமை மேசையின் நடுவன்: எனக்கு அருகில் பெருமை நிறைந்த பிரதம விருந்தினராக இருந்த எங்கள் அனைவராலும் அன்றிலிருந்தே நட்புணர்வோடு நேசிக்கப்பட்ட எம்மவர் 'தேவா' வை நோக்குகிறேன்.

அந்த ஒரு கணத்தில் நான் கண்ட அதே புன்சிரிப்பு, அடக்கம் நிறைந்த அழகு 'தம்பீ' என்று அணைத்தவிதம் திருமணமாகுமுன் இளைஞருக்கே உரியதாயிருக்கும் உடற்கம்பீரம் ............ நினைத்துப் பார்க்கிறேன். உயர்தர வகுப்பு மாணவர் மன்றத்தின் தலைவர் என்ற வகையில் அந்தக் கல்விமானை, எம் மதிப்புமிகுந்த பிரதம விருந்தினரை எம் அன்னை கொக்குவில் இந்துவின் அரிய மைந்தனை மேலாக என் குருவை நலன் விரும்பியை அன்று வாழ்த்தி வரவேற்ற நான் அவரை அவர் வாழ்வின் ஐம்பதாவது அகவை நினைவில் வாழ்த்தக் கிடைத்ததே பெரியதோர் வாய்ப்பாக கருதுகிறேன்.

இன்று இவை அனைத்திற்கும் மேலாக கொக்குவில் இந்துக் கல்லூரியின் வளர்ச்சியிலேயே முன்னின்று உழைத்துவரும் பழைய மாணவர் சங்கம், அபிவிருத்திச் சங்கம் என்பவற்றில் என் சக பணியாளாகவும் எங்கள் அன்பு 'தேவா' வை பெற்றதில் என் மகிழ்வும் பெருமையும் இரட்டிப்பாகிறது.

கொக்குவில் இந்துவின் மைந்தனாய் கொழும்பு பல்கலைக்கழகத்தின் திறமைமிகு கணக்கியல்ப் பட்டதாரியாய் எம் மண்ணில் தோன்றிய சர்வகலாசாலையின் வணிக கல்விப்பீடத்தின் விரிவுரையாளராய், இன்று வணிகப்பீடத்தின் தலைமையாசானாய் விளங்குபவர் எம் தேவா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




இணுவில் லயன்ஸ் கழக ஆரம்ப விழாவில் பிராந்தியத் தலைவர் லயன் ஏ.தியாகராஜா அவர்களுடன்.




இருபாலை எக்ஸ்பிரஸ் கல்வி நிலையத்தின் வெள்ளி விழாவில்



நியூட்டன் நிறுவன அதிபருடன் வாணிவிழாவில் பங்குகொள்ளல்.



சப்பிரகமுவ பல்கலைக்கழகத்தின் கருத்தரங்கில் கலந்து கொண்ட பின்னர் நண்பர்களுடன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




இணுவில் லயன்ஸ் கழகத்தின் உருவாக்கத்திற்கு உழைத்தவர்களுடன்




யாழ்.கலைமகள் வித்தியாலய சிறார்களுக்கு இணுவில் லயன்ஸ் கழகம் வழங்கிய அன்பளிப்பை ஏற்றுக்கொள்ளல்.




இணுவில் லயன்ஸ் கழகத்தின் அங்குரார்ப்பண வைபவத்தில் பிரதம விருந்தினரான பிராந்தியத் தலைவர் லயன் தங்கேஸ்வரனிடம் அன்பளிப்புப் பெறுதல்.



தாவடி இந்து தமிழ் கலவன் பாடசாலையில் மரம் நடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டிருத்தல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாவடியில் பிறந்து கொக்குவில் இந்துவின் அரவணைப்பில் தவழ்ந்து தன்னை முழுமையான கல்வியாளனாக்கி வணிகத்துறைக்கே தன்னை அர்ப்பணித்து, பல்கலைக்கழகத்தின் பெருமைக்கும் காரணமாகி இருக்கும் எங்கள் தேவராஜா உண்மையிலே எங்கள் ராஜா தான்!

பழைய மாணவர் சங்கத்தின் தலைமை ஆசனத்தைத் தம் இளவயதிலேயே இரண்டு தடவை அலங்கரித்த பெரியவர். இணுவையம் பதியிலே தம் முயற்சியால் லயன்ஸ் கழகத்தையும் அமைத்து அதன் ஸ்தாப தலைவராக விளங்கிய அவர் பெருமை விரும்பாத ஒரு சமூகத் தொண்டர் மகாத்மா காந்தியை இலங்கைக்கு அழைத்து வந்த மாபெரும் அதிபர் ஹண்டி பேரின்பநாயகம் அவர்களுக்கு அமைக்கப்பட்ட நினைவு விழாக் குழுவின் தலைமைகூட எம் தேவராஜனுக்கே வழங்கப்பட்டதையும் அவர் பெரும் சிறப்பில் ஒன்று.

எந்த நேரமும் சிரித்த முகமும் சமநிலையான ஆளுமையும் கொண்டவராக திகழும் எம் பொன்விழா நாயகரின் தலைமைத்துவ எம் கல்லூரி அன்னை, பெற்ற அபிவிருத்திகள் பலவாகும். இணுவை மண்ணின் சிறப்பில் மிகுந்த ஆசாரமும் கடவுள் பக்தியும் நிறைந்த எம் ஆசான் இன்று பொன்விழாக் காண்பது எமக்கெல்லாம் பெருமையும் நிறைவும் தரும் நிகழ்வேயாகும்.

அருமையான இல்லக்கிழத்தியான அவர் மனையாட்சி பிள்ளைகள் சகிதம் நிறைவான வாழ்வுகண்டு கோடை வானத்து விண்மீன் அடுக்கம்போல 'தேவா' வின் வாழ்வு பெருக மனம் நிறைய வாழ்த்துகிறேன்.

லயன் இ. செல்வநாதன் (நகுலன்) J.P,
'செயலாளர்',
பழைய மாணவர் சங்கம்,
கொக்குவில் இந்துக் கல்லூரி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## யாழ் தாவடி இந்துத் தமிழ்க் கலவன் பாடசாலையின் வளர்ச்சியில்

### உயர்திரு க. தேவராஜா அவர்களின் பங்கு

'ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன் மகனைச் சான்றோன் எனக் கேட்ட தாய்'

என்ற வள்ளுவன் வாக்கிற்கு இணங்க தாவடியூர் அன்னை பெற்றெடுத்த தலைமகன் பொன்விழாக் கொண்டாட இருப்பதனை எண்ணித் தாயவள் அகம் பிரகாசிக்கின்றாள். அவர் வேறு யாருமல்லர். எமது சமூகத்தின் ஓர் அங்கமாகத் திகழ்கின்ற யாழ் பல்கலைக்கழகத்தின் வணிகத்துறைத் தலைவராக கடமையாற்றுகின்ற திருவாளர் க.தேவராஜா ஐயா அவர்களேயாவர். இப் பெருந்தகையாளரைச் சிறப்பிக்கும் வகையில் செய்யப்படும் பொன்விழாவில் தேவாமிர்தம் என்னும் நூல் வெளியிடப்படுவது இவ் விழாவிற்கு மணிமகுடம் வைத்தாற் போன்று மேலும் சிறப்பினையளிக்கின்றது.

திருவாளர் க. தேவராஜா ஐயா, அவர்கள் முன்பு யாழ் தாவடி இந்து தமிழ்க் கலவன் பாடசாலையின் பழைய மாணவர் சங்கச் செயலாளராக இருந்து அரும்பணியாற்றியவர். அவரின் பொன்விழா நிகழ்வில் தாவடி இந்துத் தமிழ்க் கலவன் பாடசாலை பழைய மாணவர் சங்கச் செயலாளர் என்ற வகையில் வாழ்த்துரை வழங்குவதில் பெரும் மகிழ்ச்சியடைகின்றேன்.

திருவாளர் க.தேவராஜா ஐயா அவர்கள் இப் பாடசாலையில் ஒரு தசாப்தங்களுக்கு மேலாக பழைய மாணவர் சங்கச் செயலாளராக இருந்து நற்பணி ஆற்றிய காலத்தில் 1987 இல் திரு அநுவை நாகராஜன் அவர்கள் அதிபராக பதவியேற்ற போது புதியதோர் அத்தியாயம் உருவானது. அவ்வேளை திருவாளர் க. தேவராஜா ஐயா அவர்களின் விடா முயற்சியினால் புதிய காணி ஒன்றினைக் கொள்வனவு செய்து அதில் மூன்றுமாடிக் கட்டிடம் ஒன்றை நிர்வாகத்தினருடன் சேர்ந்து அமைக்க அரும்பாடு பட்டார். அத்துடன் இவரின் விடா முயற்சியினால் மேலதிகமாக தற்காலிக கொட்டகை ஒன்றும் அமைக்கப்பட்டு அதில் ஆரம்ப வகுப்புக்கள் நடாத்தப்பட்டன. 1999 இல் இவரின் நல் முயற்சியினால் U.N.H.C.R இன் நிதி உதவியுடன் நீண்டகாலமாகவே ஒரு பிரச்சனையாக இருந்த மலசலகூட தொகுதி ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனால் பாடசாலையின் அடிப்படை வசதிகள் பூர்த்தியாக்கப்பட்டுள்ளமை மாணவர்களுக்கு ஓர் வரப்பிரசாதமாக காணப்படுகின்றது.

மேலும், இவர் பாடசாலை மட்டுமன்றி எல்லா மக்களாலும் நேசிக்கப்படுபவராக காணப்படுகின்றார். அன்பு, பணிவு, நன்றி, அடக்கம், உதவி செய்யும் மனப்பாங்கு என்பவற்றினைக் கொண்டு மக்களுக்கு நல்ல ஆலோசனை வழங்குவதோடு எவர்க்கும் இன்முகத்துடன் உதவி செய்பவராக காணப்படுகின்றார். இதனால், இவரின் வீட்டில் 'பூவினைத் தேடி சுற்றித் திரியும் தேன் வண்டுகள் போல' மக்கள் வந்திருப்பதைக் காணலாம். எனினும், அவரோ எவ்வித மனம் கோணல் இன்றி 'பசி நோக்காது, கண் துஞ்சாது கருமமே கண்ணாகி சமூக சேவைக்கென அதிக நேரத்தைச் செலவிட்டு தனக்கென அன்றி பிறருக்காக வாழுகின்ற ஓர் உத்தம சீலராகக் கண்டுகொள்ள முடிகின்றது.

எனவே, இப்படிப்பட்டவரின் பணிகள் மென்மேலும் சிறக்க வேண்டும் எனவும் அவர் நீண்ட ஆயுளும். நிறைந்த செல்வங்களும் பெற்று வாழ வேண்டும் என இப்பொன்விழா நன்நாளில் இறைவனை வேண்டி விடை பெறுகின்றேன்.

சீ. பரமசிவம், B.Com (Hons) Acc.Spe.
செயலாளர்,
பழையமாணவர் சங்கம்,
யா/தாவடி இந்துத் தமிழ்க் கலவன் பாடசாலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமூகநலனுக்காக உழைக்கும் சமத்துவவாதி

யாழ் பல்கலைக்கழக வணிகத்துறைத் தலைவர் உயர்திரு கந்தையா தேவராசா அவர்கள் பொன்விழாக்காண்பதில் நாம் அகமகிழ்கின்றோம்.

உயர்திரு தேவராஜா அவர்களின் கல்விப்பணி உயர்வானது. அவர்களது கல்விப்பணிமூலம் வணிகத்துறையில் ஆளுமையும் பண்பும் கொண்ட பெரும் மாணவர் சமூகத்தை உருவாக்கியவர், உருவாக்கி வருபவர், அவரால் உருவாக்கப்படும் மாணவர்கள் கல்வித்திறமை மட்டுமல்லாது கண்ணியம் மிக்கவர்களாகவும் விளங்குகின்றமை நிதர்சனமான உண்மை.

கல்விப்பணிமட்டுமல்லாது சமூகமட்டத்தில் சகலதுறைகளிலும் முழுஈடுபாடு கொண்ட ஒப்பற்ற ஓர் சமூகநலவாதியாகவும் விளங்கும் திருவாளர் தேவராஜா அவர்கள் எமது சமூகம் முழுமைபெறவேண்டும் என்றநோக்கில் கல்வி, கலை கலாசார, சமய பணிகளில் முழு அளவில் ஈடுபட்டு வருகின்றமையை கண்டு கொள்ள முடியும்.

சீற்றம் காணாத சிரித்த முகத்தோடு சீரிய பணி உய்யும் பண்பு அவருக்கே தனித்துவமானது. எந்த வேளையிலும் எந்த இடத்திலும் தன்னை நாடி வருபவர்கள் யாராக இருப்பினும் சிரமம் கருதாது அவர்களுக்கு வேண்டிய உதவியையும் ஆலோசனையையும் வழங்குவதில் அவருக்கு நிகர் அவரேதான்.

இலஞ்சமும் ஊழலும் பெரும் பூதாகரமாக வளர்த்து வரும் இன்றைய உலகில் பிரதி உபகாரம் கருதாது பிறருக்கு உதவி புரிவதிலும் திருப்தி அடையும் ஒரு பொதுநலவாதியாக சமூகம் அவரைக்காண்கின்றது.

அவர் தம் பணிக்கு காலவரையறை ஏதும் கிடையாது அவரது இல்லம் காலையும் மாலையும் ஓர் இலவச ஆலோசனை மையமாக செயற்படுகின்றது என்றால் மிகையில்லை. சாதி, சமய, அந்தஸ்து, இளையோர், முதியோர் என்ற எந்த வேறுபாடும் காட்டாது யாவரையும் இன்முகம்காட்டி வரவேற்று அவர்கள் எத்தகைய துன்பமான பிரச்சினைகளுக்கும் ஆலோசனை கேட்டு வந்தாலும் அவர்களுக்கு தகுந்த ஆறுதல் தரும் பதில்கள் கூறி இன்முகத்துடன் அவர்களை சந்தோசமாக திரும்பும்படி செய்யும் சிறந்த உளவளத்துணையாளராகவும் அவரை நாம் காண்கின்றோம்.

இவ்வாறான உயர்தகுதியும், உயர் பண்பும் கொண்ட மனிதத்தின் முழுமை பெற்ற ஒரு பெருந்தகைக்கு பொன்விழா என்றதும் எமது சிவகாமசுந்தரி சனசமூக நிலைய குடும்பம் மட்டுமல்லாது இணுவைமாநகரமே பூரித்துநிற்கின்றது.

இவ்விழா நாயகன் கல்விப்பணியில் மேன்மேலும் உயர்வு பெற்று சமூகப்பணியில் அவர் சேவை மேலும் வளர்ச்சி பெற்று அவர் சார்ந்த சமூகம் உயர்வு பெறவும் இவ்வாழ்வில் அவர் தம் மாண்புறு மக்கள் சிறப்புக்கள் பெற்று மணிவிழாக்காணவும் சேவையின் வளர்ச்சியில் மேலும் பெருவிழாக்களை கண்டு சிறப்போடு வாழ எல்லாம் வல்ல சிவகாமி அம்பாள் அருள்செய்ய வேண்டும் என பிரார்த்தித்து நிற்கின்றோம். இணுவில் சிவகாம சுந்தரி சனசமூக நிலையத்தினர்.

நன்றி

இணுவில் சிவகாமசுந்தரி
சனசமூகநிலையம்
01.03.2001



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பொன்விழாத் தேரேறும் தேவனே வாழி

மண்ணில் நற்பணிகளின் காவலனே
மாண்பான சேவைகளின் நாயகனே
கண்போல் சமூகநீதியைக் காப்பவனே
கடமை கண்ணியம் கட்டுப்பாட்டுடன் உழைப்பவனே
எண்ணிய வணிகத்தின் எழிலான தலைவனே
ஈழவரின் நெஞ்சத்தில் இடம்பிடித்த தேவனே
பொன்விழாத் தேரேறும் இணுவையின் புனிதனே
போற்றி உன்னை வாழ்த்தி வணங்குவோம்.

மதுரகவி. காரை. எம்.பி.
அருளானந்தன்
(செயலாளர், கல்வி கலை இலக்கிய
பண்பாட்டுக் கழகம்)
யாழ்ப்பாணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பல்லாண்டு வாழி

பலகலையின் கூடமதில் பவனிவரும் தென்றல் – இவன்
பண்புடையோர் கூட்டதில் பகலவனாம் மன்னன்
வல்லமையின் கணபதியை வணங்கிடுவான் நிதமும்
நல்லவளாம் 'இலட்சுமி'யின் நாயகனும் இவனே
வல்லமைகள் உள்ளான் வான் புகழும் உள்ளான்
செல்வமெலாம் உள்ளான் சேவை பல செய்வான்
கல்மனத்தோர் ஆயிடினும் கனிவர் இவன் செயலால்
நல்லவர்கள் நாடிமகிழ் தேவராசா வள்ளல் – இவன்
பல்லாண்டு பல்லாண்டு பல்லாண்டு வாழ – ஸ்ரீ
பரராஜ சேகரக் கணேசன் பதம் பணிவோம்!

**திரு வை. ஸ்ரீறீஸ்கந்தவரோதயன்**
**செயலாளர்,**
**தேவா பொன்விழாச்சபை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொன்னுக்கு ஒரு பொன்விழா



தாவையூராம் தரணியதில் கோயில் கொண்டும்
தண்ணளியான் கணபதியின் தாழ் பணிந்தே
பூவையர்கள் போற்றுகின்ற புகழி னுவை
புண்ணியனாம் விநாயகனின் பதம் பணிந்தே
தேவன் அவன் பண்புகளாம் பணிகள் தன்னை
தெவிட்டுகிறேன் தேமதுரக் கவிகள் பாடி

பொன்னுக்கொரு பொன்விழாவாம் இணுவை மண்ணில்
எண்ணுகின்றீர் ஏன் என்று எண்ணிப் பார்ப்போம்
பொன்னுக்கு நிகர் என்றால் பொன்தான் எங்கள்
பொன்னுக்கு நிகர் என்றால் ஏது சொல்வீர்?
விண்ணுக்கு முடிவுண்டா? எண்ணுவீர் அவர்தம்
பண்புக்கு எல்லையுண்டா? பணிவுக்கு நிகருண்டா?

அன்புக்கோர் உறைவிடமாம் ஆத்திரத்தின் மறைவிடமாம்
உள்ளத்தின் உயர்வுக்கு உன்னத இலக்கணமாம்
கள்ளமில்லா நெஞ்சத்தின் கலங்கரை விளக்கமவர்
வணிகத்தின் மகுடமவர் வர்த்தகத்தின் சிகரமவர்
புனிதத்தின் பொக்கிஷமாம் மனிதத்தின் மணிமுடியாம்
இனிய தேவா அமிர்தம் இனிதே வாழி வாழி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதவிகள் பலர் தேடி அலைகின்ற இவ்வுலகில்
பதவிகள் அவரைத்தேடி அலையும் விந்தை யென்ன
புகழ் தேடி மாந்தர்கள் புவியினிலே ஓடும் வேளை
புகழெல்லாம் அவரைத்தேடி ஓடுகின்ற மர்மமென்ன?
ஒழுக்கத்தின் உறைவிடமே ஒப்பில்லா மாமணியே
களங்கமில்லா உள்ளமென்றும் கனிவோடு வாழி வாழி

உயர்வு தாழ்வில்லா உத்தமனாம் உந்தனுள்ளம்
ஜாதி மதங்களின்றி ஜோதியாய் ஒளிர்கிறதே
மனித நேயமெல்லாம் மரித்து நிற்கும் இவ்வுலகில்
மனிதனாய் வாழ்ந்து நிற்கும் மாணிக்கரத்தினமே
உனக்கா வாழ்ந்திடாது உறவுக்காய் ஏங்கிடாது
பிறருக்காய் பணிகள் செய்யும் பேருள்ளம் வாழி வாழி

ஓய்வில்லாப் பணிகள் என்றும் ஒழிப்பில்லாப் பேச்சுமிங்கே
ஏழைக்கோர் கர்ணன் என்றுஎல்லோரும் போற்றுகின்ற
எங்கள் ஊருக்கோர் தேவா என்பது உண்மை உண்மை
உள்ளத்தால் உயர்ந்து நிற்கும் உன்னதமான உந்தன்
பொன் விழாக்காணுகின்றோம் போதாது உனக்கீதையா
அன்பான உன்பணி என்றும் அளவற்று நீடு வாழி

ஆக்கம்
இரா. அருட்செல்வம்
(ஆசிரியர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொன்மனைச் செம்மல் புகழோடு வாழி



செந்தமிழ் ஊறும் நம்தமிழ் ஊரில்
பைந்தமிழ் போற்றும் பொன்மனைச் செம்மல்
வெந்தணல் காட்சி வேகிடும் நாட்டில்
உம்பணி கண்டு வியந்து போனோம்.

சாந்தமே சரீரமாய் சாற்றிடும் வேந்தராய்
மாந்தர்கள் மதித்திடும் மணிமொழிச் செல்வனாய்
சேந்தனே சேற்றினில் முளைத்திடும் முத்தமாய்
காண்டமே படைத்திடும் காவியநாயகன் களிப்போடு வாழி!.

ஊருலகை மதித்து ஒப்பாரும் மிக்காராய்
ஊருலகே மதிக்க உமைப்போன்றோர் யாரிங்கு
பாருலகு என்றும் பணியென்றே எங்கும்
பாதிமலர் போற்றும் நாயகனைத் தேடி.

பல்கலையில் பலநூறு பயிலுநர்கள் நின்வழியில்
பள்ளிகளில் பல்வேறு பணிவுடைகள் நின்தயவில்
சொல்லில் அடங்காத சுடர்கொண்ட நாயகனே
புகழோடு நீடூழி வாழிய வாழியவே!.

சரா. புவனேஸ்வரன் (ஆசிரியர்)
யாழ் மத்திய கல்லூரி,
யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றுயர் மணிநாள் கண்டீர்

ஏற்றமும் பணிவும் ஒன்றாய் இயங்குநற் சிந்தையாலும்
ஆற்றலும் முயற்சியோடும் அனுசரிக்கின்ற - நேச
வார்த்தைசொல் மலர்ச்சியாலும் 'வாண்மை' யென்றுயர்ந்த கல்விப்
பேற்றினுக்குரிய எங்கள் பெருமகன் தேவர் வாழ்க!

பெரியவர் - சிறியோர் என்று பெருமைகொள் தலையோ - அன்றி
உடையவர் - இல்லார் என்று உலகுசெய் தவறோ இன்றி
உதவிடும் குணமொன்றாலே உடனிருந்(து) எல்லா அன்பர்
நிகழ்விலும் தான் ஒன்றாக நினைந்திடும் தேவர் வாழ்க!

கொள்கையோடிணைந்த வாழ்வும் கோபங் கொண்டறியா நோக்கும்
நல்லநேர் சமூக சேவை நாட்டமும் கொண்டெம் ஊரின்
பள்ளிகள் - கோயில் - மக்கட் பணிகளில் மனம் மெய்யாக
உள்ளிருந்(து) ஊறும் அன்பால் உயர்ந்த நம் தேவர் வாழ்க!.

தந்தை தாய் தவத்தின் பேறாய் தருமத்தின் விளைவாய் - நல்லோர்
சிந்தையுள் பெருமை கூறும் சிறப்பொடு வளர்ந்தெம் ஊரின்
பண்பொடு ஒன்றாய் - நன்றாய்ப் பழகும் உம் சுற்றத்தோடும்
இன்றுயர் 'மணிநாள்' கண்டீர் இறைவனின் அருளால் வாழ்க!.

நா. சிவசிதம்பரம்
ஆசிரியர்
கொக்குவில் இந்து ஆரம்ப
பாடசாலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தேவா என்னும் தேன் துளிகள்

தாவடி மண் செய்த தவப்பயனால்
தாராள சிந்தையாளனாம் - தேவா
தரணியிலே வந்துதித்தார்
தற்திறமை, தயவு நிறைந்த - ராஜா

தேவியவள் செய்த நற்பயனால்
தேவனவன் வாழ்க்கைத் துணையானாள்
தெவிட்டாத செல்வமாம் மழலைச்
செல்வம்
தேர்ந்தெடுத்தாள் போல் இனிய குடும்பம்

தேவா என்றால் அறியாதவர் யார்?
தேடி வருவோரை அளவிட முடியுமா?
- உன்னால்
தேவியவள் சரஸ்வதியும்
தேவனுடன் நட்புக் கொண்டாள்

வர்த்தகம் என்றால் நாமெல்லாம்
வகுப்புத் தவறாமல சென்றிடுவோம்
வம்பு, தும்பு ஏதுமின்றி
வளமான அறிவினை ஊற்றிவிட்டார்

நேரம் போவதே தெரியாமல்
நேர்த்தியாய் புகட்டிடுவார்
நேர்மையான கல்வியாளன்
நேர் கொண்ட நல் நடத்தையாளன்

பல்கலைக் கழக கல்விமான் முதல்
பாமர ஏழைகள் வரை
கனிவாக பழகிடுவார்
கந்தையா அன்னம்மாவின் அன்பு மைந்தன்

கல்விக் கொடையாளி மட்டுமல்ல
கடமை, கருணை வள்ளல் - நீ
இராசையாவின் மருகா இனியோனே
ஈழத் திருநாட்டின் இளையோனே

வாழ்க நீ வளர்க பணி
வாழிய பல்லாண்டு
குடும்பமும் இனிதே சிறந்து
குவலயமும் இன்பமாய் வாழ்ந்திடுமே.

மாணவன்
மு. முருகவேள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாண்புகள் ஆயிரம் பெருக்கி வாழ்க





திருமலியும் ஈழவள யாழ்ப்பா ணத்தில்
திகழ்ந்திலங்கும் தாவடியூர் பொன்மனச் செம்மல்
பெருமறிஞன் பேராசான் தேவராஜா
கருதரிய கலைஞானம் நிரம்ப வுள்ளான்
கன்னலின் தமிழமுதம் இனிக்கத் தந்தான்
முருகன் எனும் நாமன் தீந் தமிழை
வணிகவியல் மேதை என போற்றிடவே

நாளுமே துதிசெய்து போற்றிப் பாடிக்
கல்லினையும் உருக்குவணம் புராண காதை
காட்டும் சிவ நெறியாவும் அள்ளித் தந்தான்
சொல்லினிக்கும் செயலினிக்கும் வாயினிக்கச்
சொரிந்தனன் சொன்மாரி புளகமெய்த
மெல்லிய நன்நெஞ்சகத்தான் தேவராஜா
மேதினியில் பல்லாண்டு வாழி! வாழி!

நல்லதொரு ஆசானாய் மிளிர்ந்த தாலே
நல்லாசான் பட்டத்தைப் பெற்று நின்றார்
சொல்லரிய குணமுடையார் சோர்வு காணார்
சுற்றத்தார் போற்றிடவே வாழும் செம்மல்
பலவிதமாய் வணிகவியல் சிறந்து ஓங்க
பணி பலவும் நன்காற்றி என்றும் வாழ்ந்தார்
நல்லவராய் வல்லவராய் வாழ்ந்த தாலே
நாமின்று அவர் புகழைப் போற்று கின்றோம்

சொல்லுந் திறனும் சுவை பயக்க நற்றமிழை
கல்லுங் கனிந்துருகக் கற்பிக்கும் - வணிகவியலான்
பண்பான பலராமன் நீ பல்லாண்டு பல்லாண்டு
கண்டினிது வாழ்க! வாழ்க!


S. தம்பிராசா
ராஜா மெடிக்கல்
சுன்னாகம்.

வி.தயாபாலன்
(விஜயசிங்கம் குடும்பம்)
கங்கை ஓ(f)செற் பிறின்டேஸ்
யாழ்ப்பாணம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதுப் பொலிவுடன் மிகக் குவிப்போம்

தமிழர்கள் நாமென்று தலைநிமிர்வோம் – எமைச்
சார்ந்துள்ள வளம் கூட்டிச் பயன்கொள்ளும்
அமிழ்தமெனக் கல்விநலம் அனுபவிப்போம் – அதன்
ஆற்றலிலே புதுப் பொலிவு மிகக் குவிப்போம்

(தமிழர்கள்)

மண்ணிதனைப் பண்படுத்திப் பயிர்வகைகள் – புது
மரபினங்கள் செழித்துவர விளைவுயர்த்துவோம்
பண்ணைகளைத் தரமுயர்தி விலங்கு பட்சி – வளர
பாங்குடனே ஓங்கிவரப் பராமரிப்போம்

(தமிழர்கள்)

தென்னைபனை கனிமரங்கள் செழிப்புறவும் – மிகு
தெரிவினங்கள் பரிணமித்து விரிவுறவும்
வண்ணமுற வனவளங்கள் வனப்புறவும் – எம்
வாழ்விடங்கள் பொலிவுறவும் வழிசமைப்போம்

(தமிழர்கள்)

கடல்வளமும் துறைமுகமும் கதித்துயர – மண்
கண்டவளம் எண்ணைவளம் கொண்டுவர
உடல்நலமும் உழைப்புமதில் ஒன்றிடவே – ஒரு
உத்வேகம் உந்திடவே உயிர்ப்படைவோம்

(தமிழர்கள்)

வாணிபமும் பொருளீட்டும் வகைபலவும் – வரு
வளமான கணனிமுறை மென்பொருளும்
பேணிவரும் தொடர்பாடல் பொறிமுறையும் – பெரும்
பேறுபெறத் தேறிவரப் பெரிதூட்டுவோம்

(தமிழர்கள்)

என்னவளம் இல்லைஎங்கள் திருநாட்டில் – அவை
எத்தனையோ அத்தனையும் எழிலூட்டுவோம்
மன்னரென எல்லோரும் சுதந்திரமாய் – தன்
மானத்துடன் வாழ்ந்துயர வலுவூட்டுவோம்

(தமிழர்கள்)

நயினைக் கவிஞர்
நாக சண்முகநாதபிள்ளை
(முன்னாள் அதிபர் யாழ். மத்திய கல்லூரி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேவாவுக்கோர் நே(தே)சக் கடிதம்

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் - வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்"

- குறள்

தேவா ஐயா இணுவிலில் மணம் முடித்தார், வாழ்கின்றார் என்ற பொதுவான வார்த்தைக்கு ஓர் அர்த்தம் வைத்து ஐம்பதை அடையும் அவருக்கு இணுவில் மக்களே விழா எடுக்கின்றார்கள் என்றால் அதில் ஒரு மண்வாசனை, சேவை நலம், தொடர் முயற்சிகள் என்ற பல அர்த்தங்கள் தொனிக்கின்றன. இன்று எமது நாடு உள்ள நிலைமையில் தேவாவுக்கு விழா எடுக்கின்றார்கள் என்பதை நினைக்கும் போது அவர் எம் ஊருக்குச் செய்த தன்நலமற்ற சேவைகளின் ஒரு தோற்றம் தெரிகின்றது. அதனைக் கண்டு இணுவிலில் வாழும் மக்கள் மட்டுமல்ல வெளிநாடுகளில் வாழும் இணுவை மக்களாகிய நாமும் பெருமையடைகின்றோம். அவர் படித்துப் பட்டம் பெற்ற கல்வியின் பயன், அவர் சார்ந்துள்ள அமைப்புகளின் பயன்கள் அனைத்தும் என்றும் எம் ஊருக்குத் தொடர்ந்து தேவை என்பதை அன்புக்கட்டளையாக கேட்டுக்கொள்கின்றேன்.

தேவா சேர் எமது பிரித்தானிய வாழ் இணுவை மக்கள் ஐக்கிய ஒன்றியத்தின் இணுவிலுக்கான வளர்ச்சித்திட்ட செயற்குழு உறுப்பினர்களில் ஒருவராக எம் ஒன்றியத்தால் தெரிவு செய்யப்பட்டுள்ளார் என்பதை இத்தருணத்தில் கூறிப் பெருமைகொள்வதில் எம் ஒன்றிய அங்கத்தவர்கள் அனைவரும் அவர் உறவினர்களும் பெரும் உவகை அடைகின்றோம்.

தேவா பொன்விழாச் சபையின் அனைத்து அன்பு உள்ளங்களுக்கும் எம் பெருமகிழ்ச்சியைத் தெரிவிப்பதுடன் தேவாவின் சேவைகள் இன்னும் பல நூறுகளைக் காணவேண்டும் என்றும், விழா இனிதே சிறப்புற நடக்கவேண்டும் என்றும் எல்லாம் வல்ல பரராஜசேகரப் பிள்ளையாரை வேண்டி அன்பு வாழ்த்துக்கள் பல கூறுகின்றேன்.

வணக்கம்

ஆ.க. விவேகானந்தன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊருக்கொரு உத்தமன்

அன்பர் தேவராஜா அவர்களுக்கு பொன்விழா என்ற செய்தி, லண்டனை வந்தடைந்தபோது இணுவில் பிறப்பாகிய நாங்கள் மிகவும் புளகாங்கிதம் கொள்கிறோம். தாவடியில் பிறந்து, இணுவிலில் புகுந்து, இன்று யாழ்ப்பாணக் குடாநாட்டிலும், இலங்கையின் ஏனைய பகுதிகளிலும் ஒளிவீசும் தேவாவுக்கு விழா எடுக்கும் அனைத்து அன்பு உள்ளங்களையும் நோக்கி, நாங்கள் கரம் குவிக்கிறோம்.

வானத்தில் பூரணசந்திரன் மாதம் ஒரு முறைதான் தோன்றும். ஆனால் இவரின் முகத்தில், எந்தநாளும் நிலவின் பிரதிபலிப்பைக் காணலாம். பரந்தமுகம், மலர்ந்தமுகம், கள்ளமில்லாத சிரிப்பு, விரிந்த முகம், உள்ளொன்று வைத்து புறமொன்று பேசாத களங்கமில்லாத அகம் என்பன இவருக்குரிய நல்ல அணிகலன்களாகும்.

மகாகவி பாரதி கூறியுள்ளது போல, நண்பனாய், மந்திரியாய், நல்லாசிரியனாய், பண்பிலே தெய்வமாய் ................ பார்வையிலே சேவகனாய் ........... ஆமாம் ....... 'தேவா' ஓர் தொண்டனாகவே என்றும் காட்சிதருகின்றார். பல பட்டங்களைத் தாங்கிய பெருமை இல்லாத, பலதலைமைப் பதவிகளைச் சுமந்து நிற்கும் இறுமாப்பு இல்லாத, எமது ஊரின் இந்த மாணிக்கத்தை, தேவ அமிர்தத்தை நாங்கள் வாழ்த்துகின்றோம்.

தேவா அவர்களிடமிருந்து சுரந்த தேவ அமிர்தத்தை அள்ளிப்பருகிய, இவரது பல மாணவர்கள், இன்று புலம் பெயர்நாடுகளில் பலம்பெற்று, வலம்வந்து கொண்டிருக்கிறார்கள்!. இவர்கள் யாவரையும் மேலே உயர்த்திவிட்ட ஏணிப்படிகளாக, தேவாவின் செயற்பாடுகள் அடித்தளமாக அமைந்துள்ளன.

எமது கிராமத்துக்கு பலர், பல வழிகளில் பெருமை தேடித் தந்துள்ளனர். அந்தவழியில், அன்பர் தேவா அவர்களும் தனது பங்களிப்பைச் செய்து, உயர்ந்து நிற்கின்றார். தாவடியும் இணுவிலும் உறவால், பண்பால் என்றும் ஒட்டிநிற்கும் இரட்டைப் பிள்ளைகளாகும். இந்த இரட்டைப் பிள்ளைகளுடன், கோண்டாவில், கொக்குவில் ஏனைய குடாநாட்டு மக்கள் ஒன்றாக இணைந்து, பிணைந்து, தேவாவுக்கு விழா எடுப்பது மிக மிகப் பாராட்டத்தக்கது. ஒருவர் வாழும் போதே அவரைக் கௌரவிக்க வேண்டும். இதைவிடுத்து அவர் இல்லாத காலத்தில் வெளியிடப்படும் மலர், கருகிய மலராகும். ஒருவர் இவ்வுலகைத் துறந்த பின்னர் நிறுவப்படும் மணிமண்டபம், எழுப்பப்படும் அஞ்சல் உரைகள், இவையாவும் நடிப்புச் சுதேசிகளின் வெளிப்பாடே!.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல சோதனைகள் மிகுந்த இக்கால கட்டத்தில், உவ்விடம் வாழ்கின்ற எமது உறவுகள் சில சாதனைகளையும் செய்து வருகின்றனர். அதில் ஒன்றுதான் தேவா பற்றிய இந்த சிறப்பு மலராகும்.

ஒருவருக்கு விழா எடுக்கும் போது, விழாவுக்குரிய நாயகன் மட்டுமல்லாது, விழாவை முன்னெடுக்கும் மக்களும் மேன்மை அடைகின்றனர். இந்த வகையில், தேவாவும், மலர்க்குழுவினரும் யாழ்ப்பாணத்து கற்பக விருட்சமாகிய பனைபோல் உயர்ந்து நிற்கின்றனர் என்றால், அது மிகையல்ல.

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் வணிகத்துறையின் தலைவர் தேவாவின் சேவை ஓர் சரித்திரமல்ல, அது ஓர் சகாப்தம்!.

அன்பு
சண்முகநாதன் ஸ்ரீரங்கன்,
காப்பாளர் பிரித்தானிய இணுவில் கிராம ஒன்றியம்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தனியார் கல்வி நிறுவன மாணவனின் நினைவலைகள்

'தேவா சேர்' சில அற்புதமான மாமனிதர்களின் சமூகப் பண்பை அவர்தம் சிறப்பியல்புகளை பிரதியெடுக்க முடிவுசெய்த போது சத்தமில்லாமல் பெற்றெடுத்த கருத்து வார்த்தைகள் இவை. கவிதை என்று அவசரமாக சொல்லி கவிதைகளை காயப்படுத்த விரும்பவில்லை. என் கல்லூரி நாட்களில் எனக்கிருந்து சிற்றறிவை கொண்டு விளங்கிக்கொள்ள முடிந்த மனிதரைப் பற்றிய நினைவலைகளே இவை, தொன்னூறுகளில் நாங்கள் சுதந்திரமாய் சுற்றிவந்த நாட்களில் தேவா சேரிடம் கல்வி பெற்ற அந்த இனிப்பான நாட்களில் மனசு மறக்காத சில நிமிடங்களை! ஏன் மனசென்னும் ஞாபக வங்கியில் இன்னமும் இருக்கும் சில சிரிப்பு வரவுகளை அவரின் குரலில் சொல்லி மகிழும் சில வாசனை வார்த்தைகளை இன்றும் ஈரமாய் இருக்கும் சில பிற ஞாபகங்களையும் அவசரமாய் எழுதுகிறேன்.

தன் எல்லா குணங்களாலும் எல்லோரையும் கவர்ந்துவிடும் ஒரு மனிதன் இந்த மண்ணில் இருக்கமுடியும் என்றால் அந்த மனிதர் திரு தேவராஜா சேர் ஆகத்தான் இருக்கமுடியும். நேர் வகிடுழுத்த தலைமுடியும் சிரிப்பும் குறும்பும் மிதக்கும் சின்னக் கண்கள் புலமையிலும் தொலைந்துபோகாத பணிவு பணிவிலும் தொலையாத புலமை தீர்க்கமான குரல் சராசரியை தாண்டிய உங்கள் உயரம் ஆளுமை மிக்க உங்கள் தோற்றத்தை புதுக்கவிதையில் பாடிவிட எனக்கு வார்த்தைகளே வசமாகவில்லை.

உங்களிடம் இருந்து வர்த்தக மாணவர்கள் வர்த்தகக் கல்வியை பெறுவது என்பது மாணவர்களின் இரண்டாம் பட்ச நோக்கமாக இருக்கவேண்டும். ஏனெனில் திரு தேவா அவர்களிடமிருந்து பணிவினையும் அடக்கத்தினையும் மரியாதையும் மாணவர்கள் முதல்பட்சமாக கற்றுக்கொள்ள வேண்டும். இனிவரும் மாணவ தலைமுறை இதனை ஒவ்வொரு நாளும் படித்துக்கொள்ள வேண்டியது அவர்களின் எதிர்காலத்தை பிரகாசமாக்கும்.

இவ்வளவு கஸ்டகாலங்களிலும் தன் மண்ணில் நின்று தன் இனம் சார்ந்த மாணவ சமுதாயத்தை கல்வியறிவு புகட்டும் இந்த மண்ணின் மைந்தர் திரு தேவா அவர்களுக்கு இருக்கக்கூடிய சமுதாய அக்கறையினை எமது கலாசார பழக்க வழக்கங்களிற்கு அவர் கொடுக்கும் அக்கறையை எமது சமுதாயம் அவரைப் பார்த்து பின்பற்றவேண்டும்.

உங்களின் கல்வி அறிவை நான் பார்த்து வியந்ததுண்டு. உங்களின் ஆளுமையை வியந்து பார்க்கின்றேன். வர்த்தக கல்வியினை இலகுபடுத்தி கற்பிப்பதில் நீங்கள் போட்ட புள்ளிகள் தான் கோலங்களாக கோடுகளாக இங்கு வரையப்பட்டு கொண்டிருக்கின்றன. எதைச் சொல்லுவது என்பது அறிவு. எப்படி சொல்லுவது என்பது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உத்தி. இந்த அறிவும் உத்தியும் உங்கள் வசமிருந்ததால் வாத்தக்க கல்வியையும், நீங்கள் வாழ்க்கைப்படுத்தி இருக்கின்றீர்கள்.

இவ்வளவு சிறப்பான அனுபவங்களையும் ஆற்றல்களையும் கொண்டிருக்கும் உங்களின் சேவைகள் மெச்சி மலர் வெளியிடும் இந்தத் தருணத்தின் இராமர் அணைக்கு மண் சுமந்த அணில் மாதிரி உங்களைப் பற்றிய என் கருத்து இடம்பெறுவதில் மகிழ்வுறுகின்றேன். என்ன இருந்தாலும் என் வட்டாரத் தமிழில் நான் எழுதும் வார்த்தைப் பூக்கள் உங்கள் தேவா அமிர்தத்தை வாசனை செய்து பூசிக்கட்டும். தேவா என்னும் இந்த வர்த்தக நதியிற்கு இக்கரைகளில் நின்று மானசீகமாய் அனுப்பிவைக்கும் அன்பு மலர்களே. இவை

என் அன்புக்குரிய ஆசானுக்கு
உங்களின் பழைய மாணவன் உங்கள்
நினைவுகளில் நீந்தி வடித்த
வார்த்தைக் கோவைகள் இவை
நேற்றுப் போலிருக்கின்றது என்
கல்லூரி நாட்கள். நினைத்துப் பார்க்கின்றேன்
யோசித்துப் பார்க்கின்றேன். யோசித்து எழுதுவதற்கு
நீங்கள் ஒன்றும் மறக்கப்பட்டவர் அல்ல
மல்லிகைப் பூவிற்கு 'சென்ற்' அடிக்கலாமோ
வானவில்லிற்கு வர்ணம் தான் பூசலாமோ!
தனியார் கல்வி நிறுவனங்களில் என் ஞாபகங்களை
றீவைன்டிங் செய்து பார்க்கின்றேன்.
அந்தப் பழைய வாசகங்கள் என் இதய சுவர்களில்
இன்னமும் ஒலித்துக் கொண்டிருக்கின்றன.
'பிந்தி தொடங்கினாலும் வகுப்பு நேரத்துக்குத்
தான் முடியும்' - என்று
சிரிக்காமலும் சிரித்தமாதிரியும் நீங்கள்
கூறி வகுப்பு முடிக்கும் இனிப்பு நிமிடங்களில்
'நாளையிற்கு வகுப்பு இராது. ஆனால்
நாளை மறுதினம் வகுப்பு இருக்கும்'
தலை சாய்த்துக்கொண்டு நீங்கள் சொல்லும்
தமிழினை ரசிக்கும் சமாளிப்பு நிமிடங்களில்
'நோட்ஸ் சொல்லுறது, ஸ்பீட் எண்டா சொல்லுங்கோ,
சொல்ல வெட்கம் என்றால் நிமிர்ந்து ஒருக்கா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாருங்கோ – சிரியுங்கோ' திருப்பிச் சொல்லுவன் – என்று
நகைச் சுவையாய் கடிக்கும் கருணை நிமிடங்களில்
'விளங்கா விட்டால் சொல்லுங்கோ தம்பியவை
விளங்கும் வரை விளக்கம் தருவன் – என்றவாறு
வகுப்பை மேயும் பார்வைகளால் – மாணவர்க்கு
தரும் – மரியாதைக்குரிய பணிவான நிமிடங்களில்'
'கிளாஸ் தொடங்கி முடியும் வரை
நசுக்காக இடைமிடையே விடும் நகைச் சுவைகளில்
'கொல்' லென்று சிரிக்கும் மாணவர்களின்
'டவுட்' களை கிளியர் ஆக்கும் நட்பான நிமிடங்களில்
வர்த்தகக் கல்வியினை வளமான நம் தமிழ்
வார்த்தைகளால் விரிவுரை நடாத்தும் உங்கள்
வர்த்தக – தமிழ்ப்புலமையை ஆங்கிலம் கலக்காத
உங்கள் தமிழ்ப்பற்றை விரிவுரை நிமிடங்களில்.

பிறவுன் றோட்டில் – கே.கே.எஸ்றோட்டில்
சைக்கிளில் முந்தும் போதோ – எதிர்வரும் போதோ
'ஒரு சிரிப்பு, 'ஓமோம்' 'எப்படி' 'போட்டுவாறன்'
என்று நலம் விசாரிக்கும் அந்த சினேகித நிமிடங்கலல்ல.

இப்படி எத்தனை எத்தனை இனிய நிமிடங்களை
இன்னும் அந்த 'வர்த்தக சூரியனின்' ஒளி பெற்று எல்லா
மாணவ நட்சத்திரங்களும் என்றும் ஒளிரவேண்டும்.

ஒரே ஒரு சூரியன் தான் அது எவ்வளவு நிஜமோ
அதுபோல ஒரே ஒரு தேவா சேர் தான் அவரை வாழ்த்தி வணங்கும்.

இ. தமிழ்ச்செல்வன்,
இங்கிலாந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் குருவின் பெருமை கண்டு பூரிக்கிறேன்

பொருத்தமான பொன்னான
நாள் இன்று
யாழ் பல்கலைக்கழக வணிகத்துறைத்
தலைவர்
மதிப்புக்குரிய கந்தையா தேவராஜா
காணுகின்ற பொன் விழா.

கடலலைகள் முத்தமிடும்
யாழ்ப்பாணத் தீபகற்பத்தின்
முதுகெலும்பாம் தாவடியூர்
தந்துவிட்ட சொத்தே – என்குருவே

கல்விதனில் வித்தகனாய்
உழைப்பினிலே உயர்ந்தவனாய்
ஊருக்கெல்லாம் சேவகனாய்
உயர்ந்து நிற்கும் பெருமகனார்.

கற்றோரும் மற்றோரும்
படிக்காத பாமரரும்
போற்றுகின்ற உத்தமனே
பணிவினிலே பண்பினிலே
நிகரே இல்லா பசு போலும்
குணமுடைய நல்லாசான்.

புன் சிரிப்பின் பேரழகே
இன் சொல்லின் பேரரசே
வர்த்தக மாணவ உலகிற்கு
அரும்பெரும் கருவூற்றே.

எண்ணுக் கணக்கற்ற
வாலிப உள்ளங்கள்
தாம் கொண்ட நோக்கம்
நிறைவேற வழிகாட்டி.

யாழ் பல்கலைக்கழகத்தில்,
இருபத்திநான்காண்டு சேவையிலே
பல அறிஞர் பெருமக்களை உருவாக்கி
எள்ளளவும் பெருமையில்லா
பொன்விழாக் காணுகின்ற
அறிவுக் கடலே.
சைவமும் தமிழும் தழைத்தோங்கி
விவசாயப் பெருங்குடிகளோடு
கல்விமான்கள் நிறைந்து புகழ் பூத்த
நல்லூராம் இணுவையம்பதியை
புகுந்த ஊராய் பெருமையோடு.

நற்பெயரோடு கொடிகட்டிப் பறக்கும்
இராசையாவின் நற்புத்திரியாம்
இலக்சுமிதேவியை தன் இல்லாளாய்
வாழ்வின் பொன்னாளாய்.

பொன் விழாக் காணும் தன்
இல்லாளின் பெருமையிலே
அகமகிழ்ந்து பூரிக்கும்
வள்ளுவனுக்கேற்ற வாசுகியாய்
தன் கணவனின் வளர்ச்சியிலே
மணிவேராய் வாழ்ந்திட்ட
இலக்சுமிதேவிக்கும் வாழ்த்துக்கள்.

பொன்விழா காணுகின்ற பெருமகனார்
இன்றுபோல் என்றென்றும்
சீரும் சிறப்போடும் பல்லாண்டு
பல்லாண்டு வாழ வாழ்த்துகிறேன்.

சக்திதாசன்,
டென்மார்க்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேவா - பொன் விழாச் சபை



இடமிருந்து வலம் இருப்போர் :- திரு. நா.சுந்தரலிங்கம், திரு.து.சிவராஜா (பொருளாளர்), திரு.க.தேவராஜா (விழா நாயகன்), திரு.அ.பஞ்சலிங்கம் (தலைவர்), திரு.இ.பரமேஸ்வரலிங்கம் (உபதலைவர்), திரு.த.வீரசிங்கம், திரு.க.கனகராசா

இடமிருந்து வலம் நிற்போர்:- திரு.தா.தியாகமூர்த்தி, திரு.கி.சிவகுமார், திரு.ஆ.சத்தியமூர்த்தி, திரு.அ.குகதாசன் திரு.வை.சிறீஸ்கந்தவரோதயன் (பொருளாளர்), திரு.இரா.அருட்செல்வம் (விழா அமைப்பாளர்), திரு.ஞான திருக்கேதீஸ்வரன் (விழா அமைப்பாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



விழா நாயகன் துணைவியாருடன்.




கொழும்பு மத்தி லயன்ஸ் கழகத்தின் அன்பளிப்பை ஏற்றல்.



கண் பார்வையற்றவர்களுக்கு கண்ணாடி வழங்குதல்.




யாழ் மத்திய கல்லூரியின் விளையாட்டுப் போட்டியில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொன்விழா வாழ்த்து மடல்

யாழ் - பல்கலைக்கழக வணிகத்துறையில் தலைமைப்பதவி வகிப்பவரும், இணுவில் அரிமா சங்கம், ஸ்ரீ சத்ய சாயி சேவா நிறுவனம், கொக்குவில் இந்துக் கல்லூரி ஹண்டி பேரின்பநாயகம் ஆண்டுவிழா நிர்வாக ஆலோசனை சபை - இவற்றின் தலைவரும், யாழ் பல்கலைக்கழக ஆசிரிய சங்கம், கொக்குவில் இந்துக் கல்லூரி முன்னாள் மாணவர் சங்கம், சென்ஜோன்ஸ் பொஸ்கோ வித்தியாலம் இவற்றின் உபதலைவருமாகக் கடமையாற்றிக் கொண்டிருப்பவரும் தாவடியூரைப் பிறப்பிடமாகக் கொண்டவருமாகிய.................

**அன்பு நெஞ்சன், அறிவுமிக்க ஆசான், அளப்பரிய தொண்டன் உயர்திரு. கந்தையா தேவராஜா அவர்களின் ஐம்பதாவது பிறந்தநாள் விழாவின் போது வாழ்த்தி வழங்கப் பெற்றது.**

சீர்பூத்த செந்தமிழீழந்தன்னில்
சிறப்புமிகு தாவடி என்னும் ஊரில்
கார்காத்த வேளாளர் குலத்துதித்த
கந்தையா அன்னமா பெற்ற செல்வ!
பேர்விளங்கு தேவராஜா பெருந் தலைவா
பிறந்த நாள் காணும் இன்பத் திருநாள் இன்று
பார் போற்றப் பல்லாண்டு வாழ்க வென்றே
பாசமுடன் பா வடித்தோம் வாழ்க! வாழ்க !

அன்புநெஞ்சன், அறிவுமிக்க ஆசான், மிஞ்சும்
பண்புமிளிர் சொல்லழகு, பலரும் மெச்சும்
இன் நல்லாள் இலட்சுமியாம் இனியாளோடு
எழில் கொஞ்சும் மழலைகளும் வாய்க்கப் பெற்று
கண்ணியம், கடமையோடு, கட்டுப்பாடும்
கண்டவர்கள் வியக்கும் வண்ணம் வாழ்வியற்றி
மண்ணிலுள்ளோர் மனதினிலே இடமும் கொண்ட
மாண்புநிறை தலைவா நீ வாழ்க! வாழ்க!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலைமகளின் கடைக்கண் பார்வை பெற்றாய்
　　கணபதியின் அருளாலே நிறைவும் கண்டாய்
தலைமகனாய் பல துறையில் பதவியேற்று
　　தனிப்பெருமை தேடி நின்றாய் – தவப்பயனால்
மலை போலப் புகழ் மலிய, மனைவி மக்கள்
　　மனங்குளிர சுற்றமெல்லாம் மகிழ, வாழ்வில்
விலை மதிக்க வொண்ணாத வைரம் போல
　　வெற்றிநடை போட்டு என்றும் வாழ்க நீடு!

கற்றவழி உயர்ந்து நின்று, காலந்தோறும்
　　கற்கவருவோர்க் கெல்லாம் கரங்கள் நீட்டி ........
மற்றவரும் மாண்புறவே வழிகள் காட்டி...........
　　மக்களுக்குச் சேவை செய்யும் பாங்கு கண்டோம் ..........
உற்றவர் போல் உளம் திறந்து பேசும் ஆற்றல்,
　　உதட்டினிலே புன்சிரிப்பு, ஊரும் போற்ற
நற்பெயர் நீ கொண்டதனால் நாமும் அன்பாய்
　　நாவினிக்க வாழ்த்துகின்றோம் வாழ்க! வாழ்க!

அகவை ஐம்பது கண்டு, மக்கள்
　　ஆனந்த விழாவெடுக்கும் பேறுபெற்றாய்
மிகவுயர்ந்த நன்மகனே! மேதினியோர்
　　மீண்டும் வருங்காலமெல்லாம் ஏற்றிப் போற்றும்
தகைமைகளைத் தாங்கி, உயர் சான்றோனாக
　　தகுமின்பம் கோடி கண்டு வாழ்வும் ஓங்க.....
வகை வகையாய் நற்பணிகள் ஆற்றிப் பாரில்
　　வாழ்க நீ இறையருளால் நாளும் நன்றே!

**வாழ்க வளமுடன்**

**சுபம்**

**ஆக்கம்**
**இணுவை சுசீலா**
**10.03.2001**

**அன்புடன் வாழ்த்தும்**
**இணுவை மக்கள் ஐக்கிய ஒன்றியம்**
**பிரித்தானியா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிவுசார் மூலதனம்
## INTELLECTUAL CAPITAL

### 1.0 அறிமுகம்

மனிதவள முகாமைத்துவமே நிறுவனங்களின் வளர்ச்சிக்கு அடிப்படையானது என தற்கால முகாமைத்துவம் கருதுகின்றது. ஊயர் உற்பத்தித் திறனைப் பெற்றுக்கொள்ள மனிதவள முகாமைத்துவம் வகை செய்வதாக உள்ளது. இதுன் காரணமாகவே அறிவுசார் மூலதனத்தின் மீது தற்கால நிறுவனங்கள் அக்கறை கொண்டுள்ளன. ஓவ்வொரு ஊழியரும் தாம் செய்யும் வேலை பற்றியும் நிறுவனத்தின் கொள்கை பற்றியும் அக்கறை கொள்ளவைப்பதாக அறிவுசார் மூலதனம் உள்ளது. ஊழியர்களிடையே தகைமையினையும் அர்ப்பணிப்பினையும் ஏற்படுத்த முயற்சிப்பதே அறிவுசார் மூலதனமாகும். அதாவது Intellectual Capital = Competency commitment என்ற சமன்பாடு நிறுவப்பட்டுள்ளது. நிறுவனமொன்றின் இலக்கினை அடைவதற்கு தன்னை அர்ப்பணித்த பயிற்றப்பட்ட ஊழியர்களே நிறுவனமொன்றுக்கான பிரதான சொத்தாகும். ஆறிவுசார் மூலதனமே நிறுவனமொன்றில் தேய்வுக்கு உட்படாத பெறுமானம் அதிகரித்துச் செல்லும் தன்மைகொண்டதாகவும் குறைவடையாப் பண்பு கொண்டதாகவும் காணப்படும். அறிவுசார் மூலதனத்தைக் கொண்ட ஊழியர்கள் என்றுமே தன்னிச்சையான ஒத்துழைப்பை வழங்குபவர்களாக இருப்பர். இதன் காரணமாகவே தற்காலத்தில் அதிவுசார் மூலதனம் என்பது தற்கால நிறுவனங்களின் வளர்ச்சிக்கு மிக வேண்டப்படுவதாக உள்ளது.

### 2.0 வரைவிலக்கணம்.

ஊழியர்களின் தகைமையும் அர்ப்பணிப்புத் தன்மையும் நிறைந்ததுதான் அறிவுசார் மூலதனமாகும். தகைமை அதிகமாகவும் அர்ப்பணிப்புத் தன்மை குறைவாகவும் இருந்தால் திறமையுள்ள ஊழியர்கள் செய்வதற்கு எதுவும் இருக்கமாட்டாது. மாறாக உயர்ந்த அர்ப்பணிப்பும் குறைந்த அளவான தகைமையும் காணப்பட்டால் திறமை குறைந்தவர்களே பெரும்பாலான வேலைகளைப் பெற்றுக்கொள்வர். இவை இரண்டுமே ஆபத்தானவை என்பதனால் அறிவுசார் மூலதனமானது இரண்டையுமே அதாவது தகைமையினையும் அர்ப்பணிப்பையும் உச்சமாக வைத்துக்கொள்ளும் நடவடிக்கையே அறிவுசார் மூலதனமாகும். இத்தகைய அறிவுசார் மூலதனத்தை உச்சமாக்குவதன் மூலம் வாடிக்கையாளர் நம்பிக்கை, உயர் உற்பத்தித் திறன், இலாபத் தன்மையின் அதிகரிப்பு ஆகியவற்றை அடைந்துகொள்ள முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ♣ அறிவுசார் மூலதனத்தைக் கொண்டிருப்பதனூடாக பின்வரும் பண்புகளை நிறுவனம் கொண்டிருக்க முடியும்.
- ♣ ஏனைய சொத்துக்கள் போல் அல்லாது அறிவுசார் மூலதனத்தின் பெறுமதி தொடர்ச்சியாக உயர்ந்து செல்லும்.
- ♣ அறிவுசார் மூலதனத்தின் பண்புக்கேற்ப ஊழியர்களின் வேலைத்திறன் நாளுக்குநாள் அதிகரித்துச் செல்லும்.
- ♣ அறிவுசார் மூலதனத்தைக் கொண்டுள்ள ஊழியர்கள் தொண்டர்கள் போல் தன்னலமற்ற (Voluntry) வழங்க முன்வருவதனால் அர்ப்பணிப்பு பெருகிவரும்.
- ♣ அறிவுசார் மூலதனத்தின் வழியாகவே முகாமையாளர் உலகளாவிய போட்டி, நுகர்வோரின் அதிகரித்த தேவைகள் என்பவற்றைப் பூர்த்தி செய்ய இயலும்.
- ♣ அறிவுசார் மூலதனத்தின் மூலமாகவே நிறுவனத்தின் நோக்கத்தை மையமாகக் கொண்டு இயங்கும் ஊழியர்களை உருவாக்க முடியும்.
- ♣ அறிவுசார் மூலதனத்தைக் கொண்ட நிறுவனங்களே ஊழியர்கள் கூட்டாக இயங்க வகைசெய்யும்.

என்றவகையில் அறிவுசார் மூலதனத்தின் பண்புகள் அவதானிக்கப்பட்டுள்ளன.

### 3.0 தகைமையை அதிகரித்தல்.

அறிவுசார் மூலதனத்தில் தகைமையை அதிகரித்தல் என்பது ஒரு முக்கிய பண்பாகும். இதுன்படி திறமைகளை வியாபார தந்திரோபாயங்களுக்கு ஏற்ப வரிசைப்படுத்தல் வேண்டும். அதன் பின்னர் போட்டித் தன்மையானது பல பொறிமுறைகள் ஊடாக வளர்க்கப்பட வேண்டும். பின்வரும் ஐந்து பண்புகளும் தகைமையை வளர்ப்பதற்கு பெரிதும் உதவும்.

### 3.1 வாங்குதல் - Buy

திறமையான நபர்களை உள்வாங்குதல், தெரிவுசெய்தல் ஆகியவற்றைக் குறிப்பதே வாங்கதல் என்பதாகும். இந் நடவடிக்கை புதிய எண்ணங்களை உருவாக்குதல், பழைய கலாச்சார முறைகளை நீக்கிவிடுதல் என்பவற்றை அடக்கும். புதியவர்களை உள்வாங்குவதன் மூலம் நிறுவனத்திற்கு புதிய சிந்தனை ஆற்றல் கொண்டவர்களை அதிகரிப்பதுடன் புதிய தந்திரோபாயங்களும் உருவாக்கப்பட முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 3.2 உருவாக்கல் - Build

முகாமையாளர்கள் நிறுவனத்தில் தொடர்ந்திருக்கக்கூடியவாறும் ஊழியர்கள் புதிய நுட்பங்களைக் கற்றுக் கொள்ளக்கூடியவாறும் நடவடிக்கை எடுப்பதே இதுவாகும். வழிகாட்டுதல், பயிற்சியளித்தல் போன்றவற்றுக்காக நிறுவனங்கள் பெருமளவு நிதி வசதிகளை ஒழுங்கு செய்தல் இத்தகைய நிலையை அடைவதற்கேயாகும். பாரிய நிதிச் செலவில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் ஊழியர்களிடையே புதிய எண்ணங்களை உருவாக்கவும் நடத்தைகளை மாற்றியமைக்கவும், முகாமையாளர்களுடன் இணைந்து பணியாற்றவும் தூண்டும் எனக் கொள்ளப்படுகின்றது.

## 3.3 பெறப்படல் - Borrow.

நிறுவனங்கள் புதிய எண்ணங்கள், உபகரணங்கள், நடைமுறைகள் ஆகியவற்றை வெளியிலிருந்து பெற்றுக்கொள்ளும் நடவடிக்கையே இதுவாகும். வெளியிலிருந்து ஆலோசனைச் சேவை (Consultancy Service) பெறுவது இதில் முக்கியம் பெறுகின்றது. நிபுணர்களை வரவழைத்து கருத்துக்களைப் பரிமாறுதல், கருத்தரங்குகளை நடாத்துதல், புதிய வடிவமைப்புக்களை உருவாக்குதல் போன்றவற்றை வெளியிலிருந்து பெற்றுக் கொள்ளலே பெறப்படலா அமைகின்றது. இந்த நிலையில் பெருமளவான பணச் செலவும் நேரவிரையமும் ஏற்படலாம். சொந்தமாக எண்ணங்களை உருவாக்கும் திறன் மழுங்கடிக்கப்படலாம். இருந்த போதும் வெளி நிறுவனங்களது அனுபவங்களைப் பெற்றுக்கொள்வது அறிவுசார் மூலதனத்தின் விருத்திக்கு அடிப்படையில் அமையும்.

## 3.4 நீக்குதல் - Bounce.

நிறுவனங்கள் நியம பெறுபேறுகளை அடையாத நபர்களைக் கொண்டிருப்பது நன்மை தரமாட்டாது என்பதனால் அவர்களை நீக்கிவிடுதல் வேண்டும். சில நேரங்களில் ஊழியர்கள் திறமைகளை வளர்க்கவும், புதிய நுட்பங்களைக் கற்றுக் கொள்ளவும் தவறிவிடுகின்றனர். வேறு சில சமயங்களில் சரியான முறையில் மாற்றங்களை அறிமுகப்படுத்தத் தவறியவர்களை நிறுவனங்கள் வைத்துக் கொள்ளக்கூடாது. அதாவது இவர்கள் நிறுவனத்தில் தொடர்ந்திருப்பது பெரும் பாதிப்பைக் கொண்டுவரும் என்பதாகும்.

## 3.5 கட்டுதல் - Bind

பயிற்றப்பட்ட ஊழியர் எல்லா மட்டங்களிலும் நிறுவனங்களுக்கு முக்கியமாவர். இத்தகையவர்களை சிரேஸ்ட முகாமையாளர்களுடன் பழகவிடுவதன் மூலம் அவர்களின் திறமையை அறிவது, அணுகு முறைகளைக் கற்றுக் கொள்வது, தொழில்நுட்ப அறிவைப் பெறுவது போன்றன சாத்தியமாகின்றன. நிறுவனத்தை விட்டு வெளியேறுகின்ற ஊழியர்களை பேட்டிகண்டு அவர்களைத் தொடர்ந்து நிறுவனத்தில் பணியாற்றுவதற்காக தூண்டுவது கட்டுதல் என்பதைக் குறிக்கின்றது. இதன்படி தொழிலாளர் புரள்வை இழிவுமட்டத்தில் வைத்துக்கொள்ள முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 4.0 அர்ப்பணிப்புக்கு எதிராக அழித்தல் - Commitment Versus Burnout.

அறிவுசார் மூலதனத்தை அதிகரிப்பதற்கான இன்னொரு வழியே அர்ப்பணிப்பு என்பதாகும். கூடுதலான அர்ப்பணிப்பினைக் கொண்ட ஊழியர்கள் பொறுப்புக்கள் இல்லாதபோதும் நன்றாக பணியாற்றுவர். தனிப்பட்ட ரீதியில் இயங்குபவர்கள் திறமைசாலிகளாக இருந்தாலும் ஒரு குழுவைப் போல் பெறுபேறுகளைப் பெறமுடியாது. இதன்படி ஊழியர்கள் எவ்வாறு மற்றையவர்களைப் பற்றி உணர்கின்றார்கள், எவ்வாறு அவர்களுடன் நடந்துகொள்கிறார்கள் என்பது கவனிக்கப்படுகின்றது. மூலதனம் அதிகரிப்பால் ஊழியர்களின் பொறுப்புக்கள் குறைந்துவிடக் கூடும்.

ஊழியர்களின் பொறுப்புக்களை உயர்த்துவதற்குப் பல வழிகள் பின்பற்றப்பட முடியும். உலகளாவிய போட்டி, வாடிக்கையாளர் நலன், நெகிழும் தன்மை, உயர் கற்றல் செயற்பாடு, கூடிய குழுச் செயற்பாடு, கூடிய உற்பத்தித்திறன் என்பவற்றை ஏற்படுத்தும் பொறுப்பு அவசியமாகின்றது. இந்த அனைத்து சவால்களையும் சமாளிப்பதற்கு அறிவுசார் மூலதனமானது ஊழியர்களிடையே உடல், உள எழுச்சிகளை அதிகரிக்க வேண்டியுள்ளது. பெரும்பாலான முகாமையாளர்கள் இவற்றைக் கருத்திற் கொள்ளாது ஊழியர்களிடம் தொடர்ந்து மேலதிகமான செயற்பாடுகளையே எதிர்பார்க்கின்றனர். இதனால் ஊழியர்களிடம் சோர்வுத் தன்மையும் பொறுப்பற்ற தன்மையும் உருவாக முடியும். எப்பொழுதுமே ஊழியர்களிடம் அர்ப்பணிப்பு குறைவாக இருக்குமாயின் அதற்கான காரணத்தைக் கண்டறிதல் வேண்டும். இளந் தொழிலாளர் விரைவாக தொழலின் முன்னேற்றத்தை விரும்புபவர்கள் என்பதனால் அதனை நிவர்த்திக்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

நிறுவனங்களிலே ஊழியர்களது அர்ப்பணிப்பை உயர்த்துவதற்க பல நடவடிக்கைகள் எடுக்கப்பட முடியும். குறிப்பாக,

### i) தேவைகளைக் குறைத்தல் - Reduce Demand

ஊழியர்கள் வேறுபட்ட முக்கியத்துவத்தின் அடிப்படையில் தேவைகளைக் கொண்டிருக்க முடியும். இதனால் தேவையற்றவற்றை நீக்கி அவசியமான தேவைகளை மட்டுமே கொண்டிருக்க வகைசெய்ய வேண்டும்.

### ii) முதன்மைப்படுத்தல் - Priorities.

இதன்படி சில தேவைகள் நீக்கப்பட்டுவிடும் ஒரு குழு நல்ல பெறுபேறுகளைப் பெறுமாயின் மற்றைய ஊழியர்களும் அதனுடன் இணைவதன் மூலம் நல்ல பெறுபேற்றினைப் பெறுவர். இதன்படி குழுவுக்கு பயிற்சி வழங்கப்படும் போது மற்றைய ஊழியர்களும் அதில் இணைந்துகொள்வர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**iii) வளங்களை அதிகரித்தல் - Increase Resources.**

வளங்களின் பற்றாக்குறையானது ஊழியர்களிடையே அதிருப்தியைக் கொண்டுவரும். இந்த அதிருப்தி அர்ப்பணிப்பினைக் குறைத்துவிடும் என்பதனால் வளங்களை இயலுமானவரை அதிகரித்தல் அவசியமாகின்றது.

**iv) தந்திரோபாயம் - Strategy.**

ஊழியர்கள் தொலைநோக்குக் கொண்டவர்களாக மாற்றப்படுதல் வேண்டும். தொலைநோக்குக் கொண்ட ஊழியர்களே கடுமையான வேலைசெய்யும் மனப்பாங்கையும் அர்ப்பணிப்பினையும் கொண்டிருப்பர்.

**v) வேலையில் போட்டி - Challenging Work**

ஊழியர்களிடையே புதிய திறன்களை அபிவிருத்தி செய்யக்கூடிய வகையில் வேலையில் போட்டியைக் கொண்டுவருதல் வேண்டும். இதன்மூலம் ஊழியர் அர்ப்பணிப்பு தானாகவே உருவாகும்.

**vi) குழுவேலை - Team Work**

ஊழியர்கள் ஒன்றாக கூடி வேலைசெய்யும் நிலையை உருவாக்குதல் வேண்டும். குழக்களாக வேலைசெய்தல் ஊழியர்களிடையே அர்ப்பணிப்பினைப் பெரிதும் வளர்க்கின்றது.

**vii) வேலைக் கலாச்சாரம் - Work cultures**

இது வேலை செய்வதற்கான சூழலை உருவாக்கும் நடவடிக்கையாகும். நல்ல வேலைச் சூழ்நிலையில் பணியாற்றும் ஊழியர்கள் அர்ப்பணிப்பினை வளர்த்துக் கொள்வர்.

**vii) இலாபப் பங்கு**

நிறுவனங்கள் உழைக்கும் இலாபம் தனியே முதலீட்டாளருக்கு மட்டுமன்றி ஊழியருக்கும் பகிரப்பட வேண்டும். நிறுவனத்தின் இலாப உழைப்புக்கு பெரிதும் பாடுபட்டவர்கள் ஊழியர்களே என்பதனால் அவர்களது அர்ப்பணிப்பை மேலும் உயர்த்த இலாபத்தில் பங்குபெறுதல் வேண்டும்.

**ix) பயிற்சியும் அபிவிருத்தியும்**

ஊழியர்கள் தமது வேலையைத் திறனுள்ளதாக மாற்றுவதற்கு பயிற்சி மிக அவசியமாகும். இப் பயிற்சியே அவர்களது வேலையைத் திறமையாக மேற்கொள்வதனை உறுதிப்படுத்துவதுடன் ஊழியர்களிடையே அர்ப்பணிப்பு மனப்பாண்மையையும் வளர்க்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**x) ஆள்நோக்கிய தலைமைத்துவம் - Concern for People**

ஊழியர்களது கௌரவத்தை பேணக்கூடிய நிர்வாக அமைப்பு ஏற்படுத்தப்பட வேண்டும். நிறுவனத்தில் இலாப உழைப்பையே கருத்தில் கொள்ளாது ஊழியர் நலனில் அக்கறை காட்டும் நிர்வாக முறைமை அர்ப்பணிப்பை வளர்க்க உதவும்.

**xi) தொடர்பாடல் - Communication.**

ஊழியர்களுடன் தொடர்ச்சியாக செய்திப் பரிமாற்றத்தை ஏற்படுத்தும் சாத்தியமானது அர்ப்பணிப்பினை அதிகரிக்கின்றது. திறனுள்ள தொடர்பாடலைக் கொண்ட நிறுவனங்களெல்லாம் ஊழியர் அர்ப்பணிப்பனை உச்ச அளவில் கொண்டிருப்பதனைக் காணமுடியும்.

**xii) தொழில்நுட்பம் - Technology**

ஊழியர்களது வேலைகளை இலகுவாக்கக்கூடிய தொழில்நுட்பம் புகுத்தப்படுமானால் அது ஊழியர்களது அர்ப்பணிப்பினை உயர்த்தும். இதன்படி புதுமைகளைப் புகுத்துதல் எப்பொழுதுமே ஊழியர்களுக்கான வேலையை இலகுவாக்கி அவர்களிடையே வேலைக்கான அர்ப்பணிப்பினை உயர்த்தும்.

**xiii) கட்டுப்பாடு - Control**

ஊழியர்கள் எப்படித் தமது வேலைகளை மேற்கொள்ள வேண்டும் என்பதே இங்கு கட்டுப்பாடாகும். ஓவ்வொரு ஊழியரும் தான் செய்ய வேண்டிய வேலையின் அளவை அறிந்துகொள்டார்களாயின் அதுவே அவர்களுக்கு வேலையிலான அர்ப்பணிப்பைக் கொண்டுவரும்.

மேலே கூறப்பட்ட காரணிகள் எல்லாம் ஊழியர்களுக்கு வேலையிலான அர்ப்பணிப்பை விருத்தி செய்கின்ற காரணிகளாகக் கொள்ளப்படும். ஜப்பானிய முகாமைத்துவம் வேலை நிறைவேற்றத்தில் அதிகம் வெற்றிபெறக் காரணம் அவர்களிடையே தோற்றுவிக்கப்படும் விசுவாசமும் அர்ப்பணிப்புமேயாகும்.

## 5.0 முடிவுரை.

அறிவுசார் மூலதனமானது தற்கால் மனிதவள முகாமைத்துவத்தில் பிரபலம் பெறுவதாகும். ஊழியர்களிடையே தகைமையும் அர்ப்பணிப்பும் உயருமாயின் அது அறிவுசார் மூலதனத்தை விருத்திபெறச் செய்யும். எப்பொழுதுமே அறிவுசார் மூலதனத்தின் அங்கமான அர்ப்பணிப்பை விருத்திசெய்ய நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும். குறிப்பாக நிறுவனத்தைவிட்டு வெளியேறுவோர்களிடமிருந்து தகவலைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும். அதேநேரம் குடும்பத்தின் தேவைகளை நிறுவனங்கள் பொறுப்பேற்று பூர்த்தி செய்தல் வேண்டும். அத்துடன் பிரதான தீர்மானங்களில் ஊழியர் பங்குபற்றலை அதிகரித்துக் கொள்ளல் வேண்டும். இவற்றின் அடிப்படையில் ஊழியர்களின் அர்ப்பணிப்பு உயர்த்தப்பட முடியும். எனவேதான் அர்ப்பணிப்பினையும் ஊழியர் தகைமையினையும் அதிகரிப்பதனால் உருவாகும் அறிவுசார் மூலதனம் ஒரு நிறுவனத்தில் விருத்தி செய்யப்படுமாயின் அது ஊழியர் நிர்வாகத்தை சிறப்படையச் செய்துவிடும். இது நிறுவனங்களின் இலக்கினை அடைவதற்கான மிகச் சிறந்த வழியாக அமைவதுடன் உற்பத்தித்திறனை மிகச் சுலபமாக உயர்வடையச் செய்துவிடும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# References

1. Quinn J.B. Intelligent Enterpizer, New York Free Press, 1992.
2. Drucker P.F. Toward the New Organisation, Sanfrancisco. Jossey - Bass - 1997.
3. Stewart.T., Intellectual Capital, New York, Doubleday Currency - 1997.
4. Ulrichid, Greenfield.H., From Training and Development to Development old Learning. American Journal of Management Development. Vol 1 1995.

உயர்திரு கந்தையா- தேவராஜா
வணிகத்துறைத் தலைவர்,
யாழ்.பல்கலைக்கழகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விழா நாயகரின் நூல்களும் கட்டுரைகளும்

**நூல்கள்**

1) வர்த்தகத்தில் நடைமுறை விடயங்கள் - 1991
2) வர்த்தகத்தில் அண்மைக்கால அபிவிருத்திகள் - 1994
3) முகாமைத்துவம் - 2000

**கட்டுரைகள்**

1) இலங்கையில் பொதுக்கூட்டுத்தபானங்களின் அபிவிருத்தி - பொதிகை கலைப்பீட மாணவர் ஒன்றிய வெளியீடு, யாழ். பல்கலைக்கழகம் - 1979

2) இலங்கையின் சுதந்திர வர்த்தக வலயமும் பொருளாதார அபிவிருத்தியும் - பொதிகை கலைப்பீட மாணவர் ஒன்றிய வெளியீடு, யாழ். பல்கலைக்கழகம் - 1980

3) இலங்கையின் மனிதவள அபிவிருத்தி - விருட்சம் - வணிக மாணவர் மன்ற வெளியீடு - யாழ்ப்பாணக் கழகம் - 1996

4) மூலதனக் கட்டமைப்பும் அதன் மீள ஒழுங்கமைத்தலும் - வணிகச்சோலை - மானிப்பாய் மானிப்பாய் மகளிர் கல்லூரி

5) குறைவிருத்தி நாடுகளின் வர்த்தக அபிவிருத்தியில் கற் நிறுவனத்தின் பங்கு விருடசம் வணிக மாணவர் மன்றம் யாழ். பல்கலைக்கழகம் - 1985

6) இலங்கையில் நுகர்வோர் பாதுகாப்பு - நூற்றாண்டு மலர் - அருணோதயாக் கல்லூரி - 1994

7) நிறுவனங்களின் அபிவிருத்தியில் தலைமைத்தவத்தின் பங்கு - பொன்விழா மலர் - கொக்குவில் இந்துக் கல்லூரி - 1995

8) வங்கிச் சேவையில் கணனியின் பங்கு - வணிக தாரகை - மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை - 1994

9) இலங்கை முதலீட்டுச் சபை - வணிகமுகில் - வட்டு திருஞானசம்பந்தர் வித்தியாலயம் - 1994



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10) நிறுவனங்களது பகுப்பாய்வில் கணக்கியல் விகிதங்களின் பங்கு - வணிகச் சுடர் கொக்குவில் இந்துக் கல்லூரி – 1993

11) முகாமைத்துவத்தில் தொழிலாளர் பங்கு பற்றுதல் - விருட்சம் வணிக மாணவர் மன்ற வெளியீடு யாழ். பல்கலைக்கழகம்.

12) நிறுவனங்களின் உற்பத்தித் திறனை மதிப்பிடுதல் - வணிக தீபம் - யூனியன் கல்லூரி - 1997.

13) சூழல் மாசுபடுவதனைக் கட்டுப்படுத்தல் - வணிகத் தளிர் - திருக்குடும்பக் கன்னியர்மடம் வித்தியாலயம் - 1998.

14) செயற்திட்ட அறிக்கை - விருட்சம் வணிக மாணவர் மனற்வெளியீடு, யாழ். பல்கலைக்கழகம்

15) அறிவுசார் மூலதனம் - விருட்சம் வணிக மாணவர் மன்ற வெளியீடு, யாழ். பல்கலைக்கழகம். - 2000

16) இலங்கை புதிய கைத்தொழில்மயநாடு வரவு - யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி

17) மனிதவள முகாமைத்துவத்தில் தொழில் விருத்தியின் பங்கு - வெள்ளிவிழா மலர் கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை - 2001

18) ஏற்றுமதி அபிவிருத்தியில் ஏற்றுமதி அபிவிருத்திச் சபையின் பங்கு வணிக நாதம் - தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி - 1993

20. இலங்கையின் கைத்தொழில் விருத்திக்கான அரசின் நடவடிக்கைகள் - வர்த்தக - வேம்படி மகளிர் கல்லூரி - 1993



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விழா நாயகரின் சுயவிபரம்

| | | |
|---|---|---|
| பிறப்பு | : | 10.03.1951 |
| இடம் | : | தாவடி |
| ஆரம்பக்கல்வி | : | தாவடி இந்து தமிழ்க்கலவன் பாடசாலை |
| இரண்டாம் தரக்கல்வி | : | யா/ கொக்குவில் இந்துக் கல்லூரி |
| பல்கலைக்கழக் கல்வி | : | ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகம். |
| வாண்மைக் கல்வி | : | இலங்கை கணக்கியல் தொழிநுட்ப நிறுவனம் |
| திருமணம் | : | 07.09.1979 |
| மனைவி | : | இலட்சுமி |

பதவிகள் :

| | |
|---|---|
| உதவி விரிவுரையாளர் | 1978 |
| சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் II | 1990 |
| தலைவர் - வணிகத்துறை | 1994 |
| சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் I | 1996 |
| தலைவர் - தாவடி அம்பலவாண வேத விநாயகர் ஆலய நிர்வாகசபை | 1998 - 1993 |
| | 1988 - 1993 |
| தலைவர் பழைய மாணவர் சங்கம் கொக்குவில் இந்துக்கல்லூரி | 1994 - 1996 |
| செயலாளர் - பாடசாலை அபிவிருத்திச் சங்கம் புனித ஜோன்ஸ் வித்தியாலயம் | 1993 - 1997 |

தற்போதைய பதவிகள்

தலைவர் - யாழ்ப்பாணப் பலகலைக்கழக ஆசிரியர் சங்கம்

தலைவர் - இணுவில் லயன்ஸ் கழகம்

தலைவர் - பகவான்/ஸ்ரீசததிய சாயி சேவா நிலையம் - இணுவில்

தலைவர் - ஹண்டி பேரின்பநாயகம் நூற்றாண்டு சபை

உபதலைவர் - புனித ஜோன்ஸ் பொஸ்கோ வித்தியாலய பாடசாலை அபிவிருத்திச் சங்கம்

உபதலைவர் - தாவடி இந்து தமிழ்க்கலவன் பாடசாலை பழைய மாணவர் சங்கம்

உபதலைவர் - இணுவில திருவூர் அபிவிருத்திச் சங்கம்

நியமித்த பணிப்பாளர் - யாழ் மாவட்ட கூட்டுறவு கிராமிய வங்கிகளின் சமாசம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நெஞ்சிருக்கும்வரை நினைவிருக்கும்



உலகின் ஒவ்வொரு சீவராசிகளுக்கும் அன்பு என்பது பொதுவானது. ஆயினும் அன்பு செலுத்துவது என்பது பொது வானது. ஆயினும் அன்பு செலுத்துவது என்பது மிகமுக்கியமானது. இந்தவகையில் யாவருடனும் அன்புடன் பழகி அவர்களது இன்பதுன்பங்களில் பங்குபற்றி சேவையாற்றுகின்ற ஒருவர் திரு.க.தேவராசா அவர்கள். அவர் தனது பண்பால், செயலால் அன்பால் யாவரையும் தன்பால் ஈர்த்துக் கொண்டவர்.

இத்தகைய ஒருவருக்குப் பொன்விழாவைக் செய்ய வேண்டும்மென்று பல பெரியோர்கள் எண்ணி எம்மை அதில் உற்சாகப்படுத்தினர் அதன் வெளிப்பாடாகவே தேவா பொன்விழாச்சபை 27.08.2000 திகதி ஞாயிற்றுக் கிழமை ஓய்வு பெற்ற யாழ் இந்துக்கல்லூரி அதிபர் திரு. அ. பஞ்சலிங்கம் தலைமையில் உருவானது.

இச்சபையின் மூலம் திரு.க.தேவராசாவின் பிறந்த நாளான 10.03.2001 இன்று ஒரு பெருவிழா எடுத்து மணம்வீசவைத்துள்ளோம். இவ்விழா நடை பெறுவதற்கும். இம்மலர் மலர்வதற்கும், மணம்வீசுவதற்கும் பல பெரியோர்கள், நண்பர்கள், உறவினர்கள், மாணவமாணவிகள், அன்பு நெஞ்சங்கள் எமக்குப் பல வகைகளிலும் ஆக்கமும் ஊக்கமும் வழங்கின. அதன் பயனாக இன்று அவருக்குப் பொன்விழா நடைபெறுகிறது. இந்தவகையில் இவ்விழாவையும் மலர் வெளியீட்டையும் செய்வதற்கு உதவிய அனைவருக்கும் எமது நன்றியறிதலைச் செலுத்துகின்றோம்.

மேலும் இவ்விழாவின் நாயகனாக திரு.க.தேவராசாவும் அவரது குடும்பத்தினரும் எல்லா நலன்களும் பெற்று சகல சௌபாக்கியங்களுடனும் பல்லாண்டு வாழ எல்லாம் வல்ல பரராஜசேகரப்பிள்ளையாரின் பாதாரவிந்தங்களை வணங்கிப் பிராத்திக்கின்றோம்.

து. சிவராசா
பொருளாளர்

வை. ஸ்ரீஸ்கந்தவரோதயன்
செயலாளர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தேவா பொன்விழாச் சபையின் நிறைவுரையாக ...........

யாழ். பல்கலைக்கழக வணிகத்துறைத்தலைவர் உயர்திரு. க. தேவராஜா அவர்களுக்கு இணுவில் பொன்விழா சபை அமைத்த போது

இவ்விழாவில் தேவாமிர்தம் என்ற மலர் ஒன்று வெளியிடவேண்டும் என்ற விருப்பம் எமக்கு தோன்றியது. இவ்வளவு அழகாகவும், நேர்த்தியாகவும் மலர் வெளிவர எமக்கு துணை செய்தவர்களுக்கும் நாம் நன்றி கூறாமல் இருக்க முடியாது..

இம்மலர் சிறப்புறுவதற்கு ஆசிச்செய்திகளையும், வாழ்த்துரைகளையும், கட்டுரைகளையும், கவிதைகளையும் வழங்கி பொன்விழா நாயகரின் சமய, சமூக, கல்விப் பணிகளும் அவரது மனிதத்துவமும் பூரணமாக எல்லோர் மனதிலும் நிலைபெற உதவியோருக்கும் நன்றி கூறக்கடமைப் பட்டுள்ளோம்.

இம்மலரானது சிறப்புற அமைய வசதியாக மலரின் வெளிப்புற அட்டையையும், புகைப்படங்களையும், ஆக்கித்தந்த சிரேஷ்ட விரிவுரையாளர் திரு. இ. இரட்ணம் அவர்களும், கவர்ச்சிகரமாக இம்மலரை அச்சிட்டுத் தந்த கங்கை ஓவ்செற் கொம்பியூட்டர் பிறின்டேஸிற்கும் அட்டைப்படம் ஆக்கித்தந்த பிரபல ஓவியர் பா.றமேஸ்கண்ணா அவர்களுக்கும் எமது உளமாரந்த நன்றிகள்.

இப்பொன்விழா மலர் உருவாக உருவாக நிதியுதவி வழங்கிய K.R.S நிறுவன உரிமையார்களுக்கும் எமது இதயபூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நன்றி

****

திரு. ஞான. திருக்கேதீஸ்வரன்
அமைப்பாளர்
தேவா பொன்விழாச்சபை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேவா பொன் விழாச்சபை

"என் கடன் பணி செய்து கிடப்பதே"

யாழ். பல்கலைக்கழக வணிகத்துறைத் தலைவர்

## உயர் திரு க. தேவராஜா

அவர்களின்

# பொன்விழா

இடம் : இணுவில் ஸ்ரீ பரராஜசேகரப்பிள்ளையார் கோயில், கந்தையா அரங்கு, இணுவில்.

காலம் : 10.03.2001

தலைவர் : திரு. அ. பஞ்சலிங்கம் (தேவா பொன்விழாச்சபை)

## நிகழ்ச்சிகள்

2.30 - மங்கள விளக்கேற்றல்

2.35 - தேவாரம்

2.40 - வரவேற்புரை
திரு. இரா. அருட்செல்வம்
(அமைப்பாளர். தேவா பொன்விழாச்சபை)

ஆசியுரைகள்

2.45 - பிரம்ம ஸ்ரீ வை. சோமஸ்கந்தக் குருக்கள்

2.50 - ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரதேசிக ஞானசம்பந்த
-பரமாச்சாரிய சுவாமிகள்

2.55 - சிவத்தமிழ்ச் செல்வி. கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி

3.10 - வாழ்த்துப்பா
மகாவித்துவான் பிரம்மஸ்ரீ வீரமணி ஐயர்.

3.10 - வாழ்த்துரைகள்

பேராசிரியர் பொன். பாலசுந்தரம்பிள்ளை
(துணைவேந்தர், யாழ். பல்கலைக்கழகம்)

திரு. து. வைத்திலிங்கம்
(மேலதிக அரசாங்க அதிபர், யாழ்ப்பாணம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பேராசிரியர் அ. சண்முகதாஸ்**
(உயர் பட்டப்படிப்புக்கள் பீடாதிபதி, யாழ். பல்கலைக்கழகம்)

**பேராசிரியர் செ. பாலச்சந்திரன்**
(கலைப்பீடாதிபதி, யாழ். பல்கலைக்கழகம்)

**கலாநிதி சபா. ஜெயராஜா**
(தலைவர், நுண்கலைப்பீடம்)

**திரு ஆறு திருமுருகன்**
(ஆசிரியர், யாழ்/ஸ்கந்தவரோதயக் கல்லூரி, சுன்னாகம்)

**திரு க. கனகராசா**
(அதிபர் இறுவில் இந்துக்கல்லூரி)

**4.20** - மலர் வெளியீடு

**திரு. அ. பஞ்சலிங்கம்**
(தலைவர், தேவா பொன்விழாச் சபை)

**4. 25** - **மலர் பெறுதல் விழா நாயகர்**

**4.40** - மலர் வெளியீட்டுரை

**கலாநிதி க. குணராசா**
(முன்னாள் பதிவாளர் யாழ். பல்கலைக்கழகம்)

**4.50** - மலர் ஆசிரியர் உரை

**திரு. ஞானதிருக்கேதீஸ்வரன்.**
(அமைப்பாளர், தேவா பொன் விழாச் சபை)

**5.50** - விழா நாயகரைக் கௌரவித்தல்
**6.05** - ஏற்புரை ~ விழாநாயகர்
**6.15** - நன்றியுரை
**திரு வை. ஸ்ரீஸ்கந்தவரோதயன்,**
(செயலாளர், பொன்விழாச் சபை)

**"தேவா பொன் விழாக்காண வாரீர்"**
**உங்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.**
**தேவா பொன்விழாச் சபை.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொன்விழா சிறக்க வாழ்த்துகின்றோம்

# K.R.SIVALOGANATHAN & CO

No. 96, (6) STANLEY ROAD, JAFFNA
K.R.S

T.Phone : 3347

Dealers in:

Rice mill Machinery, Engines, Pumps, Motors, Generators, Tools, Etc.

க. இ. சிவலோகநாதன் அன் கோ.

இல. 96(6), ஸ்ரான்லி வீதி,

யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கங்கை ஓ(f)செற் பிறின்டேஸ்**
(பிறவுண் வீதிக்கு அருகாமையில்) நாவலர் றோட், யாழ்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org